தர்மசக்கரம்



துன்மதி ௵ பங்குனி மீ சக்கரம் 31 ஆரம் 3

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை, எலமனூர் ஸ்டேஷன், திருச்சி ஜில்லா.

DHARMA CHAKRAM

Statement about ownership and other particulars about Newspaper 'Dharma Chakram' to be published in the first issue every year after the last day of February.

FORM IV

(See Rule 8)

1.	Place of Publication :	Tirupparaitturai
2.	Periodicity of its Publication :	Monthly
3.	Printer's name :	Swami Sankarananda
	Nationality :	Indian
	Address :	Tapovanam Printing School, Tirupparaitturai-639 115, Tiruchi Dt.
4.	Publisher's name :	Swami Sankarananda
	Nationality :	Indian
	Address :	Sri Ramakrishna Tapovanam, Tirupparaitturai-639 115, Tiruchi Dt.
5.	Editor's name :	Swami Nithyananda
	Nationality :	Indian
	Address :	Sri Ramakrishna Tapovanam, Tirupparaitturai-639 115, Tiruchi Dt.
6.	Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital :	Sri Ramakrishna Tapovanam Tirupparaitturai-639 115, Tiruchi Dt.

I, Sankarananda, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date 14—3—82.

Sankarananda
Signature of the publisher.

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 31	துன்மதி ௵ பங்குனி ௴	ஆரம் 3

பொருளடக்கம்

சந்தா விவரம்

டிபாஸிட் சந்தா: ரூ. 100 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும் வரையில் மாதந்தோறும் தர்ம சக்கரம் பத்திரிகை தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தா செலுத்திப் புதுப்பிக்கவேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா: ரூ. 12 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா: மாத வருவாய் ரூ. 200 அல்லது ஆண்டு வருவாய் ரூ. 2400க்கும் குறைவாக உள்ளவர்கள் ஆண்டு சந்தா பன்னிரண்டு செலுத்த இயலாது இருந்தால் ரூபாய் எட்டு அனுப்பலாம். பாக்கி நான்கு ரூபாயைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவி நிதி'யினின்று ஈடுசெய்து கொள்கிறோம். தெய்விக விஷயமாதலால் ரூபாய் 12-00 செலுத்த இயலுகிறவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்தவேண்டாம்.

தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் உள்ள அரசாங்கப் பொது நூலகங்கள் அனைத்துக்கும் தர்ம சக்கரம் அன்பர்களின் உதவியால் தொடர்ந்து அனுப்பப்பெறுகிறது. நூலக நிர்வாகியிடம் கேட்டுப் பெற்றுப் படித்துப் பயனடையக்கோருகிறோம்.

உள்நாடு வருட சந்தா ரூ. 12-00 வெளிநாடு வருட சந்தா ரூ. 35-00

அந்தர்யோக விவரங்கள்

மதுரை ஜில்லா—தேனியில் 17—3—82 புதன்கிழமை

இடம்: ஸ்ரீ கணேச கந்தப்பெருமாள் ஆலயம், தியாகராஜநகர்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்
உணவு வசதி: மதிய உணவுக்கு ரூ.1-00செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

இராமநாதபுரம் ஜில்லா—சாத்தூரில் 21—3—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சாத்தூர் எட்வர்டு ஆண்கள் உயர்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—பாளையங்கோட்டையில் 28—3—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ M. மனக்காவலம்பிள்ளை கல்யாண மண்டபம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி பரானந்தர்

மதுரை ஜில்லா—திருவேடகத்தில் 4—4—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: விவேகானந்த கல்லூரி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி: நேரில் பகல் உணவுக்கு ரூ. 1-50ம் மாலை சிற்றுண்டிக்கு ரூ. 1-00ம் செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

தென்ஆர்காடு ஜில்லா—ஏந்தலில் 10—4—82 சனிக்கிழமை

இடம்: தொடக்கப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

வடஆர்காடு ஜில்லா—வேலூரில் 11—4—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீராமகிருஷ்ண ஆஸ்ரமம் (பாலாற்றின் தென்கரை பழைய பாலம் அருகில்)
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்
உணவுவசதி: மதிய உணவுக்கு ரூ. 1-50 செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

பாண்டிச்சேரியில் 11—4—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: வேதானந்தர் பொதுப்பணிக் கழகம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

மதுரை ஜில்லா—மேலூரில் 17—4—82 சனிக்கிழமை

இடம்: சபரிமலை ஐயப்பசுவாமி பிரார்த்தனை மண்டபம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 31	துன்மதி ௵ பங்குனி ௴	ஆரம் 3

பிரார்த்தனை

समस्त कर्मभोक्ता च कर्मोपकरणानि च ।
त्वमेव विष्णो सर्वाणि सर्वकर्मफलं च यत् ॥

— विष्णु पुराण

ஸமஸ்த கர்மபோக்தா ச கர்மோபகரணானி ச ।
த்வமேவ விஷ்ணோ ஸர்வாணி ஸர்வகர்மபலம் ச யத் ॥

— விஷ்ணுபுராணம்

கர்மங்களனைத்தையும் அனுபவிப்பவனாக இறைவா, நீ இருக்கின்றாய். அனுபவிப்பதற்கேற்ற உபகரணங்களாகவும் நீ இருக்கின்றாய். எம்பெருமானே, அனைத்துமாய் நீ இருக்கின்றாய்.

ஆரா அமுதே அரசே ஆனந்தவெள்ளப்
பேராறே மோனப் பெருக்கே பராபரமே.

— *தாயுமானவர்*

அருள் விருந்து

சிறிய செயலில் யாண்டும் எளிமை மிளிரும்.

அழகில் உண்மைக்கு ஒப்பானது வேறு ஏதுமில்லை.

இனிமையில் தூய்மைக்கு ஒப்பானது வேறு ஏதுமில்லை

சிந்தனைக்குரிய நல்ல விஷயத்துக்கு யாண்டும் பஞ்சமில்லை.

அறநெறி வழுவாத ஆட்சி முறையில் அமைதியே யாண்டும் நிலவுகிறது.

நாள்தோறும் மனிதன் மரணத்துக்குப் பக்கத்தில் போய்க்கொண்டேவிருக்கிறான்.

பரமன் பரம பிரேம சொரூபம். அவனை அடைய விரும்பும் நீ அன்பைப் பெருக்குவாயாக.

மற்றவர்களுக்கு மிக்கானாகத் தன்னைக் கருதிக்கொள்பவன் ஒருநாளும் சான்றோன் ஆகமாட்டான்.

நன்னெறி மக்களைத் துன்புறுத்துவதில்லை. ஆதலால் அது செயலற்றுக் கிடப்பது போன்று தென்படுகிறது.

ஏழை, எளியவர்களுக்கிடையில் தலைவனாக வருபவன் தானும் ஏழை எளியவனாகவே இருத்தல் வேண்டும்.

சுயநலத்தை ஒதுக்கித்தள்ளிவிட்டுத் தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ளுபவன் உலகத்துக்கு நல்ல தொண்டனாகிறான்.

ஓ துயரமே, வேண்டப்படாதவன் போன்று நீ எங்களிடம் வந்து எங்களை நல்வழியில் போகும்படி தட்டி எழுப்புகின்றாய்.

திருடனைத் திருடனாகக் குழந்தையொன்று பொருள்படுத்துவதில்லை. ஏனென்றால் திருட்டுத்தனம் அக்குழந்தை உள்ளத்தில் இல்லை.

கேட்டதின் விளைவாக மனிதனுடைய மனதானது தெளிவும் அமைதியும் உற்ற தடாகம் போன்று திருந்தியமையுமாயின் அவன் சான்றோன் ஆகிறான்.

துன்புறுத்தும் கனவினின்று நம்மைத் தட்டி எழுப்புவார் யாருமில்லை. ஏனென்றால் நம்போன்று மற்றவர்களும் தூங்கிக்கொண்டேவிருக்கின்றனர்.

பின்யோசனையில் கால்பங்காவது முன் யோசனையாக மனிதனுக்கு அமையுமாயின் அவன் வாழ்க்கையில் தோல்வியோ ஏமாற்றமோ அடைய மாட்டான்.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பக்தர்களோடு பரமஹம்சதேவர் தொடர்ந்து உரையாடிக்கொண்டிருக்கிறார்.

பல்து என்னும் பக்தனிடம், 'இடையிடையே நீ இங்கு வருவாயாக' என்று அவர் இயம்பினர். 'இயலுகிறபொழுதெல்லாம் நான் வருகிறேன்' என்று பல்து விடைவிடுத்தான்.

பரமஹம்சதேவர்: "கல்கத்தா நகருக்கு நான் போகும்போது நீ என்னை அங்கு வந்து சந்திப்பாயா?"

பல்து: "ஆம் ஐயனே, நான் அங்ஙனமே செய்ய முயலுகிறேன்."

பரமஹம்சதேவர்: "நீ கொடுக்கிற விடை உலக விஷயங்களில் எச்சரிக்கை படைத்திருப்பவனுடைய பாங்கில் அமைகிறது."

பல்து: "முயலுகிறேன் என்று சொல்லாது கட்டாயம் வருகிறேன் என்று இயம்பி விட்டு வரத் தவறினல் நான் பொய்யனவேன்."

பரமஹம்சதேவர் (மகேந்திரரைப் பார்த்து): "இந்த இளைஞர்கள் இடையிடையே சொன்ன சொல் தவறிப்போனல் நான் அதைப்பொருள் படுத்துவதில்லை. ஏனென்றல் அவர்கள் பெற்றோர்க்கும் மற்றவர்களுக்கும் கடமைப்பட்டவர்களாகவிருக்கிறர்கள். (ஹரிபாதரிடம்) மகேந்திர முகர்ஜி சில நாட்களாக இங்கு வரவில்லை. அதற்குக் காரணம் யாதோ?"

ஹரிபாதர்: "காரணம் யாதோ என்பது எனக்குத் தெரியவில்லை."

மகேந்திரர் (புன்னகை பூத்தவராக): "அவர் ஞானயோகத்தை அனுஷ்டிக்கின்றர்."

பரமஹம்சதேவர்: "அல்ல, அதுவன்று விஷயம். அன்றெரு நாள் பிரஹ்லாதனுடைய வாழ்க்கை வரலாற்றை நாடகத்தில் காண நான் விரும்பினேன். நாடகக் கொட்டகைக்குத் தன் வண்டியில் என்னை அனுப்பிவைப்பதாக அவன் வாக்குக் கொடுத்திருந்தான். கொடுத்த வாக்கின்படி அவன் வண்டி அனுப்பவில்லை. இங்கு வாராதிருப்பதற்குக் காரணம் அதுவாக இருக்கலாம்."

மகேந்திரர்: "ஒரு நாள் மகிமசக்கரவர்த்தியைச் சந்தித்து அவரோடு உரையாடிக்கொண்டிருந்தேன். இந்த மகேந்திரமுகர்ஜி அவரைக் காணுதல் பொருட்டு இடையிடையே ஆங்குச் செல்கிறர் என்பதை நான் அறிய வருகிறேன்."

பரமஹம்சதேவர்: "ஆனல் மகிமசக்கரவர்த்தியோ பக்திமார்க்கத்திலும் நம்பிக்கை வைத்திருக்கிறர். பக்தியைப்பற்றி அவர் இடையிடையேஉரையாடுகிறர். பக்திப்பாடல்களைப் படனம் பண்ணுவதில் அவர் விருப்பம்கொண்டிருக்கிறர். உள்ளன்போடு பகவானிடத்துப் பக்தி பூணுகிறவனுக்கு வேறு தவம் புரிய வேண்டிய அவசியமில்லை அல்லவா?"

மகேந்திரர் (புன்னகை பூத்தவராக): "மகிமசக்கரவர்த்தி அப்படி இயம்புவதற்கு ஏற்ற காரணம் இருக்கிறதென்று சொல்லுகிறர். அக்கருத்தைத் தாங்கள் அவரிடம் ஊட்டியிருப்பதால் தான் அவர் அப்படிப் பேசுகிறர் என்பதாம்."

கிரீஷ்சந்திரகோஷ் பக்தர்களைப் பார்த்த பொழுதெல்லாம் அவர்களுடன் பரமஹம்சதேவரின் பெருமையைப் பற்றியே உரையாடுவது அவருடைய போக்காக இருந்து வந்தது.

ஹரிபாதர்: "கிரீஷ் சந்திரகோஷருக்கு இந்நாட்களில் தெய்விகக் காட்சிகள் பல தென்படுகின்றன. இங்கு வந்து பரமஹம்சதேவரோடு இணக்கம் பூண்டுவிட்டுத் தம் வீட்டுக்கு அவர் திரும்பிப்போய் ஆழ்ந்த தியானத்திலும் தெய்விக எண்ணங்களிலும் மூழ்கியவராக இருக்கின்றர். ஏதேதோ காட்சிகள் அவருக்கு வந்து அமைகின்றன."

பரமஹம்சதேவர்: "ஒருவேளை அது உண்மையாக இருக்கலாம். கங்கைக்கரைக்கு வருகிற ஒருவன் படகுகளையும், கப்பல்களையும் இன்னும் ஏதேதோ பொருட்களையும் காண்கின்றன் அல்லவா?"

ஹரிபாதர்: "கிரீஷ் சந்திரகோஷ் இங்ஙனம் இயம்புகிறர்: 'இனிமேல் நான் என்னுடைய சொந்த அலுவல்களையே கவனித்து வருவேன். காலையிலே கடிகாரம் மணி அடித்தவுடன் பேனவையும் மைக்கூட்டையும் வைத்துக்

கொண்டு நாள்தோறும் நிகழ்ந்து வருபவை களைக் குறித்து எழுதுவேன்'—இப்படி அவர் தீர்மானிக்கிறார். தீர்மானிப்பது உண்மை; ஆனால் அத்தீர்மானத்தை அவர் நடைமுறைக் குக் கொண்டுவருவதில்லை. நாங்கள் அவரைப் பார்க்கச் சென்றவுடனே அவர் தங்களைப்பற் றியே பேச ஆரம்பிக்கிறார். வண்டி ஒன்று அமர்த்தி அதில் நரேந்திரனை இங்கே அனுப்பி வைக்கும்படி நீங்கள் அவரைக் கேட்டீர்கள். 'நரேனுக்காக வண்டியொன்று அமர்த்துவேன்' என்று அவர் இயம்பினார்.''

மாலை ஐந்து மணிக்கு இளைய நரேந்திரன் தன் வீட்டிற்குத் திரும்ப ஆயத்தமானான். வட கிழக்குத் திண்ணையில் அவனுக்கருகில்நின்று கொண்டு பரமஹம்சதேவர் ஏதேதோ விஷ யங்களை அவனுக்கு எடுத்துப் புகட்டினார். அதன்பிறகு அந்த இளைஞன் பரமஹம்சதேவ ருடைய பாதங்களைத் தொட்டு வணங்கிவிட் டுப் புறப்பட்டுப் போனான். அதன் பிறகு பக்தர்கள் பலபேர் அதே பாங்கில் விடை பெற்றுச் சென்றார்கள்.

பரமஹம்சதேவர் தமது அறையிலே சிறிய கட்டிலின்மீது அமர்ந்துகொண்டு மோகனன் என்பவனோடு உரையாடிக் கொண்டிருந்தார். மோகனனுடைய மனைவி தன் புத்திரனை இழந்துவிட்டதின் காரணமாகப் பெருந்துயரத் தில் ஆழ்ந்திருந்தாள். பைத்தியம் பிடித்தவள் போன்று அவள் நடந்துகொண்டாள். சில வேளைகளில் அழவும், வேறு சில வேளைகளில் சிரிக்கவும் அவள் செய்து வந்தாள். மற்றும் சில வேளைகளில் அவள் தாரை தாரையாகக் கண்ணீர் கொட்டி அழுதாள். ஆயினும் எப் பொழுதெல்லாம் அவள் பரமஹம்சதேவ ருடைய முன்னிலைக்கு அழைத்துவரப்பட் டாளோ அப்பொழுதெல்லாம் அவள் சிறிது ஆறுதல் அடையலானாள். அவர் முன்னிலை யில் அவள் சாந்தமாகவும் அமர்ந்திருந்தாள்.

பரமஹம்சதேவர் : "இப்பொழுது உன் மனைவி எப்படி இருக்கிறாள்?''

மோகனன் : "எப்பொழுதெல்லாம் அவள் இங்கே அழைத்துவரப்படுகிறாளோ அப் பொழுதெல்லாம் அவள் அமைதியுற்று இருக் கிறாள். வீட்டிற்குத் திரும்பிப் போனதும் அவளுடைய நிலைமை அறவே மாறிவிடுகிறது. சில வேளைகளில் கொடூரம் மிக வாய்ந்தவளாக அவள் நடந்துகொள்கிறாள். அன்றொரு நாள் தன்னைத் தானே மாய்த்துக்கொள்ள அவள் முயன்றாள்.''

இச்செய்திகளை யெல்லாம் கேள்வியுற்ற பரமஹம்சதேவர் சிறிது கவலைக்கு ஆளானவர் போன்று தென்பட்டார். பணிவோடு மோக னன் பகர்ந்ததாவது, 'கிருபை கூர்ந்து அவ ளுக்குப் புத்தி புகட்டும் பாங்கில் சில வார்த்தை கள் கூறுங்கள்.'

பரமஹம்சதேவர்: "சமையல் வேலையிலே அவளை ஈடுபடுத்தாதே. தீயின் வெப்பம் அவளிடத்து மூளையிலே கொதிப்பை உண்டு பண்ணும். அவளைத் தன்னந்தனியளாக இருக்க விடாதே. யாரோ சிலர் அவளுடன் எப்பொழு தும் கூடியிருத்தல் வேண்டும். அதன் விளை வாகத் தனக்குற்ற துயரத்தை அவள் படிப்படி யாக மறந்துவிடுவாள்.''

இப்பொழுது மாலை நேரம். கோயில்களிலே மாலைத் தீபாராதனைக்கு ஏற்பாடுகள் ஆய்க் கொண்டிருந்தன. பரமஹம்ச தேவருடைய அறையிலே தீபம் ஏற்றிவைக்கப்பட்டது. தூபமும் போடப்பட்டது. சிறிய கட்டிலின் மீது அமர்ந்திருந்தபடியே பரமஹம்சதேவர் அன்னை பராசக்திக்கு வந்தனை வழிபாடு செய் தார். அன்னையின் திருநாமத்தை இனிய குரலிலே அவர் ஓதினார். அப்பொழுது தரை யிலே அமர்ந்திருந்த மகேந்திரரைத் தவிரவேறு யாரும் அவ்வறையில் இல்லை.

சிறிய கட்டிலினின்று பரமஹம்சதேவர் எழுந்திருந்தார். அவரைத் தொடர்ந்து மகேந் திரரும் தரையினின்று எழுந்து நின்றார். அந்த அறையிலே அமைக்கப்பெற்றிருந்த மேற்குப் பக்கக் கதவையும் வடக்குப் பக்கக் கதவையும் மூடும்படி பரமஹம்சதேவர் மகேந்திரரை வேண்டினார். மகேந்திரரும் அவருடைய ஆணையைநிறைவேற்றினார். இப்பொழுது பரம ஹம்சதேவருக்கருகில் மகேந்திரர் திண்ணை யின் மேல் நின்று கொண்டிருந்தார். காளி கோயிலுக்குப் போக வேண்டுமென்று பரம ஹம்சதேவர் தெரிவித்தார். மகேந்திரருடைய கரத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டு அவர் கோயிலின் முற்றத்திற்குக் கீழே இறங்கி வந் தார். கீழே வந்தவர் பாபுராமனை அழைத்து

வரும்படி மகேந்திரருக்கு உத்தரவு பிறப்பித்து விட்டு முற்றத்திலே அமர்ந்தார். பிறகு மகேந்திரரையும் பாபுராமனையும் தம்மோடு அழைத்துக்கொண்டு அன்னையின் தரிசனத்திற்கு அவர் கோயிலுக்குச் சென்றார்.

தரிசனம் பண்ணியான பிறகு அன்னையின் நாமத்தை ஓதிக்கொண்டு முற்றத்தைக் கடந்து தம் அறைக்குப் பரமஹம்சதேவர் திரும்பி வந்து சேர்ந்தார்.

அறைக்குத் திரும்பி வந்த பரமஹம்சதேவர் சிறிய கட்டிலின்மீது அமர்ந்தார். அந்நாட்களில் அவருடைய மனது ஓர் அலாதியான உன்னத நிலையில் இருந்து வந்தது. உலோகம் எதையும் தீண்டுவது அந்நாட்களில் அவருக்குச் சாத்தியப்படவில்லை. அவர் தம்மைப் பற்றித் தெரிவித்துக் கொண்டதாவது: "பரிக்ரஹத்தைப்பற்றிய எண்ணங்களையெல்லாம் அன்னை பராசக்தி என்னுடைய உள்ளத்திலிருந்து துடைத்துத் தள்ளி வருகிறாள் போன்று எனக்குத் தென்படுகின்றது."

பரிக்ரஹம் என்பது இவ்வுலகைப் பற்றிய உடைமைகளாம். விசுவத்துக்கே நாதனாயிருக்கின்ற சிவனார் உடைமை ஏதுமில்லாதவராக இருந்து வருகிறார். அத்தகைய மனநிலை பரமஹம்சதேவருக்கும் வருவதாயிற்று. அதன் விளைவாக அவர் பித்தளை, வெண்கலம் போன்ற தட்டுக்களினின்று உணவு எதையும் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. வாழையிலையினின்று அவர் உணவு ஏற்று வந்தார். சிறிய மட்பாண்டங்களினின்று அவர் நீர் அருந்தி வந்தார். உலோகத்தில் அமைந்திருந்த ஜாடி எதையும் தீண்ட அவருக்கு இயலவில்லை. அக்காரணத்தைமுன்னிட்டே மட்பாண்டங்கள் சிலவற்றைத் தமது உபயோகத்துக்குக் கொண்டு வந்து தரவேண்டுமென்று பக்தர்கள் சிலரிடம் அவர் பணித்திருந்தார். உலோகத்தில் அமைந்திருந்த தட்டையோ, பாத்திரத்தையோ, ஜாடியையோ தீண்டினால் குளவிகொட்டுவது போன்று அவருடைய விரல்களில் வலியுண்டாயிற்று.

பரமஹம்சதேவருடைய உபயோகத்திற்காகவென்று பிரசன்னன் என்னும் பக்தர் ஒருவர் சில மட்பாண்டங்களைக்கொண்டு வந்தார். ஆனால் அவைகள் வண்ணத்தில் மிகச் சிறியவைகளாய் இருந்தன. அவைகளைப் பார்த்த பரமஹம்சதேவர் புன்னகையோடு பகர்ந்ததாவது: "இந்த அண்டா சட்டிகள் பார்ப்பதற்கு மிக அழகாய் இருக்கின்றன; ஆனால் பயன்படுத்த உபயோகப்படமாட்டா. இவைகளைக்கொண்டு வந்திருப்பவனே மிக நல்ல சிறுவன். ஒருநாள் என் முன்னிலையில் இவன் அணிந்திருந்த உடைகளையெல்லாம் நீக்கிவிடும்படி நான் சொன்னேன். இவனும் அங்ஙனமே செய்தான். நிர்வாணமாகஎன் முன்னிலையில் இவன் நின்றான். பச்சைக் குழந்தை என்றால் இவன் தான் பச்சைக் குழந்தை!"

பல்கேரியா என்னும் ஊரைச் சேர்ந்திருக்கும் தாரகன் என்னும் யுவன் நண்பன் ஒருவனைத் தன்னோடு அழைத்துக்கொண்டு தக்ஷிணேசுவரம் வந்துசேர்ந்தான். வந்தவர்களிருவரும் பரமஹம்சதேவர் முன்னிலையில் வீழ்ந்து வணங்கினார்கள். அப்போது பரமஹம்சதேவர் சிறிய கட்டிலின் மீது அமர்ந்திருந்தார். அறையினுள் எண்ணெய்த் தீபமொன்று எரிந்து கொண்டிருந்தது. பக்தர்கள் சிலர் தரையின் மீது அமர்ந்திருந்தனர்.

தாரகன் என்னும் இளைஞனுக்குவயது சுமார் இருபது இருக்கும். அவன் மணம் புரிந்திருந்தான். பரமஹம்சதேவரிடம் அவன் அடிக்கடி வந்துகொண்டிருந்ததை அவனுடைய உற்றார் உறவினர் ஆமோதிக்கவில்லை. கல்கத்தாவிலே பவ்பஜார் என்னும் பகுதியிலே தன் குடும்பத்துக்குச் சொந்தமாயிருந்த வீட்டிலே அவன் வசித்து வந்தான். பரமஹம்சதேவர் அவனிடம் அன்பு மிகப் பூண்டிருந்தார்.

தாரகனுடைய உடல் நலனைக் குறித்துப் பரமஹம்சதேவர் விசாரித்தார். அவனோடு அவர் நெடுநேரம் உரையாடினார். இப்பொழுது தாரகன் புறப்பட்டுப் போக ஆயத்தமானான். சில விஷயங்களைப்பற்றி எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்று பரமஹம்சதேவர் அவனுக்குப் புத்திமதி கூறினார்.

பரமஹம்சதேவர்: "இளையோய், காமத்தையும் காசு ஆசையையும் ஒதுக்கித் தள்ளிவிடு. காம வலையில் நீ ஒரு தடவை அகப்பட்டுக்கொள்ளுவாயாகில் பிறகு நீ மீளமாட்டாய். நதிச் சுழலுக்கு நிகர் காமம். அதில் வீழ்ந்தவன் தப்பிவர முடியாது.

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

6-19. பைங்கூழ் வினைதான் படுசாவி ஆகஎமக்கு
எங்கோன் கிரணவெயில் எய்துநாள்
[எந்நாளோ.

பைங்கூழ்–இளம்பயிர்.

நெற்பயிருக்குத் துவக்கத்திலிருந்து கதிர் முற்றும் வரையில் நீர் தேவையாயிருக்கிறது. சிலவேளைகளில் பயிர் செழித்து வளருகின்ற பொழுது வாய்க்கால் நீரோ, மழை நீரோ இல்லாது இடைஞ்சல் வருகிறது. அதனால் தடைப்படுகின்ற நெற்பயிரானது சாவியாக மாறுகிறது. அங்ஙனம் சாவியாகப் போன பிறகு மீண்டும் நீர் அகப்பட்டாலும் அதிலின்று விளைவு ஏதும் அகப்படமாட்டாது. முற்றிலும் பதராய்ப் போய்விடும். இது நெல் சாகுபடியைப்பற்றிய உண்மையாம். பழவினைப் பயனோடு இவ்வுண்மை இணைத்து இக்கண்ணியில் பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு ஜீவாத்மனையும் பிறவிப் பெருங்கடலில் ஆழ்த்துவது வினையின் பாங்கு ஆகும். ஆசைக்கு வசப்பட்டிருக்கிற ஜீவாத்மன் வினையைப் பெருக்கிக்கொண்டே போகிறான். ஒவ்வொரு பிறவியிலும் அவன் வளர்க்கிற ஆசைகளைப் பூர்த்தி பண்ணுவதற்கு ஜன்மங்கள் போதமாட்டா. அஞ்ஞானத்தில் உழலும் ஜீவாத்மாக்களுடைய நிலைமை இத்தகையதாம். இக்கேட்டினின்று ஆத்மசாதகன் தப்பித்துக்கொள்வதற்கான உபாயம் இக்கண்ணியில் வந்து அமைகிறது. வாழ்வு என்னும் சாகுபடி நிகழ்கின்றபொழுது பழவினைப் பயன்கள் ஏராளமாகத் தலையெடுக்கின்றன. வளருகிற நெற்பயிருக்கு இடையிலே நீர் கிடைக்காது போனால் அது வெறும் சாவியாகக் குன்றிப் போகிறது. அதற்குமேல் சூரியவெப்பமும் கடுமையாக வீசுமாகில் சாவி படுசாவியாகப் பாழடைகிறது. அதேபோன்று ஆத்ம சாதகன் புதிய ஆசை எதற்கும் அடிமைப்படலாகாது. இறைவனுடைய அருள் நாட்டமாக உலக ஆசை திருந்தியமையவேண்டும். சாதகனிடத்து அருள் நாட்டம் ஓங்குதற்கேற்பப் பழவினைகள் என்னும் களைகள் காய ஆரம்பிக்கின்றன. நெற்பயிர் நீரில்லாது படுசாவி ஆவதுபோன்று, இறைவனுடைய திருவருள் நாட்டம் என்னும் சூரியனுடைய வெப்பம் களைகளாக முளைத்து, வைத்துள்ள பழவினைகளையெல்லாம் பட்டுப்போகும்படி செய்கிறது. எனவே வினையின் கொடுமையை அகற்றுதற்கு அருள்நாட்டம் ஒன்றே உபாயமாகிறது. வயலெங்கும் நிறைந்துள்ள சாவியையும், களைகளையும் சூரிய வெப்பம் அழித்துத்தள்ளுவதற்கு நிகராக இறைவனுடைய அருள் நாட்டம் ஒன்றே வினையின் கொடுமையைப் பாழாக்குவதற்கு உற்ற உபாயமாம். அத்தகைய அருள் நாட்டம் ஆத்ம சாதகனுக்கு அதிவிரைவில் வந்து வாய்க்கவேண்டும் என்பதே இக் கண்ணியில் அடங்கியுள்ள கருத்தாம்.

6-20. குறித்தவிதம் ஆதியால் கூடும்வினை எல்லாம்
வறுத்தவித்தாம் வண்ணம்அருள் வந்திடுநாள்
[எந்நாளோ.

பழவினைகள் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன. பிராரப்த கர்மம், ஆகாமிய கர்மம், சஞ்சித கர்மம் என இந்த மூன்று பகுதிகளும் பகரப்படுகின்றன. பிராரப்த கர்மத்தின் விளைவாக இப்பொழுது மனிதன் எடுத்திருக்கும் சரீரம் ஓடிக் கொண்டிருக்கிறது. பிராரப்தம் ஓயுமிடத்து உடல் மடிந்து பட்டுப் போகிறது. இதை அடுத்து வரும் சரீரத்துக்கு விதையாக இருப்பது ஆகாமிய கர்மம். தொடர்ந்து ஓய்வில்லாது வந்துகொண்டிருக்கும் பிறவிகளுக்கு ஏற்ற வித்தாக அமைந்திருப்பது சஞ்சித கர்மம். விதைகள் அனைத்தையும் நெருப்பிலிட்டு வறுத்தால் பின்பு அவைகள் முளைக்கமாட்டா. அதே பாங்கில் ஆத்ம சாதகனிடத்து ஞானாக்னி முட்டப் பெறுமாகில் அது வினைகள் அனைத்தையும் வறுத்துத் தள்ளுகிறது. பிராரப்த கர்மம் மட்டும் இப்பொழுது சாதகன் எடுத்துள்ள உடலை ஒட்டிக்கொண்டிருக்கிறது. அப்படியிருந்தும் அந்த வினையில் ஞானி கட்டுப்பட்டவனாகமாட்டான். ஆதலால் எண்ணரிய பிறவிகளுக்கு வித்தாகவிருக்கும் இந்த மூன்று வித வினைகள் வெந்து போகும்படி செய்ய வல்லது ஞானாக்னி. அத்தகைய ஞானாக்னி அருள்

நாட்டம் உடையவருக்கே வந்து வாய்க்கிறது. அதைத் துணையாகக்கொண்டு அதிவிரைவில் பிறவிப் பிணியை நான் போக்கிவிட வேண்டும் என்பது இக்கண்ணியில் அடங்கியுள்ள கருத்தாம்.

6-21. சஞ்சிதமே ஆதி சரக்குஆன முச்சேறும்
வெந்தபொரி ஆகஅருள் மேவுநாள் எந்நாளோ.

மழைக் காலத்தில் பூமியின் பெரும்பகுதி சேறு படிந்ததாக மாறி அமைகிறது. சேற்றுக்குள்ளே வண்டி வாகனங்கள் செல்லமாட்டா. நடந்து செல்லுகிறவர்களும் சில இடங்களில் சேற்றில் அகப்பட்டுக் கொண்டு வேதனைக்கு ஆளாகிறார்கள். அத்தகைய சகதிக்கு நிகர் சஞ்சித கர்மம். மழைக்காலம் ஓய்ந்துபோய்ச் சூரிய வெப்பத்தால் பூமி உலர்ந்து போகுமிடத்து ஆபத்து ஏதுமின்றி மனிதன் அதன் மீது நடந்துபோகலாம். வண்டி வாகனங்களைச் செலுத்துவதற்கும் தகுதியுடையதாக அந்த நிலம் திருந்தியமைகிறது. அந்தச் சேற்றுக்கு நிகராகச் சஞ்சித கர்மம் என்னும் சேற்றினின்று தப்பித்துக் கொள்ளுதற்கு ஆத்ம சாதகன் இறைவனுடைய திருவருள் என்னும் வெப்பத்தை நாடியிருத்தல் வேண்டும்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்

என்பது மறைமொழி. திருவருள் சகாயம் என்னும் வெப்பத்தைச் சார்ந்திருக்கிறவர்கள் வினையின் கொடுமையினின்று விடுபடுகின்றனர். அத்தகைய பேருதவியை யாண்டும் நான் சார்ந்திருப்பேனாக என்பது இக்கண்ணியின் கருத்து.

6-22. தேகம்முதல் நான்காத் திரண்டுஒன்றாய் நின்று [இலகும்
மோகம்மிகு மாயை முடியுநாள் எந்நாளோ.

நான்கு-தேகம், கரணம், புவனம், போகம் ஆகியவைகளாம். மோகம் மிகு மாயை-மயக்கத்தை உண்டுபண்ணுகின்ற பிரபஞ்சம்.

உடலும், அதிலுள்ள இந்திரியங்களும் பிரபஞ்சத்திலிருந்து வந்தவைகளாம். அதே பிரபஞ்சத்தில் ஜீவாத்மாவானவன் பஞ்சேந்திரியங்கள்மூலமாக நுகர்கின்ற இந்திரியார்த்தங்களும் அமைகின்றன. இங்ஙனம் அமைந்துள்ள பிரபஞ்சத்தைத் தன்மயமாய்க் கருதுவது ஜீவாத்மன் பூண்டுள்ள மயக்கமாம். பாம்பும் அதன் மேல்சட்டையும் எங்ஙனம் வெவ்வேறாக இருக்கின்றனவோ அங்ஙனம் ஆத்மாவும் உடலும் வெவ்வேறாக இருப்பதை ஜீவாத்மன் அறிந்துகொள்வதில்லை. உடலைத் தன் மயமாகவே அவன் எண்ணிக்கொள்கிறான். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐந்து தன்மாத்திரைகளை அனுபவிப்பதில் அவன் பற்றுமிக வைத்திருக்கிறான். இவைகள் வாயிலாகப் பிரகிருதியின் பாங்கை அறிந்துகொள்வது ஒருபுறம் இருக்க மனிதனை மரணத்துக்கு ஆளாக்கும் பாங்கும் இந்த ஐந்து இந்திரியங்களில் அமைந்திருக்கிறது. சுகபோகத்தில் பற்று வைத்திருக்கிற மனிதன் இந்த ஐந்து தன்மாத்திரைகளிடத்தும் வரம்பு கடந்த பற்றுதல் வைத்திருக்கிறான். உண்ணும்பொழுது நாவின்மூலமாக உணவை அவன் முற்றிலும் தன்மயமாக எண்ணுகிறான். அதே விதத்தில் கண்கொண்டு பார்க்கும் கவர்ச்சிகரமான வடிவங்களில் தன்னை அவன் இழந்துவிடுகிறான். ஓசையும், ஊறும், மணமும் அங்ஙனமே அவனை அடிமைப்படுத்துகின்றன. அங்ஙனம் அவனுடைய அழிவுக்கு ஏதுவாயிருக்கிற பொறிவாயில் ஐந்தையும் அவிந்து போனதற்கு நிகராக அவைகளை ஒதுக்கி வைத்தாலொழிய ஆத்மசாதகன் பரஞானத்திற்குத் தகுதியுடையவன் ஆகமாட்டான்.

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்"

என்பது மறைமொழி. கருவி கரணங்களைத் தனக்குப் புறம்பானவைகள் எனப்பாகுபடுத்தினால் ஒழிய மனிதனுக்கு விமோசனம் இல்லை. நாவை அறவே வெல்லுதல் யோகசாதனத்திற்கு முதல்படியாகிறது. பிறகு காமத்தை அறவே ஒதுக்கித்தள்ள சாதகன் கடமைப்பட்டிருக்கின்றான். இந்த இரண்டு இந்திரியங்களையும் அறவே வென்றுவிட்டால் ஏனைய மூன்று இந்திரியங்களையும் வெல்லுவது மிகச் சுலபம். இந்திரியங்களை ஈசுவரவழிபாட்டில் ஈடுபடுத்துவதன்மூலம் அவைகளைச் சுலபமாக வென்றுவிடலாம். தான் ஆத்ம சொரூபம் என்னும் ஞானம் அதைத் தொடர்ந்து தானாக வருகிறது. அடுத்தபடியாக பரஞானம் வாய்ப்பதும் மிகச்சுலபம். இதுவே இக்கண்ணியில் அமைந்துள்ள கருத்தாகும்.

இயேசுவின் மலை உபதேச விளக்கம்

(சுவாமி பிரபவானந்தரின் கருத்தைத் தழுவியது)

37. பிறரைத் தரம் பார்க்காதே. பிறரைத் தரம் பார்ப்பதன் மூலம் உன்னுடைய தரம் விளங்குகிறது. பிறரை என்ன பாங்குடன் மதிப்புப் போடுகின்றாயோ அதே பாங்குடன் நீயும் மதிக்கப்படுகின்றாய். பிறருக்கு நீ எந்த அளவோடு வழங்குகின்றாயோ அதே அளவு உனக்கும் வழங்கப்படும்.

உன்னிடத்திலுள்ள குற்றங்களை மறைத்து வைத்துக்கொண்டு அயலாரிடத்தில் குற்றங்களைக் கண்டு பிடிக்க நீ ஏன் முந்துகின்றாய்? நீ குற்றங்கள் நிறைந்தவனாகவிருந்துகொண்டு பிறருடைய குற்றங்களைக் களைந்து விடுவதாக நீ ஏன் பறை சாற்றுகின்றாய்?

பெரும்பாலர் வம்பு பேச்சுப் பேசிக்கொண்டிருப்பதிலும், பிறரைக் குறை கூறுவதிலும், பிறரைத் தரம் பார்ப்பதிலும் காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கின்றார்கள். அது அவர்களுடைய இயல்பு. அப்படி அவர்கள் பேசுவதைக் கேட்பதற்கு மிகவும் ரசமாகவிருக்கும். வீண் பேச்சிலும், பிறரைத் தரம் பார்ப்பதிலும் நம் அகந்தை வளர்வதால் அது நமக்கு இன்பகரமாக இருக்கிறது. "பிறரிடமுள்ள குறை என்னிடம் இல்லை. நான் அவர்களைக் காட்டிலும் எவ்வளவோ மேலானவன்" என்ற எண்ணம் பிறரைக் குறை கூறும்பொழுது நம் உள்ளத்தில் எழுகிறது. பிறரிடம் நாம் என்ன குறை காண்கின்றோமோ அது நம்முடைய அழுக்கு மனதில் இடம் பெற்றிருக்கிறது. பிறருடைய மனதில் என்ன இருக்கிறது என்பதை அவர்களுடைய உள்ளத்தில் எத்தனை பேர் புகுந்து பார்த்திருக்கின்றோம்? நம்முடைய உள்ளத்தில் என்ன இருக்கிறது என்பதே நமக்குத் தெரியாது. இந்த நிலையில் இருந்துகொண்டு பிறரைக் குற்றம் காண்பதில் நாம் ஆவலுடையவர்களாக விருக்கின்றோம்.

வம்பு பேச்சுக் குற்றம் இல்லாதது போன்று தோன்றும். ஆனால் அது மக்களிடத்தில் பெரும் கேட்டை விளைவிக்கின்றது. வம்பு பேச்சில் ஈடுபட்டிருப்பவர்கள் பெரும் கேடு அடைகிறார்கள் என்பதில் ஐயமில்லை. பிறரிடம் குறை காண்பதில் மூழ்கியிருப்பவர்கள் தங்களிடம் குறையை வளர்ப்பவர்களாகிறார்கள். ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் நல்ல சம்ஸ்காரங்களும், கெட்ட சம்ஸ்காரங்களும் இடம் பெற்றிருக்கின்றன. பிறரிடமுள்ள குறைகளை நாம் பார்த்துக்கொண்டே போவோமானால் நம் மனதின் ஆழ்ப்பகுதியில் மறைந்திருக்கும் தீய எண்ணங்கள் உணர்வுப் பகுதிக்கு வந்து செயல்பட ஆரம்பிக்கின்றன. அதற்கு மாறாகப் பிறரிடம் நல்லவற்றைக்காண் போமானால்நம் மனதின் ஆழ்ப்பகுதியில் மறைந்திருக்கும் நல்லியல்புகள் வலிவுடையவைகளாகின்றன. தந்நலனை முன்னிட்டும், பிறர் நலனை முன்னிட்டும் ஆத்ம சாதகன் யாரிடமும் குறைகாணாத மனப்பான்மையை வளர்க்க வேண்டும். "உங்களுக்கு மன அமைதி வேண்டுமென்றால் பிறரிடம் குறைகாணாதீர்கள். உலகம் முழுவதையும் உங்களுக்குச் சொந்தமாக்கக் கற்றுக்கொள்ளுங்கள். உங்களுக்கு யாரும் வேற்றார் அல்லர்." இங்ஙனம் ஸ்ரீ சாரதாதேவியார் மக்களுக்குக் கூறியுள்ளார்.

சாதாரண ஈ ஒருசமயம் மலத்தில் அமரும். மற்றொரு சமயம் உணவுப்பொருளில் அமரும். ஆனால் தேன் ஈ தேனில்தான் அமரும்; மலத்தில் அமராது. தேன் ஈ போன்று நாம் நல்லதையே நாடவேண்டும். பிறரிடம் நல்லதைக் காணும் இயல்பு நம்மிடம் வளர்ந்து வரும் பொழுது நாம் சாதனையில் முன்னேறி வருவதற்கு அது அறிகுறியாகிறது. எல்லா உயிர்களிடத்திலும் அன்பும், அனுதாபமும் உள்ளத்தில் உண்டாகும்பொழுது உள்ளம் பண்பட்டு வருவதாகிறது. சான்றோர்கள் பிறரிடமுள்ள நல்லதையே காண்கின்றார்கள். பிறரிடம் ஒரு சிறு நலன் இருந்தாலும் அது பெரு நலனாகச் சான்றோர்க்குத் தென்படுகிறது. பிறரிடம் அந்த நலன் ஓங்குவதற்குச் சான்றோர்கள் உதவியாக இருக்கின்றார்கள். பிறரிடமுள்ள சிறு நலனை அவர்களுக்கு அடிக்கடி ஞாபகமூட்டி அந்நலத்தை அவர்களிடம் வளர்க்கின்றார்கள். ஈசனுடைய அருள் கிட்டும்பொழுது நொடிப்பொழுதில் பாபங்களிலிருந்தும் மனிதன் விடுபடுகின்றான். இவ்வுண்மையைச் சான்றோர்கள் நன்கு அறிகின்றார்கள்.

சுவாமி பிரம்மானந்தர் கூறுவதாவது: " பஞ்சுக் குவியல் ஒன்றில் ஒரு சிறு நெருப்புப் பொறி விழுந்தாலும் அது முழுதும் எரிந்து விடுகிறது. அங்ஙனம் ஈசனுடைய அருள், மலை போன்ற பாபங்களையும் துடைத்துத் தள்ளி விடுகிறது. இன்றைக்குப் பாபியாக இருப்பவன் நாளைக்கு ரிஷியாக ஈசனுடைய அருளால் மாறி அமைவான்." ஆகையால் பாபி என்று நாம் யாரையும் ஒதுக்கிவைக்க வேண்டியதில்லை.

பிறரிடம் குறை இருக்கும்பொழுது அது நமக்குத் தென்படும். அக்குறையிலிருந்து விடுபடுவதற்கு வேண்டிய வழிமுறையை நம் வாழ்க்கையின் மூலம் காட்டித்தரவேண்டும். நம் மனதில் குறை இருக்குமளவு பிறரிடத்தில் நாம் குறை காணுதிருக்கமுடியாது. ஆனல் அதை நாம் பெரிதுபடுத்திக் கொண்டிருக்கக் கூடாது. அக்குறை நம்மிடமில்லாதிருக்கு மாறு பார்த்துக் கொள்வதோடு பிறரை அதற்காக வெறுக்காதிருக்கவேண்டும். அவரிடமுள்ள குறை நம்மிடம் இல்லையே என்று நாம் பெருமை பாராட்டிக்கொண்டிருக்கக் கூடாது. அவரிடமில்லாத குறை நம்மிடம் இருக்கும். நம்மிடமுள்ள குறை என்ன என்று அறிந்து அதைப்போக்க முயலவேண்டும். இக்கருத்தை இவ்வுபதேசம் விளக்குகிறது.

38. நீ வஞ்சகக்காரனுக இராதே. உன் மனத்தகத்துள்ள குற்றங்களை முதலில் களைந்துவிடு. பிறகு பிறரிடத்துள்ள குற்றங்களைக் களைவது உனக்குச் சாத்தியம்.

நம்மிடத்திலுள்ள குற்றங்களை நாம் காணுத வரையில் நம்மை நாம் ஏமாற்றிக்கொள்பவர்களாகின்றோம். நம்மிடத்தில் குற்றங்கள் இருக்கும் வரையில் நாம் பலஹீனர்களாக இருக்கின்றோம். நம்மிடத்திலுள்ள குற்றங்களை நாம் பொறுத்துக்கொள்கின்றோம். ஆனல் பிறரிடமுள்ள குற்றங்களை நாம் பொறுத்துக் கொள்ள முடியாதவர்களாகவிருக்கின்றோம். முதலில் நம் உள்ளத்தை நாம் தூயதாக்க வேண்டும். அப்பொழுது பிறரிடம் நமக்கு உண்மையான அன்பு உண்டாகின்றது. அன்புடன் நாம் பிறரைக் கண்டிக்கும்பொழுது அது நல்ல பலனைத் தரும். பிறருடைய நலத்தில் நாம் கருத்துடையவர்களாகவிருந்து பிறரிடம் நாம் கடுமையாக நடந்துகொண்டால் அது அவர்களைத் திருத்தி அமைக்கும். சான்றோர்கள் சிலசமயம் நம்மைக் கோபித்துக்கொள்வார்கள். நம்மிடமுள்ள குற்றத்துக்காக அவர்கள் கடுமையாக நம்மை ஏசுவார்கள். ஆனல் அவையெல்லாம் நம்முடைய நலனுக்காகவென்றே அமையும். குழந்தை மண்ணைத் தின்கிறபொழுது தாய் குழந்தைக்கு அடிகொடுத்து அச் செயலைத் தடைசெய்கின்றாள். குழந்தை அழுது கொண்டு தாயிடமே ஓடுகிறது. அங்ஙனம் சான்றோர்கள் நம்மைத் திட்டினலும் நம் உள்ளம் அவர்களிடமே சென்றுகொண்டிருக்கும். நம்முடைய நலத்தில் அவர்கள் நாட்டம்கொண்டிருக்கின்றார்கள். அது அன்பின் அறிகுறியாகும். ஆலய வழிபாட்டுக்கு வரும் அன்பர்கள் ஆண்டவன் சிந்தனையிலேயே மூழ்கியிருக்க வேண்டுமென்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் விரும்பினர். வழிபாட்டுக்கு வருபவர்களுடைய உள்ளம் தெய்வ சிந்தனையிலேயே இருக்கிறதா என்பதையும் கவனித்துக்கொள்வார். ஒரு சமயம் தக்ஷிணேசுவரக் கோயிலைக் கட்டிய ராசமணி அம்மையார் வழிபாட்டுக்கு வந்திருந்தார். அவர் வழிபாடு செய்துகொண்டிருப்பதற்கிடையில் அவர் மனம் நீதிமன்றத்திலுள்ள வழக்கொன்றைப்பற்றி நினைத்தது. ராசமணி அம்மையாருடைய உள்ளம் தெய்வச் சிந்தனையிலிருந்து உலகச் சிந்தனை என்னும் கீழ்மைக்குப் போகிறது என்பதை அறிந்த ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவ்வம்மையாரின் கன்னத்தில் அறைந்து அவரைத் திருத்தியமைத்தார். ராணி ராசமணி அம்மையாரின் முன்னேற்றத்தில் கருத்து வைத்து ஸ்ரீ ராமகிருஷ்ணர் இச் செயலைச் செய்ததனல் அவ்வம்மையாரும் அத் தண்டனையை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டார். அன்புச் செயலுக்கு அனைவரும் வசப்படுகின்றனர். பிறரிடம் அத்தகைய அன்பு நம் உள்ளத்தில் உரு எடுத்து வரும்வரையில் பிறர் மீது ஆதிக்கம் செலுத்த நமக்கு உரிமையில்லை. முதலில் நம் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி எல்லா உயிர்களையும் நேசிக்கும் தன்மையைப் பெறவேண்டும். அப்படி நம்மைத் திருத்தி அமைப்பதன் மூலம் பிறரைத் திருத்தி அமைக்கின்றோம். இதுவே இவ்வுபதேசத்தின் கருத்தாகும்.

இந்தியா உலகுக்களிக்கும் செய்தி

(சுவாமி விவேகானந்தர்)

மேனாட்டு மக்களுக்கு வீரத்தைப் புகட்டியுள்ளேன். தாய் நாட்டு மக்களாகிய உங்களுக்கு அதைக் காட்டிலும் வீரம் மிகுந்த செய்தியைப் புகட்டுகிறேன். பண்டைய இந்தியாவின் செய்தியை நவீன மேனாட்டினர்களுக்கு என்னால் இயன்றவரை எடுத்துக் கூறியுள்ளேன். அது வெற்றிகரமாக முடிந்ததோ முடியவில்லையோ என்பதை எதிர்காலம் காட்டும். எதிர்காலத்தில் அது வலிவு பெறப்போகிறது என்பதினுடைய அறிகுறி இலேசாக இப்பொழுது வெளியாகிக்கொண்டிருக்கிறது. நாளுக்கு நாள் அச்செய்தி வலிவுபெற்று வருகிறது. எதிர்கால இந்தியா மேன்மையடையப்போகிறது என்பதைத் தற்கால இந்தியா அறிந்துகொள்ளவேண்டிய விஷயமாகும்.

வாழ்வை மேன்மைப்படுத்தும் பல அற்புதமான நிறுவனங்களை நான் நேரில் பார்த்திருக்கின்றேன். வலிமை, சக்தி ஆகியவற்றை வெளிப்படுத்தும் செயல்களையும், பழக்க வழக்கங்களையும் நான் நேரில் பார்த்தேன். பல தரப்பட்ட மக்களுக்கிடையே இந்த நல்ல அறிகுறிகளையும் கண்டேன். நாட்டில் பழக்க வழக்கங்களும் பண்பாடும் ஆற்றலும் கலாச்சாரமும் வேறுபட்டிருப்பதற்கிடையில் இன்பத்தையும் துன்பத்தையும், ஆற்றலையும் ஆற்றலின்மையையும் தருவது மனித இதயமே என்பதை அறிந்துகொள்ளவேண்டும்.

நன்மையும் தீமையும் எங்கும் இருக்கின்றன. அவற்றின் சமநிலை சீர்தூக்கும் கோல் போல் அமைந்திருப்பது விசித்திரத்துக்குரியதாகும். இவற்றிற்கெல்லாம் மேலாக மனிதனுடைய ஆன்மீக ஒளி இருக்கிறது. ஆன்மீக ஒளியை அறிய விரும்புபவர்க்கு அது உண்மையை உள்ளபடி விளக்கிக்காட்டத் தவறுவதில்லை. ஆண்களும் பெண்களும் எல்லாச் சமுதாயத்திலும் இருக்கிறார்கள். "ஒவ்வொரு நாட்டிலும் பிராமணர்களும் சூத்திரர்களும் வாழ்ந்து வருகிறார்கள்" என்று அசோகச் சக்கரவர்த்தி பகர்ந்துள்ளார்.

தன்னலமற்ற தூய ஆத்மாக்கள் காட்டும் பேரன்பைக்காட்டி மேனாட்டு மக்கள் என்னை வரவேற்றார்கள். நான் அவர்களுக்கு என் உளங்கனிந்த நன்றியைச் செலுத்துகின்றேன். ஆனால் என்னுடைய தாய் நாட்டுக்கே என்னுடைய வாழ்வு முழுவதையும் ஒப்படைக்கின்றேன். எனக்கு இன்னும் ஓராயிரம் பிறவிகள் இருக்குமானால் அவ்வெல்லாப் பிறவிகளிலும் என் தோழர்களே! என் நாட்டு மக்களே! என் வாழ்வின் ஒவ்வொரு கணமும் உங்களுடைய பணிக்கென்றே அர்ப்பணிக்கப்படும்.

நான் பெற்றிருக்கும் உடல், மனம், ஆன்மா ஆகிய யாவும் இந்த நாட்டுக்கென்றே உரியன ஆகும். நான் அடைந்த வெற்றி ஏதாவது இருக்குமானால் அதில் உண்டான புகழ் உங்களைச் சார்ந்ததாகும். அந்தப்புகழ் எனக்குரியதன்று. பலஹீனமும் தோல்வியும் சுயநலத்திலிருந்து உண்டானவைகள். இப்பாடத்தை இந்த நாட்டில் வாழ்கின்ற மனிதன் அறிந்துகொள்ளாவிட்டால் அக்குறைபாடு அவனைச் சார்ந்ததாகும்.

இது எத்தகைய நாடு தெரியுமா? இங்குப் பல சான்றோர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். அவர்கள் உயர்ந்த எண்ணங்களை எண்ணி இருக்கின்றார்கள். அவர்களுடைய எண்ணங்களும் செயல்களும் விலங்கு நிலையில் உள்ளவர்களையும் தெய்விக நிலைக்கு எடுத்துச்செல்லும் ஆற்றல் உடையவைகளாக இருக்கின்றன. வரலாற்றுக் காலந்தொட்டு இத்தகைய சான்றோர்கள் இங்கு வாழ்ந்திருக்கின்றார்கள். இந்த நாட்டிலிருக்கும் ஒவ்வொரு மனிதனும் இந்த நாட்டைச் சார்ந்தவனானாலும் சரி, அயல் நாட்டைச் சார்ந்தவனானாலும் சரி ஆன்மீக உணர்வைஉணராமல் இருக்கமாட்டான். இந்த நாட்டில் ஆன்மீக உணர்வு பெறாதவன் மிருக நிலைக்கு இறங்கிய கயவனாக இருக்கவேண்டும். ஆன்மீக அலை இங்கு வீசும் காற்றில் நிறைந்திருக்கிறது. இந்நாடு தத்துவத்துக்கும் அறநெறிக்கும் ஆன்மீகத்துக்கும் உறைவிடமான புனித பூமியாகும். உலக ஆசை மனிதனிடத்தில் விலங்கியல்பை வளர்க்கிறது. உலக ஆசையுள்ள மனிதன் வாழ்க்கையில் ஓயாது போராடிக்கொண்டிருக்கின்றான். அப்போராட்டத்தில்

உழன்றுகொண்டிருக்கும் மனிதனுக்கு அமைதியைத் தரும் நாடு இந்நாடாகும். அசுர இயல்பை அழித்துத் தள்ளிவிட்டுப் பிறப்பு இறப்பற்ற பேரின்ப நிலையான அழியாத தன் நிஜ சொரூபமாகிய ஆத்ம சொருபத்தை உணர்வதற்கான ஆன்மீகப் பயிற்சியளிக்கும் நாடு இதுவாகும். இன்பம் அனுபவித்த நாடும் இதுவே; துன்பம் அனுபவித்த நாடும் இதுவே. இவ்வுலகம் பொருளற்றது என்றும், கானல் நீர் போன்று பொய்த்தோற்றம் உடையதென்றும் முதன் முதல் கண்டு பிடித்ததும் இந்நாடே. இளமையின் மோகத்தையும், ஆடம்பர வாழ்வின் போகத்தையும், புகழின் உச்சவரம்பையும், அதிகாரத்தின் ஆற்றலையும் ஒதுக்கித்தள்ளிவிட்டு அவற்றின் தளையிலிருந்து விடுபட்டதும் இந்நாடே. மக்கள் சமுதாயத்தில் இருந்துவரும் சுகத்தையும் துக்கத்தையும், பலத்தையும் பலமின்மையையும், செல்வத்தையும் வறுமையையும், மகிழ்ச்சியையும் துயரத்தையும், சிரிப்பையும் கண்ணீரையும், வாழ்வையும் சாவையும் நாம் காண்கின்றோம். இவைகளைக் கடந்து நிரந்தரமான அமைதியையும், சாந்தத்தையும் அளிக்கும் தியாகத்தைப் போற்றுவதும் இந்நாடே. வாழ்வைப் பற்றியும் சாவைப் பற்றியும் ஏற்படும் பிரச்னைகளை ஆராய்ந்ததும் இந்நாடே. வாழ்வு துன்பத்தில் போய் முடிகிறது என்று சிந்தித்துப் பார்த்ததும் இந்நாடே. வாழ்விலுள்ள பிரச்னைக்குத் தீர்வு கண்டதும் இந்நாடே. இவ்வாழ்வு நிலையற்றதென்றும், இதில் கேடுதான் இருக்கிறதென்றும், உண்மையான வாழ்வின் நிழல்போன்றது என்றும் கண்டு பிடித்ததும் இந்நாடே. சமயத்தை அனுஷ்டானத்துக்குக்கொண்டு வந்ததும் இந்நாடே. சமயத்தின் உண்மைத் தத்துவத்தை அறிந்ததும் இந்நாடே. மற்ற நாட்டு மக்கள் எளியவர்களின் உரிமைகளைப்பறித்துத் தாங்கள் இன்பம் துய்ப்பதில் வெறிகொண்டு மூழ்கியிருக்கின்றனர்கள். ஆனால் இந்நாட்டிலுள்ள ஆண்களும் பெண்களும் ஆத்மானுபூதி பெறுவதில் உறுதியுடன் இருக்கின்றனர்கள். இந்நாட்டில்தான் மனித உள்ளம் விரிவடைந்திருக்கிறது. 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம், எல்லா உயிர்களும் இன்புற்று வாழட்டும்.' இந்த விரிந்த உள்ளத்தை இந்நாட்டு மக்களிடையேதான் காணலாம். மக்களிடத்து மட்டுமன்றி பறவைகள், மிருகங்கள், தாவரங்கள் ஆகிய அனைத்தினிடத்தும் அன்பு காட்டும் விரிந்த உள்ளம் உடைய மக்களை இந்நாட்டில்தான் காணலாம். ஜடப்பொருள் நிலையிலிருந்து பேரறிவு நிலையிலிருக்கும் எல்லா உயிர்களையும் எண்ணிப் பார்க்கும் மனிதர்களை இந்நாட்டில்தான் காணலாம். எல்லா உயிர்களின் நலத்திலும் வளர்ச்சியிலும் கருத்துக்கொண்ட உள்ளத்தையும் புழு ஒன்று அகண்டாகார நிலையாகிய முக்தி நிலையை அடைவதற்கு உதவ எத்தனை பிறப்புக்கள் எடுத்து வாழ்வதற்கும் சம்மதம் என்று கூறிய எல்லை கடந்த அன்புள்ளத்தையும் வேற்றுமைகளுக்கிடையில் ஒற்றுமையைக் கண்ட உள்ளத்தையும் இந்நாட்டில்தான்காணலாம். அனைத்தும் ஈசன் சொரூபம் என்று அவைகளிடத்து அன்புசெலுத்தும் இதயத்தை இந்நாட்டில் தான் காணலாம்.

இந்தியா கீழ்நிலையை அடைந்துவிட்டதென்று பலர் கூறக் கேட்கின்றோம். அக்கூற்றில் நானும் ஒருகாலத்தில் நம்பிக்கை வைத்திருந்தேன். ஆனால் இன்று என்சொந்த அனுபவத்தைக்கொண்டு பேசுகின்றேன். இப்பொழுது என் கண்களை மறைத்திருந்த மனக்கற்பனை ஒழிந்துவிட்டது. உண்மையை உள்ளவாறு அறிவதற்குத் தடையாயிருந்த மனக்குறை நீங்கியது. மற்ற நாடுகளைப்பற்றிக் கற்பனையின் மூலமாக நான் தீட்டியிருந்த வண்ண ஓவியங்கள் மங்கிப்போய்விட்டன. அந்நாடுகளை நான் நேரில் பார்த்தபொழுது தான் அவைகளைப்பற்றி நான் கொண்டிருந்த கருத்துக்களெல்லாம் ஒளியிழந்து போயின என்பதையும், நான் செய்த தவற்றையும் பணிவுடன் ஒத்துக்கொள்கிறேன். சான்றோரைக் கொண்டுள்ள புனித நாடே! நீ ஒருபொழுதும் கீழ்நிலை அடைய மாட்டாய். ஆட்சி முறைகள் அழிந்தன; சிதறடிக்கப்பட்டன. அதிகாரம் என்ற பந்து ஒருவர் கையிலிருந்து மற்றொருவர் கைக்கு மாறிக்கொண்டே சென்றது. இந்தியாவில் அவ்வாட்சிகளும் அதிகாரங்களும் ஒரு சிலருடைய வாழ்க்கையைத் தான் தொட்டன. (தொடரும்)

ஆலய வழிபாடும் ஆறுமுகக் கடவுளும்

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே, நல்லாரோடு கூடியிருப்பதுவும் நன்றே" என்னும் கோட்பாட்டிற்கிணங்க ஆலயத்தில் அருளாளர் கூட்டத்தோடு நாம் கூடியிருக்கிறோம். ஆலயத்தில் ஏற்கனவே இருக்கும் அருட்சக்தியானது நல்லார் கூட்டத்தால் மேலும் ஓங்கப் பெறுகிறது. சான்றோரும், பக்தர்களும் ஆலயத்தில் கூடி வேறுசிந்தனையின்றி ஒருமைப்பாட்டோடு தெய்வத்தை நினைப்பதால் ஆலயத்தில் மேலும் அருட்சக்தி ஓங்கும்.

ஆலயத்தில் நடைபெறும் விழாவானது புத்தமதக் கோட்பாடான

புத்தம் சரணம் கச்சாமி
தர்மம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி

என்பதை ஒத்திருக்கின்றது. புத்தம் என்றால் ஞானம். சங்கம் என்றால் மக்களின் கூட்டம். தர்மம் என்றால் சரியான வாழ்க்கை முறை. ஆலயத்தில் கூடும் பக்தர்கள் கூட்டம் புத்த மதத்தின் சங்கத்திற்கு நிகராகிறது. வழிபாட்டு முறை தர்மத்துக்கு நிகராகிறது. இறைவனது ஆலயம் புத்தம் என்ற ஞானத்தை விளக்குகிறது. ஞானத்தை அடைய மக்களின் கூட்டம் என்ற சங்கம் தேவை. அம்மக்களின் கூட்டம் ஞானத்தைத் தர்ம நெறியில் அடையவேண்டும் என்பது இதன் விளக்கமாம். ஞானத்தையடைய பக்தர்கள், அருளாளர்கள் பாடிவைத்துள்ள இறைவனைப் பற்றிய பாக்களைப் பாடி அவனை உணர்ந்துகொள்ள முயல்கின்றனர். மேலான லட்சியமாகிய இறைவனை அடைவதற்கு ஆலயத்துக்கு வருபவர்கள் பந்த பாசத்தை முன்னிட்டோ, வேறு காரணங்களினாலோ வந்த வழியைத் திரும்பிப்பாராமல் இறைவனைப்பற்றிய சிந்தனையிலேயே கருத்தை வைத்தவர்களாக வரவேண்டும்.

மகாபாரதத்தில் ஒரு நிகழ்ச்சி. பாண்டவர்கள் திரௌபதியுடன் பாரத யுத்தம் முடிந்தபின் சொர்க்கத்தை நோக்கிச்சென்றுகொண்டிருந்தனர். ஹிமாசல மலைத்தொடரிலுள்ள மணல் வெளியை அவர்கள் எட்டியதும் திரௌபதி தரையில் விழ்ந்து மடிந்துபோனாள். பீமன் தருமனிடம் வினவினான். "கோது இல்லா அக்குலமகள் விழ்ந்து மடிந்துபோனதற்குக் காரணம் யாதோ?" எனக் கேட்டான். "திரௌபதி ஐவரிடத்தும் அன்பு வைத்திருந்தாள். எனினும் அர்ஜுனனை அதிகம் அவள் விரும்பினாள். அந்தப் பாரபட்சத்தை முன்னிட்டு அவள் வீழ்ந்தாள்"என்று தருமன் விடை பகர்ந்தான். விடைகொடுத்த தருமன் திரும்பிப் பார்க்காமலேயே நடந்து கொண்டிருந்தான். சிறிது நேரத்திற்குப் பிறகு சகாதேவன் வீழ்ந்து மடிந்துபோனான். "அவன் வீழ்ச்சிக்குக் காரணம் யாதோ?" என்று பீமன் கேட்டான். சாஸ்திர ஞானத்தில் தனக்கு நிகர் எவருமில்லை என்ற கல்விச் செருக்கு சகாதேவனிடத்திருந்தது. ஆகையினால் அவன் வீழ்ந்தான் எனறு இயம்பிய தருமன் திரும்பிப்பாராமலேயே மேல் நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். அடுத்த படியாக நகுலன் வீழ்ந்து உயிர் துறந்தான். தன் மேனியழகைப் பற்றிய செருக்கு அவனிடத்திருந்ததே அவன் வீழ்ந்ததற்குக் காரணம் என்று விளக்கம் வந்தது. இப்பொழுதும் தருமன் திரும்பிப் பார்க்கவில்லை. அடுத்து அர்ஜுனன் வீழ்ந்து மாண்டு போனான். அதற்குக் காரணம் கேட்கப்பட்டது. நிகழ்ந்து போன மகாபாரதப் போரில் தான் ஒருவனே எதிரிகள் அனைவரையும் அழிக்கவேண்டும் என்னும் எண்ணம் படைத்திருந்தான். அந்த வீராப்பினால் அவன் அழிந்தான். சிறிது நேரத்திற்குப்பின் "அண்ணலே! எனக்கு அழிவு காலம் வந்து விட்டது. நான் என்ன குற்றம் செய்தேன்?" என்று பீமன் கேட்டான். திரும்பிப் பார்க்காமலேயே தருமன் சொன்னான். "உன்னுடைய உடல் திட்பத்தைக் குறித்து நீ படைத்திருக்கும் செருக்கு உன் வீழ்ச்சிக்குக் காரணம்." அதைக் கேட்டதும் பீமனும் உயிர் நீத்தான். தருமன் மட்டும் தனியாக மேல் நோக்கிப் போய்க்கொண்டிருந்தான். இந்திரனுடைய விமானம் சுவர்க்கத்திலிருந்து தருமனின் முன்னிலையில் வந்து இறங்கியது. விமானத்தில் ஏறும்படி விண்ணுலகத்திலிருந்து வந்த இந்திரன் தருமனை வேண்டினான். தருமன், "வழியில் வீழ்ந்து மடிந்த என் சகோதரர்களும்,

திரௌபதியும் என்ன கதி அடைந்தார்களோ அதை அறியுமுன் சுவர்க்கத்திற்கு வரமாட்டேன்" என்ருன். இந்திரன், "வீழ்ந்தவர்களை நீ ஏன் திருப்பிப் பார்க்கவில்லை?" என்ருன். "திருப்பிப் பார்த்திருந்தால் நானும் வீழ்ந்திருப்பேன்" என்ருன் தருமன். ஆக, மேலான லட்சியத்தை நோக்கிச் செல்லும் ஒருவன் எக்காரணம் கொண்டும் திரும்பிப் பார்க்கலாகாது என்பதை மகாபாரதத்தில் வரும் இந்நிகழ்ச்சி விளக்குகிறது. திரும்பிப்பார்ப்பவர்கள் முன்னேற்றம் அடையமாட்டார்கள். இது பெருவாழ்விற்கான கோட்பாடு ஆகும்.

இதையொட்டிய மற்ருெரு நிகழ்ச்சியும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது ஆகும். கிழவி ஒருத்தி பத்ரிநாத்தை நோக்கிச்சென்று கொண்டிருந்தாள். காய்ச்சலினல் மிகவும் சிரமப்பட்டாள். அப்போது சில ஸாதுக்கள், "அம்மா! கீழே இறங்கிச் சற்று ஓய்வு எடுத்துக்கொண்டு உடல் சொஸ்தமானதும் மேலே போகலாமே?" என்று கூறினர்கள். அதற்கு அக்கிழவி, "ஸாதுக்களாகிய உங்கள் வாயிலிருந்து இவ்வார்த்தை வரலாமா? மேல்நோக்கிச் செல்லும் என்னைக் கீழ்நோக்கிச் செல்லச் சொல்வது தகுமா?" என்று கூறி மேலும் தன் பயணத்தைத் தொடர்ந்தாள். அது போன்று ஆலய வழிபாட்டுக்கு வருகின்றவர்கள் கடவுள் சிந்தனை என்னும் மேலாம் சிந்தனையிலேயே வரவேண்டும். கடவுள் சிந்தனை வலுத்து வர வரக் கீழான எண்ணங்கள் நம்மை விட்டுத் தாமாக விலகி விடுகின்றன.

கோயிலில் பரவசமாகப் பாடிப் பரமன் சந்நிதியில் வழிபாடு செய்யவேண்டும். மனம் பரமனை மட்டுமே நினைக்கவேண்டும். வேறு பொருள்களைப் பற்றிய சிந்தனையை அறவே ஒழிக்க வேண்டும். ஸ்ரீ ராமகிருஷ்ணர் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சி ஒன்று ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. தக்ஷிணேசுவர ஆலயத்தை அமைத்துத் தந்த ராணி ராசமணி அம்மையார் ஒரு முறை ஆலயத்துக்கு வந்திருந்தார். பூஜை முடிந்தது. அம்பிகை மீது ஸ்தோத்திரங்கள் பாடவேண்டும் என்று ஸ்ரீ ராமகிருஷ்ணரை வேண்டினர்கள். அப்படி அவர் பாடிக்கொண்டிருந்தபோது அந்த அம்மையாரின் மனது நீதிமன்றத்திலிருந்த ஒரு வழக்கைப் பற்றி நினைத்துக்கொண்டிருந்தது. "இந்த இடத்திலுமா உலக வியவகாரம்?" என்று அதட்டி அந்த அம்மையாரின் கன்னத்தில் ஸ்ரீராமகிருஷ்ணர் ஓங்கி அறைந்தார். இதைக்கண்ட சிப்பந்திகள் இவரைத் தாக்க வந்தனர். ஆனல் அவ்வம்மையார் அவர்களைத் தடுத்து அத்தண்டனையை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார். இறைவன் சந்நிதியில் பக்தர்கள் உள்ளம் இறைவனைப் பற்றியே நினைக்க வேண்டும் என்பதை இதிலிருந்து நாம் சற்றுக்கொள்ள வேண்டும். பொருளைப் பெற வங்கிக்குச் (Bank) செல்லுகிருேம். அது போன்று அருளைப் பெற ஆலயத்துக்குப் போகின்ருேம். உலகப்பற்றை வளர்க்கும் எதையும் இறைவனிடம் கேட்கக்கூடாது. ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கும் சுவாமி விவேகானந்தருக்கும் இடையே நடந்த சம்பாஷணை ஒன்றை ஈண்டு நினைவு கூறலாம். நரேந்திரர் தமக்குற்ற வறுமையைக் களையத் தமக்காகக் காளியிடம் பிரார்த்திக்க வேண்டும் என்று பரமஹம்சரை வேண்டினர். "நீயே தேவியின் சந்நிதி சென்று அவ்வரம் வேண்டிக்கொள்" என்று பரமஹம்சர் கூறினர். சிஷ்யரும் அவ்வாறே செய்யத் தீர்மானித்துக் காளியிடம் சென்ருர். ஆனல் அப்பிரார்த்தனையைச் செய்யாது திரும்பி வந்தார். 'நடந்தது என்ன?' என்று பரமஹம்சர் வினவ, 'ஞானம், பக்தி, வைராக்கியங்களே எனக்கு வேண்டுமென்று அம்பாளிடம் வேண்டி வந்தேன்" என்று விவேகானந்தர் விடையிறுத்தார். "உனக்குற்ற வறுமையைப் போக்குமாறு ஏன் கேட்கவில்லை? மறுபடியும் போய் அவ்வரம் வேண்டி வா" என்ருர் அண்ணல். நரேந்திரர் இரண்டாம் முறையும் தாம் கேட்க எண்ணியதை மறந்துவிட்டு ஞானம், பக்தி, வைராக்கியங்களே தருமாறு வேண்டித் திரும்பினர். மீண்டும் ராமகிருஷ்ணர் அவரைக் கோயிலுக்குள் அனுப்பவே உள்ளே சென்ற நரேந்திரர் தம்முடைய வறுமை நீங்க வேண்டும் என்று வரம்கேட்கவிரும்பவில்லை; மீண்டும் ஞானம், பக்தி, வைராக்கியங்களே வரமாக வேண்டித் தேவியின்சந்நிதியினின்று வெளியே வந்தார். "உன்னல் கேட்க முடியாத அவ்வரத்தை நான் எப்படி அம்பிகையிடம் கேட்பேன்?" என்ருர் ஸ்ரீராமகிருஷ்ணர். இந்நிகழ்ச்

சியினின்று நாம் தெரிந்து கொள்ளும் உண்மை என்ன? உலகப் பொருள்களைக் குறித்து இறைவனிடம் யாசிக்காமல் அவர் அருளை மட்டுமே நாம் அவரிடம் கேட்க வேண்டும்.

முருகக்கடவுளுக்கு உள்ள ஆறுமுகங்களின் தத்துவத்தை நாம் அறிந்துகொள்ள வேண்டும். முருகன் சிவகுமாரன் ஆகிறான். நாம் எல்லாரும் சிவகுமாரர்கள். சிங்கத்தின் வல்லமையை அறிய சிங்கத்தால்தான் இயலும். சிறு நாயால் இயலுமா? அதுபோன்று சிவகுமாரனாகிய முருகனது மகிமைகளை அறிய நாம் சிவகுமாரர்களாக மாறவேண்டும். அப்போதுதான் முருகனின் மகிமையை நாம் உணர முடியும். வால்மீகி என்ற ஒரு கொள்ளைக்காரன் ராம நாமத்தின் துணைகொண்டு ரிஷியாக உயர்ந்தது போன்று முருகநாமத்தின் துணைகொண்டு நாம் முருகன் மயம் ஆக முயல்வோம். ராம நாமத்தின் துணைகொண்டு அனுமன் கடல் கடந்ததைப்போன்று முருக நாமத்தின் துணைகொண்டுநாம் பிறவிக் கடலைக் கடப்போம். முருகன் நாமத்தை நாம் சொல்லச் சொல்ல நாம் தெய்வசொருபம் ஆகின்றோம். நம் எல்லாரிடமும் சிவம் உள்ளது. ஆனால் அது செத்தநிலையில் உள்ளது. அதைத் தட்டி எழுப்ப வேண்டும். செத்தநிலையிலுள்ள சிவத்தைத் தட்டி எழுப்பி உயிர்ப்பிக்கச் செய்வதைத்தான் "செத்தாரை மீட்டும் இங்கே எழுப்பியிடல் வேண்டும்" என்று இராமலிங்கர் கூறினார். ஞானத்துறையில் செத்துக்கிடக்கும் மக்களை எழுப்பவேண்டும் என்பது இதன் பொருள். ஞானத்துறையில் செத்துக்கிடக்கும் நம்மைத் தட்டியெழுப்பி ஞானம் வழங்க வல்லவன்ஞான பண்டிதனான முருகப்பெருமான் ஆவான்.

முருகன் ஆறு முகங்களுடன் காட்சி தருகின்றான். ஆறுமுகங்களும் ஆறு பொறிகளுக்கு நிகராகின்றன. பஞ்சேந்திரியங்கள் ஐந்துடன் மனதையும் சேர்த்தால் பொறிகள் ஆறு ஆகின்றன. மனதும் ஓர் இந்திரியமே.

'இந்திரியாணாம் மனச்சாஸ்மி' என்கிறார் கண்ணன். இந்திரியங்களில் நான் மனமாக இருக்கிறேன் என்பது அதன்பொருள். அருணகிரிநாதரின் பாடல் ஒன்றின்மூலம் இந்திரியங்கள் செய்யவேண்டிய செயலை விளக்கலாம்.

"ஏறு மயில் ஏறி விளையாடு முகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசு முகம் ஒன்றே
கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதிஅருணாசலம் அமர்ந்த பெருமாளே."

நம் கண்கள் ஏறுமயில்மீது வரும் முருகப் பெருமானைக் காணவேண்டும். நாம் கண் குளிரப் பார்ப்பதற்காகத் தெய்வத்தை அலங்கரிக்கிறோம். தீபாராதனைமூலம் கண் என்னும் பொறியைக் கடவுள் வழிபாட்டில் ஈடுபடுத்துகிறோம். நம் கண்கள் கடவுளைக் காண்பதற்காகவென்றே படைக்கப்பட்டுள்ளன.

"கண்காள் காண்மின்களோ
கடல் நஞ்சுண்ட கண்டன் தன்னை"

என்பது அப்பர் வாக்கு.

கண் என்னும் பொறி நமக்கு ஒரு முகமாக அமைந்திருப்பதை 'ஏறு மயில் ஏறி விளையாடு முகம் ஒன்றே' என்ற அடி விளக்குகிறது.

நமது வாய் இறைவனைப்பற்றியே பேச வேண்டும். பயனற்றவைகளைப் பேசுதல் கூடாது. 'பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே' என்பது ஆன்றோர் வாக்கு. 'நலம் தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன் நாராயணா என்னும் நாமம்' என்று ஆழ்வார் ஒருவர் பாடியுள்ளார். வாயின் பயன் கடவுளை வாழ்த்துவதே என்பதை அவைகள் விளக்குகின்றன.

வாயே வாழ்த்து கண்டாய்-மத
யானையுரி போர்த்துப்
பேய்வாழ் காட்டகத்தாடும் பிரான்தன்னை
வாயே வாழ்த்து கண்டாய்'

என்று சிவனடியார் கூறியது வாயின் பயனை வலியுறுத்துவதற்கேயாம். வாய் நமக்கு மற்றொரு முகமாக அமைந்திருக்கிறது என்பதை 'ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே' என்ற அடி விளக்குகிறது.

'கூறுமடியார்கள் வினை தீர்க்குமுகம் ஒன்றே.' நம்முடைய காதின்பயன் இறைவனதுபுகழைக் கேட்டல். காதின் மூலம் பிறர் துன்பத்தைக் கேட்டு அதைத் துடைக்கவேண்டும். அடியார்களின் புலம்பலைக் கேட்டுத் தீர்க்க முருகன்

ஒரு முகத்தைக் கொண்டிருக்கிருன். மக்கள் துயர் கேட்கவும் இறைவன் பெருமையைக் கேட்கவும் செவியைப் பயன்படுத்தவேண்டும்.

செவிகாள் கேண்மின்களோ-சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பிரான் திறமெப்போதுஞ்
செவிகாள் கேண்மின்களோ

என்பது அப்பர் வாக்கு. காது நமக்கு மற்ருெரு முகமாக அமைந்திருக்கிறது என்பதை "கூறுமடியார்கள் வினை தீர்க்கு முகம் ஒன்றே" என்ற அடி விளக்குகிறது.

நம் மூக்கின் மூலம் சாம்பிராணி, ஊதுபத்தி முதலியதெய்வீகசம்பந்தமான வாசனைகளையே நுகர வேண்டும். ராம பாணம் பரசுராமரது அகங்காரத்தைத் துடைத்துத் தள்ளியது போன்று காமவாசனையை முருகனது வேல் ஒழித்துக்கட்டவல்லது. முருகனுடைய வேல் குன்று வடிவத்தில் இருந்த அரக்கனைக் கொன்று தள்ளியது. மூக்கால் காமத்தை வளர்க்கக்கூடிய வாசனையை மோந்து பார்க்கக்கூடாது. தெய்வீக வாசனையையே மோந்து பார்க்கவேண்டும். மூக்கு நமக்கு மற்ருெரு முகமாக அமைந்திருக்கிறது என்பதை 'குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகம் ஒன்றே' என்ற அடி விளக்குகிறது.

'நெஞ்சே நீ நினையாய்—நிமிர் புன்சடை நின்மலனை' என்பது அப்பர் பெருமான்வாக்கு. மனதைத் தெய்வத்தின்பால் திருப்பும்பொழுது அதனுடைய வேகம் அடங்குகிறது. "வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க" என்று மாணிக்க வாசகர் கூறுகிருர். மனதைத் தெய்வத்தின்பால் திருப்புவதே அதன் வேகத்தை அடக்குவதற்கும்,அதனை ஒழிப்பதற்கும் உபாயமாகும். எண்ணுவதற்கும், உணர்வதற்கும் வல்ல மனது மற்ருெரு முகமாக நமக்கு அமைந்திருக்கிறது. அதைத் தெய்வத்தின்பால் திருப்பினல் அது அடங்கி அழிந்துபட்டுப்போகிறது என்பதை 'மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே' என்ற அடி விளக்குகிறது.

ஆலயத்தில் தரப்படும் விபூதி, சந்தனம் முதலியவற்றை நம் மேனிமீது பூசிக்கொள்கிறேம். பூமாலையை அணிந்துகொள்கிறேம். அச்செயல் நம்மிடம் தேகாத்ம புத்தியை ஊட்டுவதில்லை. ஆனல் வாசனைப் பொருள்களைப் பூசிக்கொள்ளும்போது உடல் உணர்வு நம்மிடம் மேலிடுகிறது. உடல் உணர்வை வென்றவர்களே குமரனின் காட்சியைப் பெறத் தகுதி வாய்ந்தவர்கள் ஆவார்கள். இங்கு ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடுவது சாலப் பொருந்தும். கோபிமார்கள் கண்ணனிடத்தில் ஒரு விண்ணப்பம் செய்தனர். "கண்ணு! எங்களுக்கு நீ பிரேமை பக்தியைத் தரலாகாதா?" என்று வேண்டினர். ஒருநாள் கோபிமார்கள் நீராடிக்கொண்டிருந்தபோது அவர்களுடைய ஆடைகளைக் கண்ணன் எடுத்து வைத்துக் கொண்டான். அவர்கள் தங்கள் ஆடைகளைக் கேட்க, "நீங்கள் ஒவ்வொருவராக வந்து என்னிடம் ஆடையைப் பெற்றுக்கொள்ளுங்கள்" என்ருன் கண்ணன். அதற்குக் கோபியர், "என்ன இருந்தாலும் நீ ஆண்பிள்ளையல்லவா?" என்று கூறி வர மறுத்தனர். பின்பு கண்ணன் ஆடைகளை வீசியெறிந்துவிட்டுத் திரும்பினன். அடுத்தநாள் கோபியரைச் சந்தித்த கண்ணன் "உங்களுக்குத் தேகாத்ம புத்தி இன்னும் உள்ளது என்பது தெரிகிறதா? அது நீங்கினல் தான் பிரேமை பக்தி வரும்" என்ருன். தேகாத்ம புத்தியை வென்ருல்தான் முருகனது காட்சி கிட்டும். ஊறு என்கின்ற உணர்ச்சியைத் திருத்தி அமைத்துத் தேகாத்ம புத்தியை வெல்லுவதற்குக் கோயிலில் பூமாலை, விபூதி, சந்தனம் முதலியவை தருகின்றனர். இங்ஙனம் மேனி நமக்கு ஒரு முகமாக அமைந்திருப்பதை 'வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே'என்ற அடி விளக்குகிறது. ஆக அருணகிரியாரின் இப்பாடல் எவ்வாறு நாம் நமது புலன்களைப் பகவான்மீது திருப்புவது என்பதை இனிது எடுத்து இயம்புகிறது.

பக்தி செய்வதற்குப் பாவனை முக்கியம். இதைச் சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி மூலம் விளக்கலாம். ஒரு முறை ராஜபுதன சமஸ்தானங்களில் ஒன்ருகிய ஆள்வார் ராஜ்யத்துக்குச் சுவாமிகள் சென்ருர். பாராளும் வேந்தனுக்கும் அருள் ஆளும் வேந்தனுக்கும் இடையே சம்பாஷணை ஒன்று நிகழ்ந்தது. "விக்கிரகங்களை வணங்குவதில் எனக்கு விருப்பமில்லை. என் கதி என்னவாகும்?" என்று கேட்டுவிட்டு வேந்தன் பரிகாசத்துடன் புன்னகை பூத்தார்.

சுவாமிகள்: "என்ன, ஏளனம் பண்ணுகின்றீர்களா?"

மகாராஜா: " இல்லை, சுவாமிகளே! பாமரர் போன்று நான் கல்லையும், மண்ணையும் செம்பையும் வணங்கேன்."

சுவாமிகள் நல்லது, என்று சொல்லி அங்குச் சுவரில் மாட்டப்பட்டிருந்த படம் ஒன்றைக் கொணரச் செய்தார். அப்படத்தை வாங்கிக் கையில் வைத்துக்கொண்டு "நீர் ஒரு சிறு காரியம் செய்வீரா?" என்று திவானை நோக்கிக் கேட்டார். திவானும் சம்மதித்தார். அந்தப் படத்தின்மீது துப்பும்படி சுவாமிகள் திவானைக் கேட்டுக்கொண்டார். மற்றவர்களையும் அப்படத்தின் மீது துப்பச் சொன்னார். எல்லாரும் மருண்டனர்; வெருண்டனர்; சிலருக்கு வியர்வை கொட்டியது.

சுவாமிகள்: "ஏன்? இது வெறுங் கண்ணாடியும், காகிதமும் தானே! இதன் மீது துப்ப உங்களுக்கு என்ன ஆட்சேபம்?"

மக்கள்: "இது எங்கள் அரசர் பெருமானின் படம் அல்லவா?"

சுவாமிகள் : "புகைப்படம் உண்மையான மகாராஜா அன்று. அது மகாராஜாவின் பிரதிபிம்பம் தானே?"

மக்கள்: "ஆம்''.

சுவாமிகள்: "பின் ஏன் அப்படத்திற்கு மரியாதை காட்டுகின்றீர்கள்? கல்லும் மண்ணும் கடவுள் ஆகிவிடமாட்டா. கல்லே, மண்ணே! என்று யாரும் பிரார்த்திப்பதில்லை. இவ்வஸ்துக்களினால் ஆன விக்கிரகங்கள் அல்லது சின்னங்களின் மூலம் ஏகனையும் எங்கும் நிறைந்தவனையும் இருக்கும் முழுமுதற் கடவுளையே கண்டு வணங்குகின்றனர். கடவுளை ஞாபகமூட்டுதற்கே இந்த உருவங்கள் உதவி புரிகின்றன."

மகாராஜா: "சுவாமி! நான் இதுபரியந்தம் அறிவிலியாய் இருந்தேன். கண் விழித்துக் கொண்டேன். எனமீது கிருபை வையுங்கள்."

சுவாமிகள்: "வேந்தே! கடவுள் ஒருவர்தாம் கிருபா மூர்த்தி. அவரை அல்லும் பகலும் வழிபடுங்கள்."

இந்நிகழ்ச்சி பக்தி செய்வதற்குப் பாவனை மிக முக்கியம் என்பதைத் தெளிவாக்குகிறது. கல், மண், செம்பு முதலியவற்றைக் கடவுள் மயமாகப் பாவனை செய்தால் ஆங்குக் கடவுள் எழுந்தருளுவார்.

வள்ளி, தெய்வயானை சமேதராக முருகன் காட்சியளிக்கின்றான். வள்ளி இச்சாசக்தி; தெய்வயானை கிரியாசக்தி; முருகன் ஞான சக்தி. வள்ளி அன்புக்குப் பிரதிநிதி; தெய்வயானை ஆற்றலின் சொரூபம்; முருகன் அறிவு வடிவம். இப்படிப்பட்ட முருகப் பெருமானை வழிபடுவதால் அன்பும், அறிவும், ஆற்றலும் வளருகின்றன. பூரணத்துவமும் தெய்வீகத் தன்மையும் நமக்கு வந்து வாய்க்கின்றன. சுவாமி விவேகானந்தர் கூறும்போது, "Religion is the manifestation of divinity already in man' 'Education is the manifestation of perfection already in man" என்று கூறுகிறார். கல்வியும் சமயமும் ஒன்றே. கல்வி பூரணத்துவத்தை வெளிப்படுத்துகிறது. சமயம் தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்துகிறது. பூரணத்துவமும் தெய்வீகத்தன்மையும் ஒன்றே. ஓம் பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவ அவசிஷ்யதே என்பது கோட்பாடு. மனிதன் யார் எனக் கேட்டபோது "Imperfect God is man" எனவும், கடவுள் யார் எனக் கேட்டபோது "Perfect man is God" எனவும் சுவாமி விவேகானந்தர் பகர்ந்தார். நிறைநிலை எய்தும் பொருட்டுக் கடவுளை வழிபடுகின்றோம். மனத்துக் கண்மாசிலன் ஆவதற்குக் கடவுளை வழிபடுகின்றோம். பரம்பொருளைத்தவிர எல்லாம் குறையுடைய பொருள்களாம். ஆகவே அவரை நாட வேண்டும். வேண்டுதல் வேண்டாமை இலானாக விளங்கும் முருகப்பெருமானின் திருவடிகளைச் சார்ந்து வாழ்வார்க்கு எந்த இடரும் இல்லை. இன்றைக்கு ஆன்மீகத்துறையில் இந்தியாவை நம்பித்தான் மற்ற நாடுகள் உள்ளன. ஆன்மீகத்தை அன்னவர்க்களித்து அறிவியலை நாம் பெற்று இந்தியாவை ஓர் ஆற்றல் மிக்க தேசமாக மாற்றுவது நம் கடமை. வழிபாட்டுக் கழகங்கள் ஆற்றல், அன்பு, அறிவு ஆகிய மூன்று பகுதிகளையும் வளர்ப்பதை நோக்கமாகக் கொள்ளவேண்டும். பக்தர்கள் முருகனருளால் தம் சீரிய சேவைகளைச் செய்வார்களாக! அவர்களுக்கு முருகனது இன்னருள் கிடைப்பதாகுக.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (305) ***கோயில்களில் வழிபாட்டுக்குரிய விக்ரஹங்களுக்கிடையில் ஐந்து தலைநாகமும் இடம் பெறுகிறது. உலகில் எங்கேயாவது ஐந்துதலைநாகம் இருக்கிறதா? இல்லையெனில் இத்தகைய வழிபாட்டின் கருத்து யாது?***

நாகசர்ப்பம் கொடிய விஷமுடையது. ஆண்டுதோறும் நாட்டில் விஷப்பாம்பு தீண்டுவதின் விளைவாகக் கணக்கற்ற பேர் மடிந்து போகின்றனர். பழங்காலந்தொட்டு மரணத்துக்கு எதுவெல்லாம் காரணமாயிருந்ததோ அதை ஒரு தேவதையாகக் கருதி மக்களைக் கொல்லவேண்டாம் என்னும் பிரார்த்தனை நிகழ்ந்து வருகிறது. இது மிக மிகப் பழைய பழக்கம். இது ஒரு புறமிருக்க ஐந்து தலை நாகம் ஏதும் உலகில் இல்லை. அது ஒரு தத்துவத்துக்கு விளக்கமாக வந்து அமைந்திருக்கிறது. சான்று ஒன்று எடுத்துக்கொள்ளுவோம். சிவலிங்கம் ஒன்றை ஐந்து தலைநாகம் சுற்றிப்பிடித்துக்கொண்டு ஐந்து தலைகளும் ஒன்று சேர்ந்து படம் விரித்துக் குடைபிடிப்பது போன்று லிங்கத்தின் மேல் தென்படுகிறது. சர்ப்பம் யாண்டும் சக்தியின் சொருபம். ஏதேனும் ஒரு விதத்தில் சர்ப்பம் ஒவ்வொரு தெய்வத்தோடும் இணக்கம் கொண்டு இருக்கிறது. முருகனுடைய மயிலின் காலடியில் நாகசர்ப்பம் ஒன்று படம் விரித்து ஆடுவதைக் காண்கிறோம். கணபதி, சர்ப்பத்தை இடுப்பில் கச்சையாகக் கட்டியிருக்கிறான். அன்னை பராசக்திக்குச் சர்ப்பம் சிறு கால் மோதிரமாக அமைந்திருக்கிறது. சிவனார் கழுத்தில் நாகசர்ப்பத்தை அணிந்திருக்கிறார். மஹாவிஷ்ணு ஆதிசேஷன் என்னும் சர்ப்பத்தின் மீது சயனித்திருக்கிறார். இவையாவிலும் பொருள் ஒன்று உண்டு. சக்தி பரவஸ்துவுக்கு அன்னியமானதன்று. தெய்வம் சர்வ சக்திமான் என்பது பேருண்மை.

இனி, நாகசர்ப்பம் ஐந்து தலைகளோடு கூடியிருப்பதன் கருத்து ஒன்று உண்டு. பரம்பொருளின் புறத்தோற்றமாகிய பிரபஞ்சமும் சக்தி மிக வாய்க்கப்பெற்றது. தன் சக்தியைப் பிரபஞ்சம் ஐம்பெரும் பூதங்கள் வாயிலாக விளக்கிக்கொண்டிருக்கிறது. ஆகாசம், வாயு, அக்னி, ஜலம், நிலம் ஆகிய ஐம்பூதங்கள் மயமாக இயற்கை அமைந்திருக்கிறது. ஒவ்வொரு பூதமும் தன்னளவில் சக்தி மிக வாய்க்கப்பெற்றது. மனிதன் புரிகிற வழிபாடு அனைத்தும் பிரபஞ்ச வாழ்க்கை மயமாக அமைந்திருக்கிறது. பிரபஞ்ச வாழ்க்கைக்குப் புறம்பான எந்தவிதத்திலாவது கடவுள் வழிபாடு செய்ய முடியாது. நிலையற்ற பிரபஞ்சத்தின் துணையைக்கொண்டு நிலைபேறுடைய பரவஸ்துவை வணங்குதல் வேண்டும் என்பதே ஐந்து தலைநாகத்தின் உட்பொருளாம். ஐம்பூதங்களையும் முறையாகப் பயன்படுத்துவது கடவுள் வழிபாடாகிறது. மனிதன் படைத்துள்ள ஐம்பொறிகளுள் ஒவ்வொரு பொறியும் ஒரு பூதத்தின் தன்மாத்திரை மயமாக அமைந்திருக்கிறது. அத் தன்மாத்திரைகள் ஐந்தும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று ஐந்தின் வகை தெரிவான் கட்டே உலகு என்னும் மறைமொழியில் அடங்கியிருக்கிறது. உலகம் முழுவதும் இந்த ஐந்து புலன்களைக்கொண்டு பொருள்படுத்தப்படுகிறது. ஐம்பொறிகளை முறையாகப் பயன்படுத்துவதும் கடவுள் வழிபாடாகிறது. ஆகவே மானுடன் ஒருவன் வாழ்வாங்கு வாழ்ந்து வருவானாகில் ஐந்து தலைநாகத்தை அவன் நன்கு வழிபடுகிறான் என்பது தேற்றம்.

கேள்வி: (306) ***பற்று இல்லாது வாழ்வதின் பயன் என்ன? அதனால் செய்யும் கருமத்தில் திறமை குன்றுதா?***

பற்றுதல் இல்லாத வாழ்வு எடுத்த எடுப்பில் எல்லார்க்கும் சாத்தியப்படாது. எடுத்துக்கொண்ட கர்மத்தில் ஆரம்பத்தில் பற்றுதல் மிக வைத்துப் பழகவேண்டும். பள்ளிக்கூடத்து மாணக்கர்கள் படிப்பில் பற்றுதல் வைத்து ஒருவனை ஒருவன் முந்தவேண்டும் என்னும் நோக்கத்துடன் போட்டி போட்டுக்கொண்டு படிக்கிறார்கள். விளையாட்டுப் பந்தயத்தில் போட்டி போட்டுக்கொண்டு ஓடுகிறார்கள். அத்தகைய வினைப்பற்றுதல் இல்லாவிட்டால் மாணக்கன் முன்னேற்றம் அடைய மாட்டான். எடுத்துக்கொண்ட கர்மத்தில்

எவ்வளவுக் கெவ்வளவு பற்றுதல் வைக்கப் படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அந்தக் கர்மத்தில் திறமை தானாக வந்தமைகிறது.

மனிதன் தனித்துத் தனக்காக வாழ்பவ னல்லன். பரஸ்பர உதவியையே அடிப்படை யாகக் கொண்டது சமுதாய வாழ்க்கை. பரஸ் பரம் உதவி பண்ணிக்கொள்ளும் பண்பில் மனிதன் மேல்நிலைக்கு வரவேண்டும். ஒவ்வொரு மனிதனும் ஏதேனும் ஒருவிதத்தில் சமுதாயத் துக்கு ஏற்ற தொண்டனாக அமைய வேண்டும். அப்படி அமைந்த பின்பே பற்றற்ற கருமத் துக்குத் தகுதியுடையவனாகத் திருந்தி அமைய அவன் கடமைப்பட்டிருக்கிறான். ஏற்றுக் கொண்ட சம்பளத்துக்கு ஏற்றபடி பணிவிடை பண்ணுவது முறைமை. அப்படிப் பணிவிடை பண்ணாது ஏமாற்றுபவன் தரத்தில் கீழே போவது திண்ணம். ஏற்றுக்கொண்ட சம்பளத் துக்குமேல் பிரதிபலனை எதிர்பாராது பணி விடை பண்ணுவது பற்றற்ற கர்மமாம். யார் ஒருவன் அத்தகைய பரந்த மனப்பான்மை யோடு பணிவிடை பண்ணுகின்றானோ அவன் பண்பில் அதிவிரைவில் மேலே வருகிறான்.

குடும்பம் ஒன்றில் தாய் ஒருத்தி பண்ணு கிற பணிவிடை ஏராளமானது. பிரதிபலன் எதையும் எதிர்பாராது அச் செயல்களையெல் லாம் அவள் செய்து வருவதால் அவ்வீட்டுக்கு அவள் தலைவியாகத் திகழுகிறாள். சம்பளம் வாங்கிக்கொண்டு அச்செயல்களைச் செய்பவர் கள் அந்தப் பெரிய நிலையை அடைய முடியாது.

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

என்னும் கோட்பாடு பற்றற்ற கர்மத்தை அடிப்படையாகக் கொண்டது. யார் ஒருவன் பிரதிபலனை எதிர்பாராது சமூகத்தொண்டில் ஈடுபடுகிறானோ அவன் தெய்வ சம்பத்தில் அதி விரைவில் முன்னேற்றமடைகிறான். சமுதாயம் ஒன்றில் அத்தகைய கர்மயோகிகள் அதிகரிப் பதற்கேற்ப அந்தச் சமுதாயம் முன்னேற்ற மடைந்து வருகிறது. அன்பினால் தூண்டப் பெற்றுச் செய்வதால் எடுத்துக்கொண்ட கர் மத்தின் தரம் அதிவேகம் மேலோங்குகிறது. ஆக, பற்றற்றுக் கர்மம் பண்ணுவது பண்பட் டவர்க்கேசாத்தியமாகிறது. அவர்களின் வாழ் வின் தரமும் ஓங்குகிறது. எடுத்துக்கொண்ட கர்மத்தின் பண்பும் புனிதமடைகிறது. சமுதா யம் அதனால் பெரிய நலன் அடைகிறது. இதுவே பற்றற்ற கர்மத்தின் விளைவாம்.

கேள்வி: (307) ஒரு மதத்திலிருந்து மற் றொரு மதத்திற்கு ஒருவன் மதம் மாறிப் போவது அவசியமா?

மதம் என்பது கொள்கை எனப் பொருள் படுகிறது. அறிவு வளர்ச்சிக்கேற்ப மனிதனு டைய கொள்கை தெளிவடைந்து வருகிறது. பிழையானகொள்கைகளைச்சரியான கொள்கை களாகத் திருத்தியமைக்க மனிதன் கடமைப் பட்டிருக்கிறான். பள்ளிப்பிள்ளைகள்சொற்களைப் பிழைபட எழுதுகின்றனர். அதைத் திருத்தி யமைப்பது முற்றிலும் அவசியம். அதே பாங் கில் சில மதங்களில் தவறான கொள்கைகள் ஏராளமாக இருக்கின்றன. அவைகளைத் திருத் திக்கொள்வதற்கேற்ப மனிதன் தானே திருந் தப் பெறுகிறான். இந்த முறையில் அறிவை வளர்ப்பது அவசியம்.

இதற்கு மாறாகச் சில மதஸ்தர்கள்பட்டாளத் துக்கு ஆள் சேர்ப்பது போன்று தங்கள் கூட் டத்தைப் பெருக்குவதற்கு மதமாற்றம் பண்ணு கின்றனர். அதில் பயன் ஒன்றுமில்லை. பெரும் பாலும் மத மாற்றத்தின் மூலமாகத் தங்களு டைய பெயரை மட்டும் மாற்றிக்கொள்கின் றனர். கடவுள் ஒருவர். அவருக்குப் பெயர்கள் பல. தாங்கள் வழிபடும் தெய்வத்தின் பெயரை மதம் மாறியவர்கள் மாற்றியமைத்துக் கொள் கின்றனர். பெயரளவில் மதம் மாறுகிறவன் சமுதாயப்பழக்க வழக்கத்தை மாற்றி அமைத் துக்கொள்ளுகிறான். வழிபாட்டு முறையையும் அவன் மாற்றியமைத்துக் கொள்ளுகிறான். ஆனால் அந்த ஆள் பண்பிலே திருந்தியமைகிற தில்லை. அத்தகைய மதம் மாறுதல் வெறும் கேலிக்கூத்தாகும்.

ஒரு குடும்பத்துக்குரிய மனிதன் அந்தக் குடும் பத்தினின்று எக்காரணத்தை முன்னிட்டா வது வேறொரு குடும்பத்திற்குப் போவதில்லை. அதே விதத்தில் சரியான பக்தன் தான் எந்த மதத்தில் பிறந்தானோ அதை அனுஷ்டித்து வருகிறான். அனுஷ்டானத்தில் பிழையிருந் தால் அதைத் திருத்திக்கொள்கிறான். இதுவே சரியான மத அனுஷ்டானமாம். மதம் மாறு தல் என்பது பொருளற்றதாம்.

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-163

925. कौलिनीकेवला கௌலினீகேவலா—கௌல தர்மத்தையும் பரஞானத்தையும்உடையவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

ஒரு நாட்டின் பண்பையும் பரிபாகத்தையும் காத்து வைத்திருப்பவர்கள் அந்த நாட்டுக்குரிய குலதர்மத்தினின்று பிறழாது புனித வாழ்க்கை வாழ்ந்துவரும் பெண்களாம். அத்தகைய அறநெறி பிறழாத மகளிர் மயமாக இருப்பவள் அன்னை பராசக்தி. கௌல மார்க்கத்தினின்று பிசகாதிருக்கும் மாதரசிகளைப் பார்ப்பது அன்னை பராசக்தியின் தரிசனத்துக்கு நிகர். அன்னவர்களின் எண்ணிக்கை சமுதாயத்தில் அதிகரிப்பதற்கேற்ப நாட்டில் சீலமும் நல்வாழ்வும் அதிகரிக்கின்றன. தூய பாரமார்த்திகப் பெருவாழ்வு வாழ்பவர்களே பரஞானத்திற்குத் தகுதியுடையவர்களாகிறார்கள். ஸதாசிவனாகிய பரவஸ்துவுக்குக் கேவலம் என்னும் பதம் முற்றிலும் பொருத்தமானது. உலகத்தவர்கள் வாழ்க்கை முறையில் கேவலம் என்னும் பதத்தை அல்பமானது என்றும், ஒன்றுக்கும் உதவாதது என்றும் பொருள் படுத்துகின்றனர். அப்படிப் பொருள்படுத்துவது பிழை. கேவலம் என்னும் பதம் ஒப்புவமையற்றது எனவும், சீர்தூக்க முடியாதது எனவும், விளக்குதற்கு அரியது எனவும், இரண்டற்றது எனவும் பொருள்படுகிறது. ஸதாசிவத்தோடு அபின்னமாயிருக்கும் பரதேவதையாகிய அம்பிகைக்கு இப்பதம் முற்றிலும் பொருத்தமானது. பிரபஞ்சத்தின் பாங்குகள் அனைத்தும் அம்பிகையின் அகண்ட நிலையில் ஒடுங்கிப் போகின்றன. முக்குணங்களுக்கு ஆங்கு இடமில்லை. காலமும் தேசமும் அவள் சந்நிதியில் அடங்கிப் போகின்றன. மனதினின்று உபாதிகளனைத்தையும் ஒதுக்கித் தள்ளிய ஆத்மசாதகனுக்கே அம்பிகையின் இந்த மகிமை ஒருவாறு விளங்குகிறது. நிர்க்குண, நிருபாதிக சொருபத்தைச் சார விரும்பும் சாதகன் இந்த நாமத்தின் உட்பொருளை ஆழ்ந்து தியானிக்கவேண்டும்.

926. अनर्घ्यकैवल्यपददायिनी அநர்க்யகைவல்யபததாயினீ—மதிப்புப்போட முடியாத பரஞானத்தை நல்குபவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

அநர்க்யம் என்னும் பதத்துக்குப் பொருத்தமான விளக்கம் ஓர் உபமானத்தின் மூலமாகவே விளக்கப்படும். நீர்த்துளி ஒன்று நிலத்திலே பலப்பல இடங்களிலே வீழ்ந்தும், மீண்டும் ஆவியாக மேலே போயும் படாத பாடுபடுகிறது. அத்தகைய நீர்த்துளி நிலத்தில் விழுவதற்குப் பதிலாகக் கடலில் விழுமாகில் அது அடைந்துள்ள நிலை ஒப்பு உயர்வற்றதாகும். அதற்கு நிகராக ஜீவாத்மன் பிரபஞ்ச வாழ்க்கையில் மேலானவைகளும், கீழானவைகளுமான உபாதிகளுக்கு உட்பட்டவனாகப் பிறவிக்கடலில் அலைந்து திரிகிறான். அத்தகையவன் திருவருள் நோக்கத்தின் விளைவாகப் பரத்துக்குரியவனாகத் திருந்தியமைவானாகில் அன்னவன் அடைந்துள்ள பேறு ஒப்பு உயர்வற்றதாகும். இப்பேற்றினைத் திருவாதவூரர் 'நாயினுக்குத் தவிசு இட்டு' என்று விளக்குகின்றார். நாய் ஒன்றைச் சமுதாயம் யாண்டும் ஒதுக்கி வைக்கிறது நாய்க்கு நிகரான மனிதன் அன்னை பராசக்தியின் அருளால் சான்றோர் கூட்டத்தைச் சேர்ந்திருக்கும் தகுதி வாய்க்கப் பெறுவானாகில் அது பெரிய பேறு ஆகும். அதற்கெல்லாம் மேலாகப் பரத்திலேயே லயம் ஆகும் பாங்கைப் பெறுவானாகில் அதற்கு மேல் அவன் அடைவதற்கு உயர்ந்த நிலை ஏதுமில்லை.

அன்னை பராசக்தி கிருபை கூர்ந்து இப் பிரபஞ்ச வாழ்க்கையில் உழன்றுகிடக்கும் பக்தர்களை அதிவிரைவில் பக்குவப்படுத்தித் தனக்கு உரியவர்களாக மீட்டெடுத்துக்கொள்கிறாள். அச்செயலில் தனி மகிமை ஒன்று மிளிர்கிறது. அச்செயலுக்கு இலக்கு ஆகும் ஆத்மசாதகன் பாக்யவானாகிறான். இது அன்னையின் திருவருளாம்.

927. स्तोत्रप्रिया ஸ்தோத்ரப்ரியா—வணங்குதலில் விருப்பம் உடையவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

கடவுள் வழிபாட்டில் ஸ்தோத்ரம் பண்ணுதல் முக்கியமான இடம் பெறுகிறது. வழிபாட்டில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. வணங்குகின்றவன் தனக்குத் தேவையாயிருப்

பவைகளை நாடுதல் ஒரு பகுதி. இது காமிய வழிபாடு என்னும் பெயர் பெறுகிறது. மக்களில் பெரும்பான்மையோர் காமிய வழிபாட்டுக்கு மட்டும் தகுதியுடையவர்களாயிருக்கின்றனர். கடவுளின் மகிமைகளை அறிந்து அவைகளை ரசிப்பதில் அதை ஈடுபடுத்துதல் மற்றெரு பகுதியாகும். இது நிஷ்காமிய வழிபாடு என்னும் பெயர் பெறுகிறது. இரண்டுவிதமான வழிபாடுகளுக்கும் இவ்வுலக வாழ்வில் இடமுண்டு. குளிரில் நடுங்குகிறவன் இரவில் நெருப்பை நாடிப் போகிறுன். பகலில் சூரிய வெளிச்சத்தை நாடிப் போகிறுன். இவையிரண்டும் காமிய வழிபாட்டுக்குச் சான்றுகளாகின்றன. ஆராய்ச்சியில் ஈடுபடுகிற ஏதோ ஒரு மனிதன் தீ எதனுல் எப்படி எரிகிறது? அதன் வெப்பம் பக்கத்திலுள்ளவனுக்கு எப்படியிருக்கிறது? எட்டப் போகப் போக வெப்பம் ஏன் குறைகிறது? எந்த விறகுக்கட்டை தீ எரிவதற்கு எங்ஙனம் பயன்படுகிறது என்பன போன்ற ஆராய்ச்சிகள் செய்வது ஆராய்ச்சி பண்ணுகின்றவனுடைய சொந்தத் தேவையை முன்னிட்டல்ல, ஆனல் அறிவை வளர்த்தல் பொருட்டேயாம். இத்தகைய ஆராய்ச்சியோடு நிஷ்காமிய ஸ்தோத்திரத்தை ஒப்பிடலாம்.

வேற்றுன் ஒருவனைப்பற்றி மானுடன் ஒருவனுக்கு ஒன்றுமே தெரியாது. அத்தகையவனிடம் அந்த வேற்றுனைப்பற்றி விசாரித்தால் தனக்கும் ஒன்றும் தெரியாது என்னும் விடை அவனிடமிருந்து வரும். மற்று, அந்த வேற்றுனை வெறுக்கவோ, விரும்பவோ செய்கிற மனிதனிடம் இக்கேள்வியைக் கேட்டால் வேண்டியவாறு விடை வந்துகொண்டிருக்கும். ஏனென்றல் ஒருவனைப்பற்றி ஏதேனும் இயம்புவதற்கு முன்பு அவனைப்பற்றி இயம்புபவன் ஏதாவது அறிந்திருத்தல் வேண்டும். அம்மனிதனிடத்து வெறுப்புக் கொண்டிருப்பவன் அவனிடமிருக்கும் குணக்கேடுகளையே பெரிதும் அறிந்து இருப்பான். மற்று அம்மனிதனிடத்து விருப்பம் வைத்திருப்பவனைக் கேட்டால் அவனிடத்துள்ள நலன்களையும் பண்புகளையும் எடுத்துப் பகருவான்.

இக்கோட்பாடு கடவுள் வணக்கத்துக்கும் உரியதாகிறது. கடவுள் தத்துவத்தை வெறுக்கிற அரக்க இயல்பு படைத்தவர்கள் அக்கடவுள், வழிபாட்டுக்கு உரியவர் அல்லர் என்னும் கருத்துக்களை வேண்டியவாறு வாரிக் கொட்டுகின்றனர். அத்தகைய விபரங்களும் அறிவுக்கு அறிகுறிகளாம். மற்று, பக்தர்களோ கடவுளிடத்துப் பேரன்பு பூண்டிருப்பவர்கள். அன்பினுல் தூண்டப்பட்டு ஒருவரை அறிந்து கொள்தல் மெய்யறிவாகும். வெறுப்பின் விளைவாக வருகிற அறிவு திரிவுபட்டு இருக்கும் பொருளை அறிதற்கு நேரான அறிவு பயன்படுவது போன்று திரிவுபட்ட அறிவு பயன்படாது.

மானுடன் செய்கிற வணக்கம் காமிய ஸ்தோத்ரமாக இருக்கலாம் அல்லது நிஷ்காமிய ஸ்தோத்திரமாகவிருக்கலாம். இரண்டு வித ஸ்தோத்திரங்களும் அம்பிகைக்குப் பிரியமானவைகளே. குழந்தையொன்று தன் தாயிடம் சென்று தனக்கு இன்னது வேண்டுமென்று கேட்கிறது. இது காமிய வேண்டுதல். ஆயினும் இதில் குற்றம் ஏதுமில்லை. குழந்தையொன்று தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளுதற்குத் தன் தாயிடம் செல்லாது வேறு எங்குச் செல்லும்? உலகனைத்தையும் ஈன்றெடுத்துள்ள அன்னை பராசக்தி தன் செல்வர்களுக்கும் செல்விகளுக்கும் தேவையாயிருப்பவைகளைத் தந்தருளக் சடமைப்பட்டிருக்கிறுள். அந்த அளவில் காமிய ஸ்தோத்ரம் அம்பிகைக்கு முற்றிலும் பிரியமானவைகளேயாம். நச்சினுர்க்கு இனியன் என்று இறைவன் போற்றப்படுகிறுர். அதே விதத்தில் நச்சினுர்க்கு இனியவள் என்று அம்பிகை போற்றப்படுகிறுள். தன் குழந்தைகள் வந்து தங்களுக்கு இன்ன இன்ன பொருள்கள் தேவையென்று தாயை உபத்ரவப்படுத்துவதை முன்னிட்டு அவள் சலித்துக்கொள்வதில்லை. அந்த உபத்ரவம் ஒரு போக்கில் அவளுக்கு இன்பத்தைத் தருகிறது. ஏனென்றல் கேட்கிறவர்களையும் கேட்டதைக் கரவாது கொடுப்பவளையும் அன்பு இணைத்து வைக்கிறது. கேட்கக் கேட்கக் குழந்தைகளுக்கு அன்பு வளர்கிறது. கொடுக்கக் கொடுக்கத் தாய்க்கு அன்பு வளர்கிறது. ஆகவே, ஸ்தோத்ரம் பண்ணுவதால் அம்பிகையினிடத்து அன்பு வளர்ந்துகொண்டே போகிறது.

தாயும் சேயும் காலையில் சந்திக்கிறபொழுது சேய் தன்னைத் தாயிடம் ஒப்படைக்கிறது. அப்படிச் செய்வது நமஸ்காரமாகிறது. குழந்தையைத் தாய் எடுத்து அணைத்துக் கொள்ளுகிறாள். அணைத்துக்கொள்வதின் வாயிலாகக் குழந்தை செய்கிற நமஸ்காரம் அங்கீகரிக்கப் படுகிறது. இதே விதத்தில் பக்தன் ஒருவன் தான் வணங்கும் தெய்வமாகிய அம்பிகையை நமஸ்கரிப்பதன் வாயிலாகத் தன்னை அம்பிகையினிடம் ஒப்படைக்கின்றான். அதினின்று அவன் அடையும் திருப்தியே அன்னை பராசக்தி அவன் செய்த நமஸ்காரத்தை ஏற்றுக்கொண்டதற்கு அறிகுறியாகும். ஏதேனும் காரணத்தை முன்னிட்டு ஒருநாள் நமஸ்காரம் செய்யத் தவறினால் அன்றைய வாழ்வு குறைவாழ்வாகப் பக்தனுக்குத் தோன்றுகிறது. அத்தகைய அனுபவம் அன்புக்கு அறிகுறியாம்.

தாயிடமோ தந்தையிடமோ குழந்தையொன்று காலையில் சென்று நமஸ்கரிக்கின்றது. பெற்றோர் அக்குழந்தையை மகிழ்வுடன் பார்க்கின்றனர். நலமுற்று இருக்கின்றாயா என்று கேட்கிறார்கள். அப்படிக் கேட்பதே குழந்தைக்குப் பரமதிருப்தியை உண்டுபண்ணுகிறது. நமஸ்கரிக்கிற குழந்தையைப் பாராமுகமாக விட்டுவிட்டால் அக்குழந்தை ஏமாற்றமடைகிறது. நமஸ்கரிக்கிற ஒவ்வொரு வேளையிலும் பார்வையின் வாயிலாகவும், சொல்லின் வாயிலாகவும் ஏற்படுத்துகின்ற நல்லிணக்கமே ஆசீர்வாதம் எனப்படுகிறது.

அன்பர் இருவர் சந்திக்கிறபொழுது அவர்களுக்கிடையில் உள்ள கருத்து ஒற்றுமையைப் பற்றி அளவளாவிப் பேசுகின்றனர். பேச்சு வளர்வதற்கு ஏற்பத் திருப்தியும் படிப்படியாக மேலோங்குகிறது. கருத்தொற்றுமையே இருவருக்கிடையில் ஐக்யபாவனையை வளர்க்கிறது. இக்கோட்பாடு அன்னை பராசக்தியைப் பற்றிய போற்றுதலில் நல்ல இடம் பெறுகிறது. தெய்வத்தைப் பேணுதலில் பக்தனும், பக்தனைப் பேணுதலில் பராசக்தியும் பரம திருப்தியடைகிறார்கள். இத்தகைய பரஸ்பர ஒற்றுமை சித்தாந்தம் எனப்படுகிறது.

விளையாட்டுத் திறமைவாய்ந்த இரண்டு நண்பர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்து உரையாடுகிறார்கள். ஏற்கனவே நிகழ்ந்த விளையாட்டில் ஒருவன் காட்டிய திறமையை மற்றொருவன் பாராட்டுகிறான். இது பொருளற்ற இச்சகம் ஆகாது. பொருள் சேர்ந்த புகழ் என்றே இதைப் பகருதல் வேண்டும். நெடுந்தூர ஓட்டத்தில் விரைந்து ஓடுகிறவனுக்கு உற்சாகம் ஊட்ட வேடிக்கை பார்க்கிறவர்கள் உரக்கக் கத்துகின்றனர். அத்தகைய கூப்பாடு அவனுக்கு ஊக்கம் மிக அளிக்கிறது. இத்தகைய நடைமுறையை ஒட்டிக் கடவுள் வணக்கத்திலும் அவர் புகழப் படுகிறார். அண்டங்களை என்னென்ன பாங்கில் தாங்கி வருகிறார். அசுரர்களை என்னென்ன பாங்கில் ஒதுக்கித் தள்ளுகிறார். பக்தர்களை என்னென்ன பாங்கில் பாதுகாக்கின்றார். இத்தகைய பராக்ரமங்களை யெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகப் பக்தன் இறைவனிடம் தெரிவிப்பதன் வாயிலாகத் தானே ஓரளவு பராக்ரமம் வாய்க்கப்பெற்றவனாக ஆய்விடுகிறான். இது பொருள் சேர் புகழ்ச்சியாகும்.

வானத்தில் பாயும் சூரிய கிரணம் கட்புலனாவதில்லை. அக்கிரணம் மேகத்தின் வழியாகச் செல்லுகிறபொழுது ஏழு நிறங்களாக அது சிதறடைகிறது. நிறமற்ற வெளிச்சம் ஏழுநிறங்களாகத் தன்னை விரித்துக் காட்டுகிறபொழுது அது வெளிச்சத்தைப்பற்றிய விபூதியாம். 'உலகனைத்தும் ஆனாய் நீயே' என்பது அம்பிகையைப்பற்றிய விளக்கமாம். அந்த விளக்கத்தில் அவளுடைய மகிமைகள் எண்ணிக்கையிலடங்காதவைகள் புதைந்து கிடக்கின்றன. ஒவ்வொரு விளக்கத்தையும் வாயால் சொன்னால்மட்டும் போதாது. அதன் உட்பொருளை உள்ளத்தில் உணருதல் வேண்டும். அம்பிகையின் விபூதிகளுக்கு எல்லை இல்லை. அவ்விபூதிகளில் திளைத்திருப்பது நல்ல விளக்கமாகிறது.

இதற்கெல்லாம் மேல் சொரூப விளக்கம் என்பது ஒன்றிருக்கிறது. தாயே, மாறியமையும் பிரபஞ்சத்தில் நீ மாறுபாடு இல்லாத நித்தியவஸ்துவாக இலங்குகின்றாய். அஞ்ஞான மயமான பிரபஞ்சத்தினுள் நீ ஞான விக்ரஹமாக விளங்குகின்றாய். உணர்ச்சியற்ற இப்பிரபஞ்சத்தில் நீ பேருணர்வாகவும் பரமானந்தமாகவும் விளங்கிக்கொண்டிருக்கின்றாய். அத்தகைய சத், சித், ஆனந்த சொரூபிணி நீ என்று அம்பிகையைப் போற்றுவதன்வாயிலாக அவள் அருளுக்கு அப்பக்தன் பாத்திரமாகிறான்.

நம்பிக்கை உள்ளவனிடம் எல்லாம் உண்டு

[திருச்சி வானொலி நிலையத்தில் 19-2-82 அன்று ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர் அவர்கள் நிகழ்த்திய உரை]

வாழ்வு நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்திருக்கிறது. நம்பிக்கை இல்லாவிட்டால் வாழ்வில் முன்னேற்றம் இல்லை. பொறிகளை நம்பி வாழ்வதில் வாழ்வு துவங்கி, புலனறிவில் நம்பிக்கை வைப்பதில் வாழ்வு வளர்ச்சி அடைந்து, ஆன்மீக நம்பிக்கையில் வாழ்வு பூர்த்தி அடைகின்றது. குழந்தை தானாகவே தாயை அறிந்துகொள்கிறது. தந்தையைத் தாய் குழந்தைக்குக் காட்டித் தருகின்றாள். தாய் சொல்லுவதை நம்பி குழந்தை தந்தையை ஏற்றுக்கொள்கிறது. தாய் சொல்வதைக் குழந்தை ஆராய்ச்சி பண்ணுவதில்லை. ஆங்கு ஆராய்ச்சி பண்ணுவதும் அவசியம் இல்லை. தந்தையின் வடிவத்தைப் பார்த்தும் அவருடைய குரல் ஓசையைக் கேட்டும் தந்தையைக் குழந்தை அறிந்துகொள்ள முயலுகிறது. குழந்தைவளர்ந்து அறிவு பெறப் பெறச் சுற்றத்தாரையும் உலகையும் தாய் தந்தையர்கள் மூலம் அறிந்துகொள்கிறது. எனவே உலக அறிவு நம்பிக்கையின் அடிப்படையில்தான் உண்டாகிறது. இங்ஙனம் பாரமார்த்திக ஞானமும் நம்பிக்கையின் அடிப்படையில்தான் ஏற்பட்டாக வேண்டும்.

ஜடபுத்தி உடைய உயிர்கள் பொறிகளை நம்பி மாண்டுபோகின்றன. விட்டில் பூச்சி கண் என்னும் பொறியை நம்பி விளக்கு வெளிச்சத்தில் வீழ்ந்து மாண்டுபோகிறது. மான் காது என்னும் பொறியை நம்பி வேட்டைக்காரர்கள் உண்டாக்கும் பறை ஓசையில் ஸ்தம்பித்து நின்று அவர்கள் கையில் அகப்பட்டுச் சாகிறது. கருவண்டு மூக்கு என்னும் பொறியை நம்பி மலரிலுள்ள வாசனையில் ஈடுபட்டு மலருக்குள் அகப்பட்டு மாண்டு போகிறது. மீன் நாவை நம்பி தூண்டிலில் உள்ள இரையைத் தின்பதற்குத் தூண்டிலில் சிக்கிச் சாகிறது. காட்டு யானை உடம்பை நம்பி ஊறு என்கின்ற உணர்ச்சிக்கு வசப்பட்டுக் கொப்பத்தில் வீழ்ந்து அகப்பட்டுக்கொள்கிறது. இங்ஙனம் ஜடபுத்தி படைத்துள்ள உயிர்கள் ஒரு பொறியை நம்பி வாழ்வை முடித்துக்கொள்கின்றன. இனி, ஐம்பொறிகளையும் நம்பி ஓடுகின்ற மனிதன் கதி என்னவது? ஆனால் பொறி புலன்களுக்கு அப்பால் உள்ள தெய்வத்தை நம்புபவன் அழியாப் பெருநிலையை யடைகின்றான்.

பொறிகள் மூலம் அனுபவிக்கும் இன்பம் உடல் உணர்வை வளர்க்கிறது. ஜீவபோதம் தலை எடுக்கும் பொழுது அறிவு உண்டாகிறது. ஜீவபோதத்தில் அறிவோடு உடல் உணர்வும் கலந்தே இருக்கிறது. ஜீவபோதத்தில் வளர்ந்து வரும் உயிர்கள் அறிவை நம்பி வாழ்கின்றன. ஜீவபோதம் பெற்றுள்ள உயிர்களுக்கு அறிவு புலன்களோடு கட்டுப்பட்டுக் கிடக்கிறது. எனவே அவைகள் புலன் அறிவை நம்பி வாழ்கின்றன. ஆத்மபோதம் தலை எடுக்கும் பொழுது சொரூபத்தைப் பற்றிய ஞானம் உண்டாகிறது. அப்பொழுதுதான் வாலறிவு அல்லது மெய்ப்பொருளை நம்பி வாழ்கின்றோம்.

ராமன் ஆஞ்சநேயரைப்பார்த்து "நீ என்னை எங்ஙனம் கருதுகின்றாய்?" என்று கேட்டார். அதற்கு ஆஞ்சநேயர் "எனக்கு உடல் உணர்வு இருக்கும்பொழுது நீ பிரபு, நான் உன்னுடைய தாசன். என்னிடத்து ஜீவபோதம் இருக்கின்றபொழுது நீ பூரணன்; நான் அதில் ஓர் அம்சம். என்னிடத்து ஆத்மபோதம் தலை எடுக்கும்பொழுது நீயே நான், நானே நீ" என்று விடை கொடுத்தார். உடல் உணர்வைக் கடந்து ஆத்ம போதம் உடையவனாக மாறி அமையும் பொழுதுதான் ஒருவனுக்குத் தெய்வ நம்பிக்கை உண்டாகிறது.

விலங்குத் தன்மை உடையவன் பொறிகளை நம்பி வாழ்கின்றான். மனிதத்தன்மை உடையவன் சிற்றறிவை நம்பி வாழ்கின்றான். ஞானி வாலறிவை நம்பி வாழ்கின்றான். ஆகவே மனிதன் எந்தப் படித்தரத்திலிருந்தாலும் நம்பிக்கையின் அடிப்படையில்தான் வாழ்ந்திருக்கின்றான்.

தன்னை உடல் மயமாகவும், புறத்தை உலக மயமாகவும் உணர்கின்றவனுக்கு நம்பிக்கை ஸ்தூலப் பொருள்களில் அமைந்திருக்கிறது. தன்னை மனோமயமாகவும், புறத்தைக் கருத்து மயமாகவும் உணர்கின்றவனுக்கு நம்பிக்கை

சூட்சுமத்தில் அமைந்திருக்கிறது. தன்னை ஆத்ம சொரூபமயமாகவும், புறத்தைக் கடவுள் மயமாகவும் உணர்கின்றவனுக்கு அதி சூட்சும மாக இருக்கின்ற அகண்டாகாரப் பொருளில் நம்பிக்கை அமைந்திருக்கிறது.

தன்னை உடல் மயம் என்று நம்புபவன் சுய நலக்காரன் ஆகிறான். உடல் அழியுமிடத்துத் தானே அழிந்து போவதாக நினைக்கின்றான். உடலுக்கு வரும் சோர்வைத் தனக்கு வந்த தாக எண்ணுகின்றான். அவன் பண்பாட்டில் மிகக் கீழானவனாக இருக்கின்றான். தன்னை மனோமயமாக நம்புபவன் ஆசையைப் பெருக்கு கின்றான். அவனுக்கு அகங்காரம் தடித்ததா கின்றது. மனதுக்கு வரும் கவலைகளையெல் லாம் தனக்கு வந்ததாகக் கொள்கின்றான். புகழ்ச்சியை முன்னிட்டு மகிழ்ச்சியையும், இகழ்ச்சியை முன்னிட்டுத் துயரத்தையும் அவன் அடைகின்றான். தன்னை ஆத்மாவாக நம்புபவன் மேலோன் ஆகின்றான். அவன் உடலும் உள்ளமும் உறுதிப்பாடே வடிவெடுத் தவைகளாகின்றன. அவன் அழியாப் பெரு நிலையை அடைகின்றான். அவனுக்கு அச்சம் இல்லை. எதையும் சாதிக்க முடியும் என்ற உள்ளத்திட்பம் அவனுக்கு உண்டாகிறது. மனத்தெளிவு வாய்க்கப் பெற்றவனாகின்றான். அடக்கமும், சாந்தமும் வடிவெடுத்தவனாக இருந்து மனம் யாண்டும் நடுநிலை படைத்த வனாக இருக்கின்றான். தற்போதம் அவனுக்கு உண்டாகின்றது. தன்னம்பிக்கையும் அவ னுக்கு ஏற்படுகிறது.

கடவுள் எல்லாம் அறிந்தவர். அவர் சர்வ சக்திமான்; அவர் பேரின்ப வடிவினன். இத்த கைய மாபெரும் சக்தியினிடத்து நம்பிக்கை வைப்பவன் தானே அந்த மயமாகின்றான். தான் ஆத்ம சொரூபம் என்று நம்புபவனிடம் ஏற்படும் தன்னம்பிக்கையே தெய்வ நம்பிக் கையாக வடிவெடுக்கிறது. முதலில் ஒருவன் தன்னம்பிக்கை உடையவனாதல் வேண்டும். பிறகு அவனிடம் தெய்வ நம்பிக்கை ஏற்படும்.

இராம காரியத்துக்காக அனுமான் சீதை யைத் தேடப் புறப்பட்டுப் போனான். சம்பாதி மூலமாகச் சீதை இலங்காபுரியில் அடைபட்டி ருப்பதை அனுமான் அறிந்தான். உடனே கடற்கரைக்கு வந்து சேர்ந்தான். ஜாம்பவான் அப்பொழுது அனுமானைச் சந்தித்தான். அவன் அனுமானிடம் பகர்ந்ததாவது: "ஆஞ்ச நேயா! நீ வாயு குமாரன், நீ தூய்மையே வடி வெடுத்தவன், நீ சிறு குழந்தையாய் இருந்த பொழுது சூரியனை ஒரு பிரகாசம் வாய்ந்த கனி என்று எண்ணினாய். உடனே அதைக் கைப்பற்றவும் நீ வானத்தை நோக்கித் தாவி னாய். பிரம்மா உனக்குப் பல வரங்கள் தந்தி ருக்கின்றான். நீ அமிர்த சொரூபி. உன்னை யமன் அணுகமாட்டான். உன்னை ஆயுதங் கள் துன்புறுத்த மாட்டா. நீ பிரம்மச்சரியம் என்னும் மகாவிரதம் பூண்டிருக்கின்றாய். ஆத லால் உன்னை யாருமே வெல்லமுடியாது. நல் லொழுக்கமும் பணிவும் உனக்கு அணிகளாக அமைந்திருக்கின்றன. இராமன் ஒரு தெய் வீக புருஷன். அவரிடத்தில் நீ ஆழ்ந்த பக்தி வைத்திருக்கின்றாய். ராம கைங்கரியத்துக் காக இப்பொழுது நீ இங்கு வந்திருக்கின் றாய். இக்காரியத்தை நிறைவேற்றும் தகுதி உனக்கே உண்டு. எடுத்தகாரியத்தை முடிக் கும் ஆற்றல் பெற்றவன் நீ. நீ வெற்றி பெறு வாய்." இங்ஙனம் ஜாம்பவான் அனுமானைப் பற்றிய உண்மையை விளக்கியதை ஆஞ்ச நேயன் காது கொடுத்துக் கேட்டான். அவனி டத்து ஆத்மபோதம் உருவெடுத்தது. அவனி டத்துப் புதைந்திருந்த தெய்வீக ஆற்றல்கள் எல்லாம் அவனுக்கு அப்பொழுது ஞாபகத் துக்கு வந்தன. அவன் விசுவரூபத்தை எடுத்து வாய்க்காலைத் தாண்டுவது போன்று கடலைத் தாண்டிச் சென்று விட்டான்.

கட்டையும் கல்லும்போன்ற சாமான்ய நிலை யில் இருப்பவன் தன்னம்பிக்கையும், தெய்வ நம்பிக்கையும் உடையவனாகத் தன்னைத்தெய்வ காரியத்துக்கு ஒப்படைப்பானாகில் அவன் மகிமை வாய்ந்தமூர்த்தியாக மாறியமைகிறான். ஈசுவர நம்பிக்கையைப்பற்றிக் கூறும் ஸ்ரீ ராம கிருஷ்ணர் உபதேசம் வருமாறு: "மனிதன் ஒருவனுக்கு ஈசுவர விசுவாசம் வந்துவிடுமாகில் அவன் அனைத்தையும் அடையப் பெற்றவனா கின்றான். ஈசுவர விசுவாசத்துக்கு நிகரான சம்பத்து வேறொன்றுமில்லை." தன்னம்பிக்கை யும், தெய்வநம்பிக்கையும் உடையவனாக ஒருவன் மாறி அமைகின்றவளவு இகபரத்தில் அவன் எல்லாம் அடையப்பெற்றவனாகின்றான்.

ஸ்ரீ ராமநவமி

பிறப்பெடுத்தவர்கள் எல்லாரும் போற்றுதற்குரியவர் ஆவது இல்லை. யாரோ சிலர் தங்கள் வாழ்வை மனித சமுதாயத்தின் நலனுக்காக ஒப்படைத்துப் பரத்துக்குரியவர்கள் ஆகின்றார்கள். அவர்களுடைய பிறந்த நாள் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. கெட்டவர்களை அழித்து நல்லவர்களைப் பாதுகாப்பதற்கும், அறத்தை நிலைநாட்டுவதற்கும் மஹாவிஷ்ணு பத்து அவதாரங்கள் செய்துள்ளார் என்று சொல்லப்படுகின்றது. அப்படித் தெய்வம் பிறப்பு எடுத்த நாளை விழாவாகக் கொண்டாடுகின்றோம். விஷ்ணுவின் ஏழாவது அவதாரமாக ஸ்ரீ ராமன் சித்திரை மாதத்தில் சுக்கில பக்ஷத்தின் ஒன்பதாம் நாளன்று பிறப்பு எடுத்தார். அந்த நாளை ராமநவமியாகக் கொண்டாடுகின்றோம்.

ராமனைப் போற்றுகின்றவளவு நாம் ராமன் மயம் ஆகின்றோம். அறநெறியே வடிவெடுத்தவர் அவர். அவர் சர்வசக்திமான். அவருக்கு விரோதி யாரும் இல்லை. மக்களிடம் அவர் இனிமையாகப் பேசுவார். தம்மிடம் கடுமையாக நடந்துகொள்பவர்களிடமும் அவர் கடுஞ்சொற்கள் பேசமாட்டார். அவர் ரகுகுல திலகமாவார். ஆண்மையோடும் வீரத்தோடும் விளங்கியதற்கிடையில் கண்ணியமாக நடந்துகொள்வார். அறநெறி காட்டுவதில் அந்தணராக நடந்துகொள்வார். அன்பும், இனிமையும் அவருடைய பேச்சில் திகழும். அவர் மேனி கட்டழகே வடிவெடுத்து இருந்தது. வில்வித்தையிலும், ஆத்மவித்தையிலும் அவர் ஒப்பற்றவராக விளங்கினார். எல்லாருடைய உள்ளத்தையும் தம்பால் ஈர்த்தவராக விளங்கினார். இத்தகைய பண்புகள் யாவும் உருவெடுத்தவராக ராமன் விளங்கினார்.

ராம என்ற சொல்லுக்கு மகிழ்விப்பவர் என்பது பொருள். ராம நாமத்தை உச்சரிக்க உச்சரிக்க உள்ளத்திலுள்ள காமம் போய்விடுகிறது. ராம நாமம் ஓதுகின்றவர்கள் காமத்திலிருந்து விடுபடுகின்றார்கள். ராம நாமத்தை ஓதுகின்றளவு உள்ளத்தில் உறங்கிக் கிடக்கும் ஞானம் விழிப்புணர்ச்சி பெறுகிறது. ராம நாமம் ஓதுகின்றவர்கள் தெய்வீக ஆனந்தத்தில் மூழ்குகின்றார்கள். ஸ்ரீராமனும் அவருடைய நாமமும் மகிமை பொருந்தியவைகளாகின்றன. ராம நாமத்தை ஓதுவதும், ராமன் மஹிமைகளை நினைப்பதும், ராம தியானம் பண்ணுவதும், ராம சேவை பண்ணுவதும் நாம் செய்யவேண்டிய செயல்களாகும்.

ராம நவமி அன்று வைஷ்ணவ ஸ்தலங்களில் ராம நவமியைச் சிறப்பாகக் கொண்டாடுவார்கள். சைவர்களும் ராம நவமியைக் கொண்டாடுவார்கள். ராம நவமி அன்று உபவாசமிருப்பது ஒரு வழிபாடு ஆகும். ஆலயங்களில் ஸ்ரீ ராமனுடைய விக்கிரகத்தை அலங்காரம் செய்து சிறப்பு பூஜை அங்குச் செய்வார்கள். ஆலயங்களிலும், பொது இடங்களிலும் அன்று ராமாயணம் படிக்கலாம். நாள் முழுவதும் ஆலயங்களில் ராம நாமத்தை அகண்ட பஜனையாகச் செய்யலாம். அன்று மக்கள் ஒன்று கூடி ஐக்கிய வணக்கமும், பஜனையும் செய்யலாம். தென் இந்தியாவில் ராம நவமியை ஒன்பது நாட்கள் சிறப்பு வழிபாட்டுடன் கொண்டாடுபவர்களும் இருக்கின்றார்கள். இத்தகைய வழிபாடு செய்கின்றவர்கள் வாழ்க்கையில் மேன்மையுறுவார்கள்.

ராமன் புத்ரோத்தமனாக விளங்குகின்றார். ராமன் ஒப்பற்ற சகோதரனாகவும், ஒப்பற்ற கணவனாகவும், ஒப்பற்ற நண்பனாகவும், ஒப்பற்ற அரசனாகவும் விளங்குகின்றார். ராமனை நிறைநிலை எய்திய மனிதராகக் கூறலாம். அவருடைய ஆட்சி ராமராஜ்யம் என்று சொல்லப்படுகிறது. ராமராஜ்யத்தில் மக்கள் மகிழ்ச்சியுடனும், செல்வாக்குடனும் வாழ்ந்து வந்தார்கள். நேர்மையும், அறநெறியும் உடையதாக ராமராஜ்யம் இருந்தது.

ராம நவமியை ராம பக்தி வளர்வதற்காகக் கொண்டாடுகின்றோம். ராம பக்தி வளரும் பொழுது வாழ்க்கையில் எல்லா மகிமைகளும் ஓங்குகின்றன. தூய்மையும், பக்தியும், நேர்மையும், ஆண்மையும், இனிமையும், பிரேமையும், நிறைநிலையும் நம்மிடத்தில் உண்டாவதற்கு ராம நவமியை உற்சாகத்துடனும், ஊக்கத்துடனும் கொண்டாடி ராமனுடைய அருளுக்குப் பாத்திரமாவோமாக.

அனுமன் கண்ட சீதை

(திரு. K. ராமமூர்த்தி M. Com.)

வான்மீகி ராமாயணத்தில் அனுமனிடம் சூடாமணியைக் கொடுக்கும்போது சீதை:

"ராமபிரானுக்கு உள்ளபடி தெரிந்த அடையாளம் இது; வீரனான ராமன் இம்மணியைக் கண்டதும் மூவர்களான என்னுடையவும், தாயினுடையவும், தசரத மன்னருடையவும் ஞாபகத்தைப் பெறுவார்."

— சுந்தர 39: 1, 2

என்று கூறுவதாக வான்மீகி முனிவர் தெரிவிக்கின்றார். இதற்கேற்றாற்போலவே இந்தச் சூடாமணியை அனுமன் ராமனிடம் தந்தபோது ராமன் அனுமனிடம் பின்வருமாறு கூறியதாக ஆதிகவி பாடுவார்:

"இந்தச் சூடாமணி என்ற ஆபரணோத்தமமானது சீதைக்கு எனது மாமனரால் விவாஹ காலத்தில் கொடுக்கப்பட்டது. நீரில் பிறந்த இம்மணி, மிகவும் மனமகிழ்ந்த இந்திரனால் யாகத்தில் பரிசாகக் கொடுக்கப்பட்டதாகும். இம்மணியைப் பார்த்ததும் என் தந்தையாரையும், ஜிதேந்திரியரான விதேக மன்னரையும் பார்த்ததாக எண்ணுகின்றேன்; சீதையை அடைந்தது போலும் மகிழ்கின்றேன்."

— சுந்தர. 66: 4-7

இந்தச் சூடாமணியை மிகுந்த பணிவோடும் பக்தியோடும் அனுமன் பெற்றுக்கொள்கின்ருன். தன்னுடைய ஆடையில் வைத்து, அதற்குப் பழுது நேராத வண்ணம் பாதுகாப்பாக முடிந்துகொள்கின்ருன். சீதையைப் பிரிய வேண்டிய நேரம் வந்துவிட்டதை நினைத்தும், அவள் படுகின்ற வேதனையைப் பார்த்தும் தன் நோக்கம் நல்ல முறையில் நிறைவேறிவிட்டதை எண்ணியும் அவன் கண்களில் கண்ணீர் வெள்ளம் பெருகிற்று. கூப்பிய கரங்களுடன் சிறையிருந்த செல்வியை மூன்றுமுறை வலம் வந்து வணங்கி விடைபெற நின்ருன். ஓவியத்து எழுத ஒண்ணுத வனப்புடைய வைதேகியும் நிறைந்த மனத்தினளாய் அவனை வாழ்த்தி விடை கொடுத்தாள். அசோக வனத்தை விட்டு அனுமன் புறப்பட்டான். இலங்கையில் அனுமன் நிகழ்த்திய பிற செயல்கள் நம் கட்டுரைக்கு அப்பாற்பட்டவையாதலின் அவை பற்றி இங்கு விவரிக்கப்படவில்லை. சீதையைப் பார்த்து வந்த செய்தியை ராமனிடம் அனுமன் சொல்லும் பகுதி இக்கட்டுரைத் தொடரின் மணிமுடியான பகுதியாதலின் அதனை அடுத்த அத்தியாயத்தில் விரிவாக ஆராய்வோம்.

11. தவம் செய்த தவமாம் தையல்

அனுமன் கண்ட சீதை என்ற இக்கட்டுரைத் தொடரின் மிக முக்கியமான கட்டத்திற்கு வந்திருக்கின்றோம். இதுவே இத்தொடரின் இறுதிப் பகுதியாகும்.

வேதங்களின் இறுதிப் பகுதி வேதாந்தம் என்று பெயர் பெற்று வேதங்களின் மணிமுடியான, சாரமான பகுதியாகத் திகழ்வது போன்று சுந்தரகாண்டத்தின் இறுதிப் பகுதி அக்காண்டத்தின் சாரமாகவும், மணிமுடியான பகுதியாகவும் திகழ்கின்றது.

குரு தத்துவமாக விளங்கும் மாருதி ஜீவாத்மாவான சீதையிடம் பரமாத்மாவான ராமனைப் பற்றிய செய்திகளைக் கூறி, சிறைப்பட்ட ஜீவனுக்கு ஆறுதல் அளித்து, பின்னர் பரமாத்மாவிடம் வந்து, ஜீவாத்மா அதனுடைய நினைவாகப் படும் துயரத்தையும், அதற்காகச் செய்யும் தவத்தையும் எடுத்துக் கூறி ஜீவாத்மாவின் விடுதலைக்கு வழிகோரும் பகுதியே இவ் இறுதிப்பகுதியாகும்.

அனுமன் தான்கண்ட சீதையைப் பற்றி அண்ணலிடம் தெரிவிக்கின்ருன் இப்பகுதியில். சீதை பற்றிய அனுமனின் கணிப்பும் இப்பகுதியில் தான் வெளியாகின்றது. எனவே முனிவர் பெருமானும் கவிச்சக்கரவர்த்தியும் இதனைப் படைப்பதில் மிகுந்த கவனம் எடுத்துள்ளனர் என்பதில் ஐயமில்லை. இங்கும், ஆதிகவியின் போக்கு, வரலாறு கூறும் பாணியில் அமைந்திருப்பதும், கவிச்சக்கரவர்த்தியின் படைப்பு, காப்பிய ரசனையைக் கருத்திற் கொண்டிருப்பதும் வெள்ளிடைமலையாக விளங்கக் காணலாம். முதலில் வான்மீகியைப் பார்ப்போம்.

1. வான்மீகி கண்ட விதம்:

சீதாப்பிராட்டியைத் தான் சந்தித்த விவரங்களை அனுமன் மூன்று சர்க்கங்களில்–65, 67, 68–ராமனிடம் தெரிவிக்கின்ருன். இடையில்

உள்ள 66வது சர்க்கம் அனுமன் கொடுத்த சூடாமணியைக் கண்டதும் ராமன் சீதையை நினைத்து உருகிப் பேசியதைத் தெரிவிக்கின்றது. அந்த மூன்று சர்க்கங்களில் அனுமனின் பேச்சு அமைந்திருக்கும் 86 சுலோகங்களில் சுமார் 42 சுலோகங்கள் முன்னர் 38, 39, 40 வது சர்க்கங்களில் காணப்பட்ட சுலோகங்களேதாம். இவை, சீதை அனுமனிடம் தெரிவித்த செய்திகளையும், அனுமன் சீதையிடம் சொன்னவற்றையும் அதே வார்த்தைகளையே மீண்டும் பயன்படுத்தி ராமனிடம் அனுமன் தெரிவித்ததாகவும் அமைந்துள்ளன.

அனுமன் முதலில் ராமனுடைய பாதங்களில் விழ்ந்து வணங்கினன்.

"दृष्टा देवी"– (காணப்பட்டாள் தேவி 64:38) என்ற அமிழ்தம் போன்ற சொற்கள் அனுமன் வாயிலிருந்து குதித்துக்கொண்டு வெளி வந்தன. வானவர்கள் எல்லாரும் சீதை ராவணன் அந்தப்புரத்தில் சிறை வைக்கப்பட்டிருப்பதையும், அரக்கியரால் மிரட்டப்படுவதையும், ராமனை நினைத்துச் சீதை இயற்றும் தவத்தையும், தன்னுடைய மீட்சிக்காகச் சீதை கொடுத்துள்ள காலத்தவணையையும் ராமனிடம் தெரிவிக்கின்றார்கள். இதனைக் கேட்ட ராமன்: "வானரர்களே! சீதாதேவி எங்கிருக்கின்றாள்? என்னிடத்தில் எப்படி இருக்கின்றாள்? சீதையைப்பற்றிய எல்லா விவரங்களையும் சொல்லுங்கள்" என்று கேட்கின்றான்.

ராமனுடைய கேள்விக்குப் பதில் சொல்லுமாறு வானரர்கள் அனுமனிடம் வேண்டிக் கொள்கின்றார்கள். அதன் பின்னரே, சீதை இருக்கும் திசை நோக்கித் தொழுதுவிட்டுத் தன்னுடைய இலங்கைப் பயணத்தைப் பற்றி விவரமாகக் கூறுகின்றான்.

சொல்லின் செல்வனின் சொல்லமுதத்தைச் சிறிது பருகுவோம்: "ஜனகரின் மகளான சீதையைத் தரிசிக்கும் ஆசையுடன் நூறு யோசனை அகண்ட கடலைத் தாண்டிச் சென்றேன். தென்கடலின் தென்பகுதியில் துராத்மாவான ராவணனுடைய இலங்கா நகரம் இருக்கின்றது. கற்புக்கு அணியான சீதை அங்கு என்னால் காணப்பட்டாள்.தேவரீரிடத்தில் மனத்தைச் செலுத்திய வண்ணம் உயிர் பிழைத்திருக்கின்றாள். அழகான வனத்தில் குரூரமான அரக்கியரால் காவல் காக்கப்பட்டு, அவர்களால் மிரட்டப்பட்டுத் துன்பத்தால் திகிலடைந்தவளாக என்னால் காணப்பட்டாள். சோகத்திற்கு உரியவளல்லாத தேவி இவ்வாறு சோகக் கடலில் துன்பத்தை அனுபவித்துக்கொண்டிருக்கின்றாள். தேவியார் ஒற்றைப் பின்னலான தலைமயிரையுடையவளாய், தரையிலே படுத்திருப்பவளாய், பனிக்காலத்துத் தாமரைபோல் மணமிழந்தவளாய், அரக்கனிடமிருந்து தப்ப வழி காணாதவளாய், அதனால் உயிரையே போக்கிக்கொள்ள உறுதி பூண்டவளாய், அது முடியாததால் பரிதாபமான நிலையிலிருப்பவளாய், இப்படியிருந்த போதும் தங்களிடத்தில் தன் சிந்தையை அர்ப்பணம் செய்துவிட்டவளாய், தேவரீரையே தியானித்துக்கொண்டிருப்பவளாய் என்னால் கவனித்துப் பார்க்கப்பட்டாள். தேவரீரிடத்தில் உள்ள பக்திக்கு எல்லையே இல்லை. தங்களைப்பற்றி நினைப்பதையே கடுந்தவமாகச் செய்துகொண்டிருக்கின்றாள்."

இவ்வாறு கூறிவிட்டுச் சீதை கொடுத்த சூடாமணியை ராமனிடம் சமர்ப்பிக்கின்றான் அனுமன். அதனைக் கண்டதும் ராமனுடைய துக்கம் மடைதிறந்த வெள்ளம்போல் பொங்கி எழுகின்றது. கன்றிடம் தாய்ப்பசுவுக்கு ஏற்படும் அன்பு போன்று தனக்கு இந்தச்சூடாமணியைப் பார்த்ததும் மனம் உருகுவதாக ராமன் கூறுகின்றான். சூடாமணி தர்சனம் சீதையின் தர்சனம் போன்றதே; தாகமுற்றவனுக்கு மீண்டும் மீண்டும் தண்ணீர் கொடுப்பது போன்று சீதையின் பிரிவால் ஏக்கமுற்றிருக்கும் தனக்கும் சீதையின் வார்த்தைகளை மீண்டும் தெரிவிக்கும்படி அனுமனிடம் கேட்கின்றான் ராமன். அதற்கேற்ப அனுமன், தானும் சீதையும் பேசிக்கொண்ட செய்திகளையெல்லாம் அப்படியே – வார்த்தைகளை மாற்றாமல்–மீண்டும் ராமனிடம் எடுத்துரைக்கின்றான்.

வான்மீகியில் சுந்தரகாண்டம் இத்துடன் முடிவடைந்துவிடுகின்றது. அனுமனின் பேச்சிற்கு ராமன் பதில் கூறும் பகுதி யுத்தகாண்டத்தின் முதல் சர்க்கத்தில் காணப்படுகின்றது. அனுமனின் இலங்கை விஜயம்பற்றிக் கேட்டு வள்ளல் அவனுடைய அறிவையும் ஆற்றலையும், தன்மீது அவன் கொண்டுள்ள

அன்பினையும் பாராட்டுகின்றான்:

"நானும், ரகுவம்சமும், மகாவீரனாகிய இலக்குவனும் ஜானகியைத் தர்மத்தின் பயன் எனக் கருதினோம். நீ அவளை அங்ஙனமே கண்டு வந்து இப்பொழுது பேருதவி செய்துள்ளாய். பிரியமான செய்தியைச் சொன்ன அனுமனுக்கு ஏற்ற உதவியை இப்பொழுது செய்யமுடியாதிருக்கின்றேன். என்னுடைய இயலாமை எனது மனத்தை மேலும் வாட்டுகின்றது. இந்த நிலையில் மகாத்மாவான இந்த அனுமனுக்கு எல்லாவற்றினும் மேம்பட்டதான இந்த ஆலிங்கனம்தான் என்னால் செய்யப்படுகின்றது."

–வான்மீகி ராமாயணம் யுத்தகாண்டம் 1:11-13

இவ்வாறு சொல்லி, அனுமனுடைய பேருதவியால் உள்ளம் பூரித்த ராமன் அனுமனை அன்புடன் தழுவிக்கொண்டான்.

தவச் செல்வி பற்றிய செய்திகளைத் தன் தலைவனிடம் அனுமன் தெரிவிக்கும் அழகினைக் கம்பன் எடுத்துரைக்கும் முறையை விரிவாகப் பார்ப்பதற்கு முன்னர் ஆதி கவியும் கவிச்சக்ரவர்த்தியும் வேறுபடும் பகுதிகளைச் சுருக்கமாகக் கொள்வது பயனுடைத்தாகும்.

1. வான்மீகிராமாயணத்தில், அனுமன் முதலியோர் ராமனிடம் வந்து செய்தி சொல்ல ஆரம்பிக்கும் முன்பே அவர்கள் மதுவனத்தில் நடத்திய கேளிக்கை பற்றி ராமனுக்குத் தெரிந்து விடுகின்றது. வானரர்களின் இந்த நடவடிக்கையை ஆதாரம் காட்டி, அவர்கள் சீதையைக் கண்டுபிடித்திருப்பார்கள் என்று சுக்ரீவன் ராமனிடம் தெரிவித்து அவனைச் சமாதானப் படுத்துகின்றான்.

கம்பராமாயணப் பதிப்புக்களில் சிலவற்றில் மதுவன நிகழ்ச்சி சேர்க்கப்பட்டிருந்தாலும் கம்பராமாயணப்பதிப்புக்களில் பலவற்றில்இந் நிகழ்ச்சி இல்லை. கம்பனுடைய நாடகப்போக்கிற்கு இந்நிகழ்ச்சி மிகவும் அசம்பாவிதமாகக் காணப்படுவதால் இதனை இடைச் செருகல் என்றே கருதவேண்டியுள்ளது. தன்னுடைய விடுதலைக்காகச் சீதாபிராட்டி விதித்திருந்த ஒரு மாத தவணைக்குள் பல பெரிய காரியங்களை நிறைவேற்றவேண்டிய கட்டாயம் இருப்பதால் செயல் வீரனான அனுமன் மதுவனக் கேளிக்கைகளில் ஈடுபட்டானென்றோ, மற்றவர்களை அதற்கு அனுமதித்தானென்றோ கொள்வது காப்பிய ஓட்டத்திற்குச்சிறிதும் பொருந்தமற்றதாகும் என்பது தெளிவு. எனவே அனுமன் எவ்வளவு சீக்கிரம் ராமபிரானிடம் செய்தி தெரிவிக்கின்றானோ அவ்வளவுக்கு அவ்வளவு சீதையின் சிறைவாசக் கொடுமை விரைவில் நீங்கும் என்ற உணர்வு வானரர்களுக்கு இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. இதனால்தான் கம்பனில், வானரர்கள் ராமனிடம் விரைவில் சீதை பற்றிய செய்தியைச் சொல்ல முடிவு செய்து, எல்லாரும் ஒன்றாகத் திரும்பிச் செல்வதுகூடக் காலதாமதமாகும் என்று தீர்மானித்து அனுமனை மட்டும் முதலில் விரைவாகச் சென்று ராமனிடம் செய்தி சொல்லுமாறு அனுப்புகின்றனர். அவ்வாறு அனுமனைத் தனியாக ராமனிடம் அனுப்பிவிட்ட பின்னரும் ஏனைய வானரர்களும் தாமதமின்றி விரைவாக ராமனிருக்குமிடம் நோக்கிப் புறப்பட்டனர். எனவே, கம்பனில் மதுவன நிகழ்ச்சி இல்லையாதலால் அனுமன் ராமன் இருக்குமிடம் வருவது எதிர்பாராத ஒரு நிகழ்ச்சியாகி விடுகின்றது. தென்திசை சென்ற வீரர்கள் என்ன ஆனார்களோ என்று காகுத்தன் கவலைப்பட்டுக் கதிரவன் மைந்தனிடம் பேசிக்கொண்டிருக்கும்போதே அனுமன் தென்திசையில் தோன்றினான் என்பார் கம்பர்.

2. வான்மீகத்தில் அனுமன் கூற்றாக வரும் 86 சுலோகங்களில் சுமார் 42 சுலோகங்கள் ஏற்கனவே இலங்கையில் அனுமன்-சீதை உரையாடலில் காணப்பட்டவையே. எனவே, தானும் சீதையும் என்ன பேசிக்கொண்டோம் என்பதை ராமனிடம் தெரிவிப்பதே அனுமனுடைய முக்கியப் பணியாக இங்குக் காட்டப்படுகின்றது. அசோகவனத்தில் சீதை இருந்த தோற்றம், பிரிவுத்துயரில் அவள் வருந்தும் பான்மை இவற்றை வர்ணிப்பதுடன் சீதை பற்றிய அனுமனின் கணிப்பு முடிந்துவிடுகின்றது வான்மீகியில்.

கம்பனில் அனுமன் ராமனிடம் சொல்லிய செய்திகள் 22 பாடல்களில் கூறப்பட்டுள்ளன. இதில் அனுமன்-சீதை உரையாடல் பற்றிய விவரங்கள் சுமார் மூன்று பாடல்களில் முடிந்து விடுகின்றன. சுமார் பத்துப்பாடல்கள் அனுமன் தான் கண்ட சீதையின் பண்பு நலன்கள்பற்றி ராமனிடம் கூறுவதைத் தெரிவிக்கின்றன.

அனுமன் கண்ட சீதையை இந்தப் பாடல்கள் தாம் நமக்குத் தெளிவாக்குகின்றன. இவற்றில்தாம் அனுமனின் கூர்த்த அறிவும் சொல் வன்மையும் மலையிலக்காக நமக்கு விளங்குகின்றன. இலங்கைப் பயணம் பற்றி ஏனைய செய்திகள் இலங்கா தகனம் தவிர மற்ற பாடல்களின் மூலம் இரத்தினச் சுருக்கமாக, ஆனல் சுவையான முறையில் அழுத்தமாக அனுமனுல் தெரிவிக்கப்படுகின்றன.

வான்மீகத்தில் சீதை சொல்லியனுப்பிய அடையாள நிகழ்ச்சிகளை அனுமன் விரிவாகக் கூறுகின்றுன். ஆனல் கம்பனில் அவைபற்றி அனுமன் பேசுவதாகக் காணப்படவில்லை. சீதையிடம் தெரிவிக்குமாறு சில அடையாள மொழிகளை அனுமனிடம் ராமன் சொல்லியனுப்பிய செய்தி வான்மீகத்தில் இல்லாதது, கம்பன் சேர்த்துக்கொண்டது என்பதை நாம் நினைவிற்கொள்ளவேண்டும்.

3. வான்மீகத்தில் அனுமன் தன் பேச்சுக்கு இடையிலேயே சீதை கொடுத்தனுப்பிய சூடாமணியை ராமனிடம் தந்து விடுகின்றுன். எனவே, 65, 67, 68 சர்க்கங்களில் அனுமனின் செய்தி தெரிவிக்கப்படும்போது இடையே 66 வது சர்க்கம் சூடாமணி கண்ட ராமனின் நிலைபற்றி விவரிக்க முற்பட்டு விடுகின்றது. இந்த இடையீடு கம்பனில் இல்லை. சீதை பற்றிய செய்தி முழுவதையும் ராமனிடம் தெரிவித்த பின்னரே, தன் பேச்சிற்கு முத்தாய்ப்பு வைப்பவன்போன்று, இறுதியில்தான் (Climax) அனுமன் சூடாமணியை ராமனிடம் தந்ததாகக் கதை நடத்துவான் கவிச்சக்கரவர்த்தி. சூடாமணி கைமாறிய பின்னர் அனுமனே, ராமனே பேசுவதில்லை என்று காட்டி அந்த உணர்ச்சிவசமான காட்சியை முடிவுக்குக்கொண்டு வருகின்றுன் கம்பன்.

4. சீதைபற்றிய செய்திகளை அனுமன் சொல்லிக்கொண்டிருக்கும்போதே இடையிடையே ராமன் பேசுவதாக வான்மீகி குறிப்பிடுகின்றுர். வானரர்கள் சீதைபற்றிச் சொன்னபோது 'சீதை எங்கு இருக்கின்றுள்? என்னிடத்தில் எப்படி இருக்கின்றுள்?' என்றெல்லாம் ராமன் கேட்கின்றுன். பின்னர் சூடாமணியைப் பெற்றுக்கொண்டபோதும் அதைப் பற்றித் தான் நினைப்பதையெல்லாம் சொல்லுகின்றுன்.

கம்பனில் அனுமன் பேச ஆரம்பித்த பின்னர் ராமனிடமிருந்து பேச்சு எதுவும் இல்லை. அனுமன் வரும் முன்பு சுக்ரீவனிடம் தென்திசை சென்ற வீரர்கள் என்ன ஆனுர்களோ என்று ராமன் தன் கவலையைத் தெரிவிக்கின்றுன். அத்துடன் சரி; அனுமன் வந்த பின்னர் ராமன் பேசுவதில்லை. அனுமனின் அமிர்தம் போன்ற சொற்பெருக்கில் மூழ்கித் தன்னையே மறந்து விடுகின்றுன் ராமன். இறுதியில் சூடாமணியைப் பார்த்தபோதும் உணர்ச்சிப் பெருக்கினுல் அவனிடமிருந்து வார்த்தைகள் ஏதும் வெளிவரவில்லை. தன்னை மறந்த நிலையிலிருந்த ராமனைச் சுக்ரீவன்தான் சுய உணர்விற்குக்கொண்டு வருகின்றுன்; உடனே செயல்படவேண்டிய அவசியத்தையும் அவசரத்தையும் தெரிவிக்கின்றுன். அப்புறம்தான் தன் உணர்வு பெற்ற ராமன் படைகள் புறப்படுவதற்கான கட்டளையிட வாய்திறக்கின்றுன். இதில் வான்மீகியின் கதை சொல்லும் பாணியையும் கம்பனின் நாடகத் திறமையையும் ஒப்பிட்டு மகிழலாம்.

5. ஆதிகாவியத்தில் அனுமனுக்கு ராமன் நன்றி சொல்கின்றுன்; அவன் செய்த உதவிக்கு எவ்விதம் பிரதி உபகாரம் செய்வது என்று தெரியாமல் தான் திகைப்பதாகக் கூறுகின்றுன்; அவ்வாறு இருக்கும் தன் நிலையை நினைத்துத் தன்னைத்தானே நொந்து கொள்கின்றுன் தாசரதி.எனினும் மிகச்சிறந்த பரிசாக, பாராட்டாக அனுமனைத் தழுவிக் கொள்கின்றுன் அறத்தின் மூர்த்தி.

கம்பனில் ராமன் அனுமனுக்கு நன்றி சொல்வதாக இல்லை. ராமன் எதுவுமே பேசுவதில்லை என்று முன்பே பார்த்தோம். பின்னர் யுத்த காண்டத்தில் வீடணன் வாயிலாக அனுமன் இலங்கையில் ஆற்றிய பெரும் செயல்களையெல்லாம் கேள்வியுற்ற ராமன் அவனைப் பாராட்டி அவனுக்கு 'பிரம்ம பட்டத்தை' அளிக்கின்றுன். [Cf. யுத்தகாண்டம்.இலங்கை கேள்விப்படலம் 70-72].

இனி, கம்பன் காவியத்துள் கவிக்குலத்தோன் கற்புக்கரசியைத் தான் கண்டு வந்த கதையைக் காகுத்தனிடம் கட்டுரைக்கும் வண்ணத்தை அடுத்த பிரிவில் காண்போம்.

ஆத்ம போதம்

(திரு V. S. நரசிம்மன்)

तावत्सत्यं जगद्भाति शुक्तिकारजतं यथा ।
यावन्न ज्ञायते ब्रह्म सर्वाधिष्ठानमद्वयम् ॥ ७

यथा (யதா) எவ்வாறு, शुक्तिकारजतं (சுக்திகா ரஜதம்) கிளிஞ்சலில் வெள்ளி, भाति (பாதி) தோன்றுகின்றதோ, (तथा - ததா - அவ்வாறு) सर्व अधिष्ठानं (சர்வ அதிஷ்டானம்) அனைத்திற்கும் ஆதாரமான अद्वयम् (அத்வயம்) இரண்டற்ற ब्रह्म (பிரம்ம) பிரம்மமானது यावत् न ज्ञायते (யாவத் ந க்ஞாயதே) எதுவரை அறியப் படவில்லையோ, तावत् (தாவத்) அதுவரை जगत् (ஜகத்) உலகம் सत्यं भाति (ஸத்யம் பாதி) உண்மையென்றே காணப்படுகின்றது.

அனைத்திற்கும் ஆதாரமான அத்வைதப் பிரம்மத்தை அறியாதவரை, கிளிஞ்சலில் வெள்ளி தோன்றுவது போல், பிரம்மத்தில் உலகம் தோன்றி உண்மையாகக் காணப்படுகிறது.

ஆறுவது சுலோகத்தில் சம்சாரம் கனவைப் போல் பொய்; விழித்து எழுந்தவுடன் அது இல்லை என்று கூறப்பட்டது. சம்சாரத்தின் தோற்றம் உண்மையாக எதுவரை தோன்றுகின்றது என்ற விஷயம் மேலும் விளக்கப்படுகின்றது.

பிரம்மத்தைக் குறிக்க இரண்டு சொற்கள் சர்வ அதிஷ்டானம், அத்வயம் என்று ஈண்டு பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்வயம் எனின் இரண்டற்றது-தனக்கு அன்னியமாக வேறு எதுவும் இல்லாதது என்று பொருள்படும். சர்வ – நாமரூபங்களோடு கூடிய அனைத்தும் இச்சொல்லால் குறிக்கப்படுகின்றன. அனைத்திற்கும் அதிஷ்டானமாக–ஆதாரமாக இலங்குவது பிரம்மம். ஆதாரத்தின் இலக்கணம் யாது? தன்னளவில் மாற்றம் சிறிதுமின்றி, தோற்றத்திற்குக் காணப்படாது உள்ள ஒரு வஸ்து. வேறு ஒரு தோற்றத்திற்கு இடமளித்து, பொய்யான அத்தோற்றத்தை மெய் போல் காட்டுகின்றது. அத்தகைய வஸ்துவே அதிஷ்டானம். பிரம்மம் இத்தகைய அதிஷ்டானம் என்பதை சுலோகத்தில் உள்ள உவமை அழகாக விளக்குகின்றது. வெள்ளி உண்மையில் வெறும் தோற்றமே, அது அசத்; ஆனால் பளபளக்கும் வெளிச்சத்தில் கிளிஞ்சலை மறைத்துக்கொண்டு வெள்ளி தன்னையே காட்சிக்கு உரியதாக்குகின்றது. இத்தகைய தோற்றத்திற்கு ஆதாரம் கிளிஞ்சல். வெயில் அடித்தாலும் மழை பெய்தாலும் அது மாற்றம் அடைவதில்லை. அஞ்ஞானத்தால், சூழ்நிலை வசத்தால் அதனை ஒருவர் வெள்ளியாகக் கண்டாலும் அது கிளிஞ்சலே. அறியாமை நீங்கிய பின்னும், வெள்ளி என்ற பிரமை நீங்கிய பின்னும் அது எவ்வித மாற்றமுமின்றி முன்பு இருந்தது போன்றே உள்ளது இங்ஙனம் காலத்ரயத்திலும் மாறாத கிளிஞ்சல், தோன்றி மறைகின்ற வெள்ளிக்கு ஆதாரம் (அதிஷ்டானம்). அதுபோல் பிரபஞ்சம், அதில் உள்ள நாமரூபங்களோடுகூடிய பொருள்கள் அனைத்தும் தோன்றுவது, உண்மை என்ற மயக்கத்தை உண்டாக்குவது ஆகியவை அதிஷ்டானமாகத் திகழும் பிரம்மத்தினால்தான்.

பிரம்மம் வெறும் ஆதாரம் மட்டுமன்று. ஆதாரமான ஒன்று ஆரோபிதம் வேறு ஒன்று என்றஐயம் உண்டாகக்கூடாது. எனவே அது அத்வயம்-இரண்டற்றது என்றும் உணர்த்தப்படுகின்றது. கிளிஞ்சல்-வெள்ளி உதாரணம் அதிஷ்டான இலக்கணத்தை மட்டுமே குறிக்கும். இரண்டு பொருள்கள் என்று மயக்கமுறலாகாது. 'ஈசா வாஸ்யம் இதம் ஸர்வம்' என்பதுபோல் ஆதாரம், ஆரோபிதம் அனைத்தும் பிரம்மமே'. ஆரோபிதம் அஞ்ஞானம் உள்ளவரை, அதிஷ்டான பிரம்மத்தை அறியாதவரை, மெய்போன்று காட்சியளிக்கும். இதையே வியவஹார சத் என்றுகுறிப்பிடுவர்.

उपादानेऽखिलाधारे जगन्ति परमेश्वरे ।
सर्गस्थितिलयान् यान्ति बुद्बुदानीव वारिणि ॥ ८

वारिणि (வாரிணி) கடலில், बुद्बुदानीव (புத்புதானீவ) நீர்க்குமிழிகளைப் போல், जगन्ति (ஜகந்தி) உலகங்கள் அனைத்தும், उपादाने (உபாதானே) மூலப்பொருளாகவும், अखिलाधारे (அகிலாதாரே) அனைத்திற்கும் ஆதாரமாகவும் உள்ள परमेश्वरे (பரமேச்வரே) இறைவனிடத்தில் सर्ग (ஸர்க) தோற்றம், स्थिति (ஸ்திதி) இருப்பு, लयं (லயம்) அழிவு, यान्ति (யாந்தி) அடைகின்றன.

"கடலின் மேற்புறத்து நீர்க்குமிழிகள் தோன்றி மறைவதைப் போன்று, அனைத்திற்கும் உபாதான காரணமாக உள்ள பரமனிடத்தில் அகிலங்கள் தோன்றி, நிலைபெற்று, ஒடுங்குகின்றன." உலகத்தின் தோற்றம், நிலை, அழிவு ஆகிய மூன்று செயல்களுக்கும் கர்த்தா பரப்பிரம்மம். மும்மூர்த்திகள் என்று நம்மால் வழிபடப்பட்டு வரும் தெய்வங்கள் பரப்பிரம்மத்தின் வடிவங்களே; காரியத்தைப் பொறுத்தே பெயர் மாறுகின்றது.

பிரம்மம் உபாதான காரணம் எனப்படுகின்றது. ஒரு காரியத்தை நிறைவேற்றப் பயன்படும் மூலப்பொருள் உபாதானம். பானைக்கு மண் உபாதானம். குயவனை நிமித்த காரணம் என்பர். உலகைப் படைத்த சைதன்ய சொரூபமான பிரம்மம் நிமித்த காரணம் என்று அனைவரும் எளிதில் ஒப்புக்கொள்வர். ஆயினும் இதற்கு உபாதான காரணமும் அவரே. உபநிடதம் உரைப்பதாவது: "வலையைப் பின்னும் சிலந்தி, அதற்கான மூலப்பொருளைத் தன்னிடமிருந்தே எடுக்கின்றது. அதுபோன்று அகிலாண்ட கோடிகளைப் படைக்கும் இறைவன் தானே அதற்கு வேண்டிய மூலப்பொருளாக இலங்குகின்றார். (யதா யதா ஊர்ண நாபி: ஸ்ருஜதே க்ருஷ்ணதே ச—முண்டக உபநிஷதம் I 1:7)."

காரணம்—உபாதானம், நிமித்தம், சஹாயகி (துணை) என மூவகைப்படும். காரியம் எந்தக் காரணத்தினின்று சிறிதும் பிரியாது, அதோடு நிலைத்து, நாசமடைகின்றதோ. அஃது உபாதான காரணம்; குடம் மண்ணை விட்டுப்பிரியாதிருப்பது போல்.

இறைவனை மும்மூர்த்தியாக வழிபடுதல் இயல்பு. வியத்தகு முறையில் இலங்கும் உலகைக் காண்போர் அதற்கு வடிவம் தந்த கர்த்தாவை, ஆதி காரணத்தைப் போற்றுதல் இயற்கை தானே! 'பொல்லாப் பிரமமா, படைத்து விட்டாய் அம்மாவோ' என்று பாரதி வியந்து பாடுகின்றார். இறைவனை சிருஷ்டி கர்த்தாவாகக் குறிப்பது தடஸ்த லக்ஷணம் ஆகும். ஒரு குறிப்பிட்ட வித்தியாசத்தைக்கொண்டு ஒன்றை மற்றப் பொருள்களிலிருந்து பிரித்துக் காண்பது—தடஸ்த லக்ஷணம் ஆகும். ஒரு கூட்டத்தில் தொப்பி அணிந்தவர் ஒருவரே இருப்பின் 'தொப்பி' அவருக்கு தடஸ்த லக்ஷணம். தொப்பியை அகற்றி விட்டால், பிரித்துப் பார்க்க வேறு இலக்கணம் கிடையாது. அங்ஙனம் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹார மூர்த்தியாகப் பிரம்மத்தைக் குறிப்பதும் தடஸ்த லக்ஷணமாகும்.

सच्चिदात्मन्यनुस्यूते नित्ये विष्णौ प्रकल्पिताः ।
व्यक्तयो विविधाःसर्वा हाटके कटकादिवत् ॥ ९

सत् चित् आत्मनि (ஸத்சித் ஆத்மனி) சச்சிதானந்தப்பரம்பொருளில் नित्ये (நித்யே) நிலைத்திருக்கும், विष्णौ (விஷ்ணௌ) வியாபித்திருக்கும் பரமனில் विविधाः सर्वाः (விவிதா: ஸர்வா:) பலவகைப்பட்ட அனைத்துமாகிய व्यक्तयः (வ்யக்தய:) தோற்றங்கள் அனைத்தும் प्रकल्पिताः (பிரகல்பிதா:) கற்பிக்கப்பட்டவைகளாக अनुस्यूते (அநுஸ்யூதே) தொடுக்கப்பட்டுள்ளன, यथा (யதா) எங்ஙனம், हाटके (ஹாடகே) பொன்னில் कटकादिवत् (கடகாதிவத்) கடகம் போன்ற ஆபரணங்களைப் போல்.

"தங்கத்தில் வளையல், கடகம்போன்றதோற்றங்கள் காணப்படுகின்றன. அதுபோன்று பலவகைப்பட்ட தோற்றங்கள் அனைத்தும் சச்சிதானந்தமாய், எங்கும் நிறைந்ததாய் நித்தியமாய் உள்ள பரம்பொருளில் கற்பிக்கப்படுகின்றன."

'காரண-காரிய' வாதம் ஹிந்துமத தர்சனங்களில் பலவாறு விளக்கப்படுகின்றது. ஒரு காரணத்தால், அதற்குச் சிறிதும் தொடர்பற்ற, இதற்கு முன் இல்லாத காரியம் விளைகின்றது என்பது அஸத்காரிய வாதம். நியாய தர்சனத்தைக் கடைப்பிடிப்போர் (நையாயிகள்) இதனை ஏற்பர். சத்காரிய வாதிகளுக்கு இக்கூற்று ஏற்புடைத்தன்று. குறிப்பிட்ட விளைவு வேண்டும் என்றால், குறிப்பிட்ட காரணத்தையே நாடுகின்றோம். மணலில் இருந்து தயிரோ, எண்ணெயோ கிடைக்காது. காரியம் காரணத்தில் மறைந்துள்ளது. காரியமாகத் தோன்ற மாற்றம் ஒன்று தேவைப்படும். பால் தயிர் ஆவது போன்று, பரிணமம் அவசியம் என்பர்.

சத்காரியத்தை ஏற்கும் அத்வைதிகள் பரிணமத்தை அங்கீகரிப்பதில்லை. தன்னளவில் மாற்றம் ஏதும் அடையாமல் கயிறு பாம்பெனத் தோன்றுகின்றது. இது விவர்த்த

வாதம் எனப்படும். மாற்றமே அடையாத பிரம்மனாகிய அதிஷ்டானத்தில் உலகம் ஆரோபிதமாகக் கல்பிக்கப்படுகின்றது.

இந்தச் சுலோகத்தில் பிரம்மத்தின் ஸ்வரூப லக்ஷணங்கள் குறிக்கப்படுகின்றன. சத்சித் ஆத்மன் என்பது பிரம்மத்தின் சொரூபமே. 'விஷ்ணு' என்ற பதம் காக்கும் தெய்வமாகிய திருமாலை மட்டும் குறிப்பதில்லை. எங்கும் வியாபித்திருக்கும் பரம்பொருள் என்ற பொருளில் இப்பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய பரம்பொருளின் மீது நாம ரூபங்களைக் கொண்ட வியக்திகள் கற்பிக்கப்படுகின்றன. நகைகளின் பெயரும், வடிவமும் மாறினாலும் அடிப்படையில் அது மாறாத தங்கமே. வாசரம்பளம் விகாரோ நாமதேயம் ம்ருத்திகேவ சத்தியம்—பெயரும் வடிவமும் சொற்களே. மண் ஒன்றே சத்தியம் என்று உபநிஷத் இந்த உண்மையைக் காட்டுகின்றது.

த்ருக்-த்ருச்ய விவேகம் என்ற கிரந்தத்தில் ஒரு சுலோகம் இக்கருத்தை அழகாக விளக்குகின்றது. எந்தப் பொருளிலும் ஐந்து அம்சங்கள் காணப்படுகின்றன. அஸ்தி (இருப்பு), பாதி (பிரகாசம்), பிரியம்(இன்பத்தைத் தரல்), நாமம் (பெயர்), ரூபம் (வடிவம்) என்பவை இவை. இவற்றில் முதல் மூன்றும் பிரம்மத்தின் லக்ஷணங்கள்; கடைசி இரண்டும் மாயையின் தன்மையாம். பிரம்மத்தின் ஸ்வரூப லக்ஷணங்கள் என்றும், எவ்விடத்தும் மாறாத அடிப்படை உண்மைகளாம். மாறுகின்ற நாம ரூபங்களால் தான் உலகில் பல்வேறு தோற்றங்களும் உண்டாக்கப்படுகின்றன. விவிதா: என்பதால் பல்வேறு பொருள்களையும் சர்வா: என்பதால் விலக்கு ஏதுமின்றி அனைத்துக் காட்சிப் பொருள்களையும் குறிப்பிடுகின்றார். தங்க நகைகளின் உதாரணம் இந்தக் கருத்தைத் தெளிவாக்குகின்றது.

यथाऽऽकाशो हृषीकेशो नानोपाधिगतो विभुः ।
तद्भेदाद्भिन्नवद्भाति तन्नाशात् केवलो भवेत् ॥ १०

विभुः (விபு:) எங்கும் பரந்த हृषीकेशः (ஹ்ருஷீகேச:) புலன்களுக்குத் தலைவனான பரம்பொருள், यथा (யதா) எவ்வாறு आकाशः (ஆகாச:) ஆகாசமானது (பிளவுபட்டதாகக் காணப்படுகின்றதோ, அவ்வாறு) नाना उपाधिगतः (நானா உபாதிகத:) பல்வேறு உபாதிகளை அடைந்து तत् भेदात् (தத் பேதாத்) அவற்றின் வேறுபாட்டினால் भिन्नवत् (பின்னவத்) பிளவுபட்டது போல் भाति (பாதி) தோன்றுகிறது. तत् नाशे (தத் நாசே) உபாதிகள் அழிந்த பிறகு केवलः (கேவல:) தனிப்பட்ட பரம்பொருளாக भवेत् (பவேத்) தோன்றுகின்றது.

"ஆகாயம் ஒன்றே; ஆயினும் உபாதிகளால் அது பிளவுபட்டது போல் தோன்றுகின்றது. அதுபோல் உபாதிகளால் சூழப்பட்ட பிரம்மம் அவற்றால் பின்னப்பட்டது போல் காணப்படுகின்றது. உபாதிகள் அழிந்தவுடன் தன்னந் தனியனாக ஆத்மன் பிரகாசிக்கின்றது."

விபு: என்ற சொல் பரந்தது எனப் பொருள்படும். அதற்கேற்பப் பரந்த வெட்ட வெளி உவமானமாகத் தரப்படுகின்றது. இதனை கட ஆகாசம், மஹா ஆகாசம் என்று பிரித்தாலும், அது உண்மையில் பிளவுபடுத்தப்படுவதில்லை. அப்பிளவு தோன்றக் காரணமாக அமைந்தது உபாதி ஆகும். அகண்டமான வஸ்துவைக் கண்டமாக்குவது உபாதியே. கடம் என்ற உபாதியால் கடாகாசம் தோன்றுகின்றது. கடம் அழிந்தால், உபாதி நசிந்தால், கடாகாசம் என்ற தோற்றம் அழிந்து ஆகாசம் என்பது ஒரே வெட்டவெளியாக (கேவல ஸ்வரூபமாக) விளங்குகின்றது.

விபுவாகத் திகழும் பரம்பொருளும் உபாதியினால் வேறாகத் தோன்றுகின்றது. அகண்டம் (பிளவுபடாதது) கண்டமாகின்றது; 'ஏகம்' அநேகமாகத் தோற்றம் அளிக்கின்றது. உபாதி அழிந்துபட்டால், நிஜஸ்வரூபம் உள்ளது உள்ளபடி விளங்குகின்றது. இதனுடைய நிலையில் புதிய மாற்றமோ, வேறு நஷ்டமோ இல்லாது கேவல சைதன்யமாகத் திகழ்கின்றது.

ஹ்ருஷீகேச: என்ற சொல்லை ஆராய்வோம். பகவத்கீதையின் இரண்டாம் அத்தியாயம் ஒன்பதாவது சுலோகத்தில் அர்ச்சுனன் 'குடாகேசன்' என்றும் ஸ்ரீ கிருஷ்ணன் 'ஹ்ருஷீகேசன்' என்றும் வர்ணிக்கப்படுகின்றனர். 'குடாகாஜம் ஈச:-கண் இமைகளை வென்றவன் (தூக்கத்தை வென்றவன்) அர்ச்சுனன்; ஒரு குறிப்பிட்ட இந்திரியத்தை மட்டும் வெற்றி கொள்வது சிறந்த கட்டுப்பாடு ஆகாது. ஏதே

னும் ஒரு செயலில், பழக்கத்தில் மிகவும் உறுதியாக இருப்பது ஆத்ம சாதனைக்குப் போதாது. இத்தகைய இயல்புடையோர் அர்ச்சுனனைப் போல் சங்கடமான, பிரச்சினைக் குரிய சமயத்தில் (Crisis) வலிவை இழந்து விடுவர். ஆயினும் ஸ்ரீ கிருஷ்ணனே ஹ்ருஷி கேசன்; எல்லா இந்திரியங்களுக்கும் தலைவன். எனவே சாதகன் அனைத்து இந்திரியங்களையும் அடக்கிப் பழக வேண்டும். அதுவே சரியான யோகப்பயிற்சி ஆகும்.

வேதாந்தத்தில் பயன்படுத்தப்படும் உபாதி களாவன: a) பாசிபடிந்த நீர் b) ஸ்படிகத்தின் முன் உள்ள மலர். c) திரைக்குப் பின் உள்ள மனிதன். d) பேய் என்று அச்சுறுத்தும் மரம். e) தண்ணீரில் அமிழ்த்தப்பட்டு மாசு படிந்த அகில் (அல்லது சந்தனக் கட்டை). f) துணிகளால் மறைக்கப்பட்ட வைரக்கல்.

ஸ்வரூபத்தைச் சிறிதும் பாதிக்காது, தனது சேர்க்கையினால் மாற்றம் உண்டாவது போல் செய்வதே உபாதி எனக் கண்டோம். உபாதி களின் இலக்கணத்தை இந்த ஆறு உதாரணங் களும் விளக்குகின்றன.

பிளவைப் பிளவுபட்டது போல் என்று கூறி, 'பிரம்மம் உண்மையில் மாற்றத்திற்கு உட்படுவதில்லை' என்று உணர்த்துகிறார். பல குடங்களில் பிரதிபலிக்கும் ஒரே சூரியன் பல வாகக் காணப்படுகின்றது. ஒரு குடத்தில் அசைவு இன்றியும், வேறு ஒன்றில் அசைவது மாகவும் தோன்றுகின்றது. ஒரு குடம் உடைக் கப்பட்டால் அதில் இருந்த சூரியனும் அழி கின்றது. ஆனால் சூரியனிடத்தில் அசைவோ, அழிவோ கிடையாது. உபாதிகளால் தோன் றும் மாற்றமும் நாசமும் இத்தகையனவே.

உபாதிகளின் அழிவிற்குப் பின் பிரம்மம் தானே உள்ளபடி பிரகாசிக்கின்றது. சாத னைக்கு இந்தக்கருத்துப் பயன்படும். சரீரத்ரயம், பஞ்சகோசம் ஆகியவை உபாதிகளாம். எனவே தியானத்தில் ஈடுபடும் பொழுதும், ஆத்ம சாதனையைப் பின்பற்றும் பொழுதும், 'எந்தச் சரீரநிலையில் இருந்து மனம் செயல்படு கின்றது, 'எந்தக் கோசத்தில் மனம் இருக்கின் றது' என்று உணர்ந்து, அதனின்று மனதைப் பிரித்தெடுத்துப் பழகவேண்டும். உபாதியின் தோற்றம், தன்மையை உணர்ந்து, அதற்கு விலக்ஷணமான பிரம்மத்தின் ஸ்வருபத்தை அனுசந்தானம் செய்வதே தியானம் ஆகும். இந்தச் சாதனை முறையை இச்சுலோகம் உணர்த்துகின்றது.

இந்தியா ஒரு புண்ணிய பூமி. சமயமும் தத்துவமும் இந்நாட்டுக்கு உரியவை. இது ரிஷிகளுக்குப் பிறப்பிடம். இது ஒரு தியாகபூமி. தொன்றுதொட்டு இன்று வரையிலும் வாழ்க் கையின் உயர்ந்த லட்சியத்தை மக்களுக்கு இது காட்டித்தந்து கொண்டிருக்கிறது. இந்நாட் டுக்குச் சமயம் முதுகெலும்பு போன்று அமைந்திருக்கின்றது. சமூகச் சீர்திருத்தம் போன்ற மற்றவைகளெல்லாம் இங்கு இரண்டாம் இடம்பெறுகின்றன. சமயம் இங்கு மறைந்து மங்கி இருப்பது போன்று தோன்றினும் அது இந்நாட்டுக்கு உயிர்நாடியாகும். அரசியல், சமூகச் சீர் திருத்தம், நிவாரணப்பணி போன்றவைகளெல்லாம் சமயத்தின் மூலமாகவே இங்குச் செய லுக்கு வரவேண்டும். சமயத்தைப் புறக்கணித்துவிட்டு அக்காரியங்களில் நீங்கள் கருத்துச் செலுத்துவீர்களானால் இருந்த இடம் தெரியாமல் அழிந்து போவீர்கள்.

உடல் உழைப்பை நம்பி வாழும் பாமர மக்கள் அமைதியான முறையில் நெடுங்கால மாகப் பணி புரிந்துவருகின்றார்கள். அவர்கள் நாட்டுச்செல்வத்தை வளர்த்திருக்கின்றார்கள். ஆனால் அதைப்பற்றி அவர்கள் ஒன்றும் பேசுவதில்லை. அவர்கள் புத்தகங்கள் படிக்காததால் ஒன்றும் முழுகிப்போய்விடவில்லை. புத்தகங்கள் படித்துள்ளவர்கள் என்ன நாகரிகம் பெற் றிருக்கிறார்கள்! பாமரமக்கள் நாட்டுக்கு முதுகெலும்பு போன்றவர்கள். அர்வகள் தங்க ளுடைய வேலையை நிறுத்துவார்களானால் நாட்டு மக்களுக்கு உணவும் உடையும் எங்கிருந்து கிடைக்கும்? இங்ஙனம் வாழ்க்கைக்குப் பயன்பட்டுவரும் அவர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அல்லலுற்று வருகின்றார்கள். அவர்கள் முன்னேற்றத்துக்கு நாம் ஆவன செய்யவேண்டும்.

—சுவாமி விவேகானந்தர்

குமரகுருபரர்

(வித்துவான். ஆதி பாலசுந்தரன் M. A)

தன்னைத் தானே புகழ்ந்து கொள்ளுவது நம்மில் பலரிடையே இருக்கிறது. இது ஒரு பெரிய நோய்; நீங்காத நோய்; ஆனால் நீக்கப் படவேண்டிய நோய். தன்னைத் தானே புகழ்ந்து கொள்ளலாமா? கூடாது; முற்றிலும் பொருந்தாது.

ஒருவன் தன்னைத் தானே புகழ்ந்து கொள்ளும்போது, என்ன யோசிக்கவேண்டும்? நாம் நம்மையே புகழ்ந்துகொள்கிறோமே! நம்மைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்று யோசிக்கவேண்டும். சிறிது அளவாவது சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். அப்படி நினைத்துப் பார்த்தால், ஒருவித வெட்க உணர்வு ஏற்படும். இப்படிப் புகழ்ந்து பேசுகிறோமே என்று அவர்களுடைய மனம் இடித்து உணர்த்தும்.

ஒருவனிடத்தில் இருக்கக் கூடிய பண்புகள் நல்ல பண்புகள் என்று சொல்லக் கூடிய அளவுக்கு இருக்கும் பட்சத்தில், அந்தப் பண்புகளை, அவனுடைய சிறப்புக்களை அவனே எடுத்துச் சொல்லவேண்டியதில்லையே! நல்லவையாக இருந்தால் மற்றவர்களுக்குத் தெரிந்து வரவேற்று ஏற்றுக்கொள்ளப்படும். நல்ல பொருளுக்கு விளம்பரம் தேவையில்லையே!

தன்னைத்தானே புகழ்ந்து கொள்ளுவதால், தன்னைத் தானே தாழ்த்திக்கொள்கிறான். மற்றவர்கள் அவனைப்பற்றி இழிவாக எண்ணுகின்றனர்; நல்ல அபிப்பிராயம் வைப்பதில்லை. இந்த இழிநிலை ஒருவனுக்கு ஏற்படும்படியாக நடந்துகொள்ளலாமா! கூடாது.

தற்புகழ்ச்சி உடையவனைப் பற்றிக் குமரகுருபரசுவாமிகள் என்ன கூறுகின்றார்?

> "தன்னை வியப்பிப்பான் தற்புகழ்தல் தீச்சுடர்
> நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால்—தன்னை
> வியவாமை அன்றே வியப்பாவது இன்பம்
> நயவாமை அன்றே நலம்."

தீச்சுடர் எரிகிறது; அதனை இன்னும் நன்றாக எரிய வைப்பதற்குத் தண்ணீரைக் கொண்டுபோய் ஊற்றினால் எப்படி இருக்கும்? எரியுமா? இருக்கின்ற நெருப்பும் அணைந்துவிடும். அதைப் போலத்தான் தன்னைத்தானே புகழ்ந்துகொள்ளுவது.

தன்னை மற்றவர்கள் மதிக்கவேண்டும் என்று நினைக்கின்றவன், விரும்புகின்றவன் தற்புகழ்ச்சி பாராட்டக் கூடாது. தண்ணீரை ஊற்றினால் இருக்கின்ற நெருப்பும் அணைந்து போகும். தன்னைத் தானே புகழ்ந்தால் இருக்கின்ற சிறப்பும் இல்லாமல் நீங்கிவிடும். தன்னைத் தானே புகழ்ந்துகொள்ளாமல் இருப்பது தான் உண்மையிலேயே நல்ல மதிப்பாகும். அப்படித் தன்னைத் தானே புகழ்ந்துகொண்டு அதனால் வருகின்றதை இன்பம் என்று எண்ணாமல் இருப்பதே உண்மையான இன்பமாகும்.

மற்றவர்கள் நம்மைப் புகழ்ந்து பேசுவதில் தான் உண்மையிலேயே பெருமையும் இன்பமும் ஏற்படுகின்றன. நம்மிடத்தில் சிறப்புக்கள் இருந்தால், அந்தச் சிறப்புக்களை மற்றவர்கள் எடுத்துச் சொல்லவேண்டும்; அடுத்தவர்கள் எடுத்துச் சொல்லவேண்டும் என்று எதிர்பார்ப்பது பொருத்தமாகாது; உண்மைதான். ஆனால், பிறர் பாராட்டுவதற்குரிய நல்ல குணங்கள் நம்மிடத்திலே வந்து அமைய வேண்டும். அந்த நல்ல குணத்தைப் பிறர் பாராட்டுகின்ற சமயம் ஏற்படுகின்ற புகழ்ச்சியே உண்மையான புகழ்ச்சி.

சான்றோர்கள் யாராவது தங்களைத் தாங்களே புகழ்ந்து சொல்லியிருக்கிறார்களா? ஒருவரும் அப்படிச் சொல்லவில்லையே! மனிதனை மேம்படுத்துவதற்கும், சமூகத்தை உயர்த்துவதற்கும் வேண்டிய இன்றியமையாத கருத்துக் கருவூலங்களை மக்களுக்கு வழங்குவது தான் சான்றோரின் இயல்பு. தங்களைத் தாங்களே புகழ்ந்து கொள்ளுவது அவர்களுடைய இயல்பு அன்று.

சான்றோர்கள் தங்கள் நூல்களில் எங்காவது தங்களைப் புகழ்ந்து சொல்லியிருக்கிறார்களா? தங்களைப்பற்றி எந்தக் குறிப்பும் அவர்கள் சொல்லும் இயல்பினர் அல்லர். ஏன்?

அவர்களுடைய எண்ணத்தின் துவக்கம், அந்தச் சிந்தனையின் சீரான வளர்ச்சி, சிந்தனை

யில் மாறுபாடு, சிந்தனையின் பரிணாம வளர்ச்சி, சிந்தனையின் முடிவு ஆகிய ஒவ்வொரு நிலையிலும் தூய்மையே கலந்திருந்தது. அந்தத் தூய்மையின் விளைவினால், தன்னலம் அற்று, பிறர் நலம் பேணும் பெருந்தகையாளராய்த் திகழ்ந்தனர். அப்பேரன்பிற்குரிய பெருந்தகையர் சொற்கள் எல்லாம் இனிய சொற்கள்; நன்மை விளைவிக்கும் சொற்கள். நல்ல எண்ணத்தின் விளைவால் பிறந்த சொற்களால், இன்பமே எங்கணும் விளைந்தது.

சுயநலம் இல்லாத, தூய மனம் கொண்ட சான்றோர்கள் உபதேசித்த உபதேசங்களைப் படித்து, வாழ்க்கையில் கடைப்பிடித்து, வாழ்க்கையில் கெட்டுப்போனவர்கள் யாராவது உண்டா? ஒருவரும் இல்லை.

தற்புகழ்ச்சி எவரிடத்தில் இல்லையோ அவரிடத்திலே பணிவு உண்டு. பணிவு உள்ள இடத்தில் பெருமை உண்டு.

தங்களைத் தாங்களாகவே புகழாதவர்கள் பெருமைக்குரியவர்கள். தங்களைத் தாங்களே புகழ்ந்து கொள்பவர்கள் இழிந்தவர்கள்.

மனித மூளையின் விபரீதமான செயல்பாடுகளால், தற்புகழ்ச்சி என்னும் பொருத்தமற்ற பண்பு வந்து அமைந்துவிடுகின்றது. எனவே, தற்புகழ்ச்சி கூடாது.

மனித அறிவு தனித்துச் செயல்படும் திறன் உடையது. பிற உயிர் இனங்களின் அறிவு செயல்படும் விதத்தில் இருந்து மாறுபட்டு, மனித அறிவு தொழிற்படுகிறது. ஒரு மனிதனுடைய குணம், சான்றோர்களின் பாராட்டு அல்லது மதிப்பைப் பெறுவதிலிருந்து அளவிடப்படுகிறது. அதாவது சான்றோர்களின் மதிப்பு, ஒருவனுடைய குணத்தை அளக்கும் அளவுகோல் ஆகும்.

பெரியோர்களுடைய நன்மதிப்பு ஒருவனுக்குத் தானாகவே வந்து வாய்ப்பது ஓர் அரிய பொக்கிஷமாகும். அறிவறிந்த நன்மக்களுக்கு உவப்பான செயல்களைச் செய்வதன் மூலம் அவர்களுடைய பாராட்டைப் பெறமுடியும். அறிவுக் குறைபாடுடைய மனிதன் நன்மையும் செய்கின்றான்; தீமையும் செய்கின்றான். நன்மை செய்தால்தான் செய்தவனுக்கும் பயன் உண்டு; மற்றவர்களுக்கும் பயன் ஏற்படும்.

ஒருவனிடத்தில் அமைந்துள்ள நற்பண்புகளைப் பொறுத்து, அவனிடத்தில் உள்ள அறிவு இயங்கும் விதத்தைப் புரிந்துகொள்ளலாம்; அளவிட்டு உரைக்கலாம். மற்றவர்களுடைய நன்மதிப்பு என்னும் கருவூலம் அதில் அமைந்துள்ளது. அந்தக் கருவூலத்தை அடைவது வாழ்க்கையின் குறிக்கோளாக இருக்கும் பட்சத்தில், சில மானிடப் பண்புகளை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

செடி, கொடி, மரம் முதலிய தாவர இனங்களுக்குத் தாவரப் பண்புகள் இருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் அவை முழுமையான வளர்ச்சி பெற இயலும். விலங்குகளுக்கும், பறவைகளுக்கும், அவற்றிற்கு என உண்டான பண்புகளைப் பெற்றிருத்தல் வேண்டும். அப்படியானால்தான் அவற்றின் போக்கில் அவை பூரண வளர்ச்சி பெற இயலும்.

பகுத்தறிவு அற்ற உயிர் இனங்கள், அவற்றிற்குரிய பண்புகள் வாய்க்கப்பெற்று முழு வளர்ச்சி அடையும்போது ஆறு அறிவுபெற்றுள்ள மனிதன் தனக்குரிய இயல்புகளைப் பெற்றுப் பூரண வளர்ச்சி பெற வேண்டியது அவசியமல்லவா!

மனித உடல் வளர்ச்சி பெறுவதற்குரிய ஏற்பாடுகள் இயற்கையாகவே அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் உடம்பு வளர்ச்சி அடைகிறது. உடம்பு மட்டும் வளர்ந்தால் போதுமா? வீட்டுப் பசுவும், காட்டு மரமும் வளர்வது போல, உடம்பு மட்டும் ஒருவனுக்கு வளர்ந்தால் போதுமா? அவ்வளர்ச்சி மனிதனைப் பொறுத்த மட்டில் சரியன்று.

மனிதனிடத்தில் உள்ள அறிவு முதிர்ச்சியடைய வேண்டும். மனம் பக்குவப்படவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக ஆத்ம பரிபாகம் அடையவேண்டும். பக்குவம் அடையச் செய்யலாம் என்ற எண்ணத்துடன் நமது சரீரத்துக்குள் புகுத்தப்பட்டுள்ள ஆத்மாவைப் பக்குவப்படுத்தாமல் இருக்கலாமா!

சான்றோர்கள் மனத்தில் மானிட உயிர் பக்குவம் அடைவதற்குரியவகையில் தெளிவான சிந்தனைகள் மலர்ந்துள்ளன. அச்சிந்தனைகளை, எண்ணத்தின் வடிவை நமக்கு இயம்பியுள்ளார்கள்.

"பெரியவர்களின் பாராட்டுக்கு" ஓர் உணர்வையும், மதிப்பையும், பெருமையையும்

கொடுத்து, அவர்களின் பாராட்டைப் பெறுதல் வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அவர்களின் பாராட்டை, மதிப்பை ஒவ்வொருவரும் தவறாமல் பெறவேண்டும். அதுதான் வாழ்வின் இலட்சியம்; கடைத்தேற வழி எனவும் சொல்லி இருக்கிறார்கள்.

அடுத்தவர்களின் நன்மதிப்பைப் பெறுவதற்குரிய உபாயம் யாது? பெரியவர்கள் பலர் பல வழிமுறைகளைச் சொல்லி இருக்கிறார்கள். அவர்களுக்குள்ளே குமரகுருபர சுவாமிகள் யாது இயம்புகின்றார்?

"பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதுஒன்று உண்டு—பிறர்பிறர்
சீர்எல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல்."

சான்றோர்களின் நன்மதிப்பைப் பெறுவதற்கு விழைகின்ற ஒருவன் மறக்காமல் மேற்கொள்ள வேண்டியது ஒன்று உண்டு; அது என்ன? மற்றவர்களின் பெருமைகளையெல்லாம் மறைக்காமல் எடுத்துச் சொல்லவேண்டும். முக்குண வசத்தால் இயல்பாக அமைந்திருக்கும் ஒரு சில தீய பண்புகளை எடுத்துப் பரப்பிக் கொண்டிருக்கவேண்டாம். யாராக இருந்தாலும் சரி; அவர்களிடத்தில் பணிவான வார்த்தைகளையே பேசுதல் வேண்டும்.

இம்மூன்று செயல்களையும் ஒருவன் தன்னகத்தே அமைத்துக் கொண்டால், பிறருடைய பெருமதிப்பைப் பெறலாம்.

மனிதனுக்கு இருந்தே தீரவேண்டிய பல பண்புகளில் இம்மூன்றும் முக்கியமானவை. மனிதனிடத்தில் அமைந்துள்ள பண்புகளே அவனுக்கு உயர்வைத் தருகின்றன. மாந்தருள் யாரும் பரிபூரண வளர்ச்சி பெற்றவரல்லர். அங்ஙனம் வளர்ச்சி பெற்றவர்கள் மாந்தருக்குள் தெய்வமாகின்றனர்.

எனவே, குறைபாடுடைய மனிதர்களிடத்தில் உள்ள பெருமைகளை மட்டுமே பலரறிய எடுத்துக் கூறவேண்டும். அதுதான் நல்லது. பெருமைகளை மட்டுமே எடுத்துச் சொல்ல நினைக்கும்போது, சொல்பவர்களின் மனத்தில் தீய எண்ணம் இல்லை; வஞ்சகம் இல்லை; நல்ல எண்ணம் ஏற்படுகிறது.

பெருமைக்கு உகந்த சொற்களைப் பலரும் கேட்கிறார்கள். கேட்பவர்களின் மனத்திலே தீய எண்ணம் உதிப்பதில்லை; அதன் விளைவான கெட்ட செயல்களும் தோன்றமாட்டா. அவர்களுடைய மனத்தில் மகிழ்ச்சி தோன்றுகிறது; அமைதி உண்டாகிறது. நாமும் பெருமைக்குரிய செயல்களையே செய்யவேண்டும் என்ற நல்லெண்ணமும் வளர்கிறது.

நம்மிடத்தில் உள்ள குறைகளை எடுத்துச் சொல்லாமல், பெருமைகளை மட்டுமே எடுத்துச் சொன்னார்கள் என்று குறைகளும் நிறைகளும் உடையவர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள்; மன அமைதி அடைகிறார்கள்.

இதன் காரணமாக ஆரோக்கியமான சூழ்நிலைகள் சமூகத்தில் உண்டாகின்றன.

சிறுமைகளை, குறைகளை வெளியே எடுத்துச் சொல்லவேண்டாம். அப்படிப் பரப்பும்போது சொல்பவர்களின் மனம் அமைதியை இழக்கிறது; படபடப்பு உண்டாகிறது. குறைகளுக்கு உரியவர்களின் மனம் வெறுப்படைகிறது. மனம் எதிராக வேலைசெய்து, குறைகளுக்குரிய செயல்களை அதிகப்படுத்துகிறது. கேட்பவர்களின் உள்ளம் தீயவற்றை விரைந்து கிரகித்துக்கொள்ளுவதால், சமூகத்தில் தீய விளைவே விரைவில் பரவுகிறது. எனவே, மற்றவர்களிடத்தில் உள்ள குற்றம் குறைகளை எடுத்துச்சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். அப்படியானால் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு வழி இல்லையா? எடுத்துச் சொன்னால்தானே, குறைகள், குறைகள் என்று தெரியவரும்; அப்படித் தெரிந்து, உணர்ந்து குறைகளை நீக்கமுடியும் என்று நினைக்கலாம்.

குறைகளைப் போக்க ஒரு நாகரிகமான வழியைக் கையாளுகின்றார். எப்படி? குறைகளை எடுத்துச் சொன்னால், கேட்பவர்கள் மனம் எதிராக வேலைசெய்து வெறுப்படையும்; குறைகள் மிகுதியாகும். நன்மைகளை எங்கே செய்யப் போகிறார்கள்? பெருமைகளை மட்டுமே எடுத்துச் சொன்னால், நம் குறைகளை எடுத்துச் சொல்லவில்லையே என்று உணர்வார்கள்; மனம் கூசிக்குறுகும்; அறிவில் உணர்வு ஏற்படும்; மனத்தில் தெளிவு ஏற்படும். பிறகு, நாளடைவில் குறைகளை விட்டுவிடுவார்கள்; பெருமைக்குரிய நல்ல செயல்களையே செய்துவிடுவார்கள். இது எவ்வளவு எளிய மருத்துவ முறை!

குறிப்புகள்

நம் நாடும் சமயமும்

சமயம் நம் நாட்டுக்கு முதுகெலும்புபோன்று அமைந்திருக்கின்றது. சமயம் அழிந்துபட்டுப் போனால் நம் நாடு அழிந்து போகும். சமயத் துறையில் நாம் மற்றவர்களுக்கு வழிகாட்டி களாக இருக்கின்றோம். ஆன்மீகத்தை மற்ற நாடுகளுக்கு வழங்குவதன் மூலமாகவே நாம் தலைசிறந்தவர்களாக விளங்கமுடியும். ஆன்மீகத்தை நாம் உலகுக்கு வழங்காவிடில் நம் கடமையிலிருந்து தவறியவர்களாகின்றோம். ஆன்மீகத்துறையில் தெளிவு பெற்று உலகையும் ஆன்மீகப்பாதையில் நடாத்திச் செல்வோமானால் நம் கடமையை நாம் முறையாகச்செய்தவர்களாகின்றோம். உலகத்தவர்களால் நாம் போற்றுதற்குரியவர்களாவோம்.

'எண்ணம் போல வாழ்வு' என்பது கோட்பாடு. நாம் எதைப்பற்றி எண்ணி வருகின்றோம்? குடும்பத்தைப் பற்றியும், உற்றார் உறவினரைப்பற்றியும், வீடுவாசல்களைப்பற்றியும், சொத்துச் சுகத்தைப் பற்றியும், பேர் புகழைப் பற்றியும், பட்டம் பதவிகளைப் பற்றியும் எண்ணி வருகின்றோம். இத்தகைய எண்ணம் நம்மைச் சுயநலக்காரர்களாக ஆக்கியிருக்கிறது. நாட்டைப்பற்றியும், தெய்வத்தைப் பற்றியும் நாம் சிந்தித்திருக்கின்றோமா? இன்றைக்கு நாட்டின் நிலைமை என்ன? நம் நாட்டுக்கு முதுகெலும்பு போன்றிருக்கும் சமயத்தின் நிலை என்ன? இவற்றைப்பற்றி நாம் எண்ணிப்பார்க்கின்றோமா? உடல் உழைப்புச் செய்கின்றவன் உடலை வருத்தி ஏன் உழைக்க வேண்டுமென்று நினைக்கின்றான். உழைக்காது ஊதியம் பெறவேண்டுமென்பது அவனுடைய விருப்பம். உழைப்பு உயர்வைத்தரும் என்பதைப்பற்றி அவன் நினைத்துப் பார்ப்பதில்லை. உழைப்பு உயரத் தொழில் உயரும்; தொழில் உயரச் செல்வம் உயரும்; செல்வம் உயர நாடு உயரும். இப்படி எந்த உழைப்பாளியும் நினைப்பதில்லை. உழைப்பினால் ஜப்பான், ஜெர்மன்போன்ற நாடுகள் தொழில் துறையில் அடைந்திருக்கின்ற முன்னேற்றத்தை நினைத்துப் பார்த்து நம் நாட்டையும் அந்நிலைக்கு உயர்த்தவேண்டுமென்று எந்த உழைப்பாளி நினைக்கின்றான்? சுதந்திர நாட்டில் உழைக்காதிருக்கத் தனக்குச் சுதந்திரம் இல்லையா என்று நினைக்கின்றான். உழைத்துத் தன் நாட்டை உயர்த்த வேண்டுமென்று உழைப்பாளி நினைப்பதுண்டா? உழைக்கின்றவனுக்கு அரசாங்கம் ஏதாவது ஊக்கம் தருகின்றதா? சோம்பேறிக்குத்தான் அரசாங்கம் சாதகமாக இருக்கிறது. உழைத்து நாட்டை உயர்த்துவேன் என்று எண்ணுவதற்குப் பதிலாக உழைக்காது தன்னை உயர்த்திக்கொள்ளவேண்டுமென்று ஒவ்வொருவனும் எண்ணுகின்றான்.

விவசாயியும், வைசியனும் நாட்டின் வளத்தையும், செல்வத்தையும் பெருக்கவேண்டும் என்று நினைப்பதில்லை. நல்ல பொருள்களை உற்பத்தி செய்து அவற்றை முறையாக மக்களுக்கு வழங்கவேண்டுமென்று அவர்கள் நினைப்பதில்லை. பணம் சம்பாதிப்பதிலும், சுகபோக வாழ்வு வாழ்வதிலும் அவர்கள் குறிக்கோளாக இருக்கிறார்கள். ஆட்சியில் இருப்பவர்கள் அறநெறி நின்று மக்களை அறநெறிப்படுத்தும் செயலில் ஈடுபடுவதில்லை. அவர்கள் மக்களிடமிருந்து தங்கள் கட்சிக்குப் பலம் தேடுவதில் கருத்துடையவர்களாக இருக்கிறார்கள். ஆட்சியை எப்படிக் கைப்பற்றி அதிகாரத்தில் இருக்கலாம் என்பதில் கருத்துக் கொண்டிருக்கிறார்கள். நாட்டில் அமைதியை நிலைநாட்டி மக்களை நல்வழிப்படுத்தி நாட்டைப் பலப்படுத்திப் பண்பாட்டிலும், கலைகளிலும் சிறந்து விளங்கும்படி செய்ய வேண்டுமென்று அவர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை. ஆன்மீகப் பற்றுடையவர்கள் மிகவும் குறைவு. அவர்களும் ஆன்மீகத் துறையில் மக்களை இழுக்கும் ஆன்ம சக்தியை வளர்க்காது உலகத்தை நம்பியவர்களாக வெறும் ஆடம்பரத்தில் நாட்டம் உடையவர்களாக இருக்கின்றார்கள். ஆக, எல்லாத்தரத்திலுமுள்ள மக்கள் நாட்டைப் பற்றி நினைக்காது தங்களைப்பற்றியே நினைப்பவர்களாக இருக்கின்றார்கள்.

சுதந்திர நாட்டில் சுயநலம் புரையோடிக் கிடக்கிறது. ஒவ்வொருவனும் சுயநலக்கார

னுக இருப்பதால் சேவைக்கு இடம் இல்லாது போய்விட்டது. அன்பர் பணி செய்து இன்ப நிலை பெறுது பணத்துக்காகப் பணிசெய்து போக வாழ்வு பெறவேண்டுமென்ற புல்லிய மனப்பான்மை நாட்டின் சீர்கேட்டுக்குக் காரண மாகும். தெய்வச் சிந்தனையை வளர்க்கும் சமய வாழ்வு மக்களிடையே சரியான முறை யில் புகுத்தப்படாததால் இப்புல்லிய மனப் பான்மை மக்களிடையே ஏற்பட்டிருக்கிறது. நரசேவையை நாராயண சேவையாகச் செய்ய வேண்டும் என்ற மனப்பான்மையைச் சமயம் மக்களிடையே வளர்க்கவேண்டும். அப் பொழுது மக்கள் சேவை மனப்பான்மையுடை யவர்களாக மாறி அமைவார்கள். உயர்ந்த சிந்தனையையும், எளியவாழ்வையும் சமயம் மக்களிடையே புகுத்தவேண்டும். அப்பொழுது மக்கள் தூய்மையான மனம் படைத்தவர் களாக மாறி அமைவார்கள். மனம் தூய்மை அடைந்துவிட்டால் நாட்டில் உள்ள பிரச்சினை கள் தீர்ந்துவிடும்.

ஜாதிக் கொடுமை நாட்டின் வளர்ச்சிக்கும், மதவெறி மதத்தின் வளர்ச்சிக்கும் தடையாக இருக்கின்றன. சமுதாயத்தில் ஜாதிப் பிரி வினைகள் ஏராளமாக இருக்கின்றன. ஒரு ஜாதிக்குள் பல கிளை ஜாதிகள் இருக்கின்றன. இவைகளெல்லாம் மக்களிடத்திலே வேற்று மையை வளர்த்துக் கொண்டிருக்கின்றன. மக் களுக்கிடையிலே தொட்டால் தீட்டு என்று ஒரு சிலரை ஒதுக்கி வைத்திருக்கின்றனர்கள். உயிர்களனைத்தும் இறைவனுடைய தோற்றங் கள் என்ற தத்துவம் பேசும் இந்தியாவில் எத் தனையோ ஜாதிக் கொடுமைகளும் இருக்கின் றன. உலகமக்கள் அனைவரும் சகோதரிகள் சகோதரர்கள் ஆகிறுர்கள் என்று சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் சிகாகோவில் நடந்த சமய மகாநாட்டில் பேசினர். ஆனல் இந்திய நாட்டில் ஜாதிகள் பேசிக்கொண்டு தத்துவத்தை மறந்து சண்டை போட்டுக் கொண்டிருக்கிறுர்கள். ஜாதியின் அடிப்படை யில் கல்வி ஸ்தாபனங்களும், மருத்துவ மனைகளும் அமைத்து ஜாதிப் பிணக்கை மேலும் மேலும் வளர்த்து வருகிறுர்கள். கல்விச் சான்றிதழ்களிலும் ஜாதியைக் குறிப் பிடவேண்டும் என்று கூறுவது, ஜாதியைத் தகர்த்தெறிவதற்குப் பதிலாக ஜாதிப் பிரி வினையை வளர்த்து வருகிறது. பிராமணர் களுக்கிடையில் பிராமண ஜாதிக்கு உதவ வேண்டுமென்ற எண்ணம் புரையோடிக் கிடக்கிறது. அவர்கள் தாங்கள்தாம் உயர்வு என்ற எண்ணத்தை ஒழித்துவிட்டு மக்கள் எல்லாரும் உயரவேண்டும் என்ற மேலான எண்ணம் கொள்ளவேண்டும். மற்றவர்களை உயர்த்தவும் அவர்கள் முயலவேண்டும். இதர ஜாதியர்களுக்கிடையிலும் தங்கள் ஜாதிதான் உயர்வு என்ற எண்ணம் ஒழியவேண்டும். பண்பாட்டின் அடிப்படையில் மக்களுக்கிடை யில் உயர்வு தாழ்வு இருக்கிறதேயன்றி ஜாதி யின் அடிப்படையில் மக்களுக்கிடையில் உயர்வு தாழ்வு இல்லை. நந்தனர் பறையர் குலத்தில் பிறந்தவர் எனினும் பண்பாட்டில் அவர் அந்தணராக இருந்தார். இன்றைக்கு நந்தனர் அடைந்திருந்த பண்பாட்டில் தங் களைப் பார்ப்பனர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் இருக்கிறுர்களா என்று எண் ணிப் பார்க்கவேண்டும். கண்ணப்பர் வேடர் குலத்தில் பிறந்தவர். சிவகோசரியார் பிரா மண குலத்தில் பிறந்தவர். பண்பாட்டில் கண்ணப்பருக்கும், சிவ கோசரியாருக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருக்கிறது. கொடுக்கல் வாங்கல் முதலிய சமூகச் செயல்கள் பண்பாட்டின் அடிப்படை யில் நிகழவேண்டும். ஜாதியில் பிராமணனுகப் பிறந்த ஒருவனும், பறையர் குலத்தில் பிறந்த ஒருத்தியும் பண்பாட்டில் ஒத்திருப்பார்களா னுல் கலப்பு மணம் செய்து கொள்ளலாம். இங் ஙனம் பிறந்த குலத்துக்கு முக்கியத்துவம் தராது, அடைந்துள்ள பண்பாட்டுக்கே முக்கி யத்துவம் தரவேண்டும். ஜாதிப் பிரிவினை வேண்டியதில்லை. ஆனல் பண்பாட்டில் வேற் றுமை இருந்துதான் தீரும். அதைப் போக்கி விடமுடியாது.

"எல்லா நாட்டு நரிகளும் ஒரே விதமாகத் தான் ஊளையிடும். அது போன்று எல்லா மதங்களும் ஒரே பொருளைப் பற்றித்தான் பேசுகின்றன." இங்ஙனம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்ந்துள்ளார். இவ்வுண்மையை மறந்து விட்டு வெறும் பெயரை மாற்றி அமைப்பதி லும் உடையை மாற்றிக் கொள்ளுவதிலும் மத

மாற்றம் செய்கின்ற நிகழ்ச்சி மதவெறி பிடித்த வர்களால் நடந்து வருகிறது. இது வெறும் கேலிக் கூத்தேயன்றி மக்கள் முன்னேற்றத் துக்கோ, பண்பாட்டு வளர்ச்சிக்கோ இதில் இடம் இல்லை. மத உணர்ச்சி இல்லாதவர்கள் பொருளுக்கு ஆசைப்பட்டு மதம் மாறிக் கொண்டு இருக்கிறார்கள். நாட்டில் எத்த னையோ ஆக்கரீதியான செயல்கள் செய்ய வேண்டியிருக்க, இவ் அனாவசியமான செயல் களில் மக்கள் தங்கள் சக்திகளை விரயமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஒழுக்க நெறியைப் புகட்டுவதும், மக்களுக்கு அன்புடன் பணி விடை செய்யக் கற்றுக்கொடுப்பதும், பரந்த மனப்பான்மையை வளர்ப்பதும், எல்லா உயிர் களையும் நேசிக்கக் கற்றுக் கொடுப்பதும் எதுவோ அதுவே உண்மையான சமயநெறி ஆகும்.

ஊரிலுள்ள கோவில், குளங்கள், பள்ளிக் கூடங்கள் அனைவருக்கும் சொந்தம். அவை களுக்கு யாரோ சிலர்மட்டும் உரிமை உடைய வர்களென்று கருதக்கூடாது. தாங்கள் சுத்த மாக இருந்துகொண்டு புறத்தையும் சுத்தமாக வைத்துக்கொள்ளத் தெரிந்தவர்கள் யாராக இருந்தாலும் அவ்விடங்களைப் பயன்படுத்து வதற்கு அனுமதி தந்துவிடலாம்.

பொதுவாக மக்களிடையே உடலுழைப்பை மிகவும் இழிவாகக் கருதுதல் இருந்துவரு கிறது. உடலுழைப்பை நாம் புறக்கணிக்கிற அளவு உடல் நலம் குன்றும். ஓரளவு அனை வரும் தினமும் உடலுழைப்புச் செய்தாக வேண்டும். உடலுழைப்பும், மனோ உழைப் பும் மாறிமாறி அமையவேண்டும். ஓய்வு என்பது உடலுழைப்பைச் சிறிது நிறுத்தி விட்டு மனோ உழைப்புச் செய்வதும், பிறகு மனோ உழைப்பை நிறுத்திவிட்டு உடலுழைப் புச் செய்வதுமாகும். உடலுழைப்பில் அலுப்பு ஏற்படும்பொழுது நாம் மனோ உழைப்புச் செய்யவேண்டும். அப்பொழுது அது உட லுக்கு ஓய்வு ஆகும். மனோ உழைப்பில் அலுப்பு ஏற்படும்பொழுது மனோ உழைப்பைச் சிறிது நிறுத்திவிட்டு உடலுழைப்புச் செய்யவேண் டும். அப்பொழுது மனதுக்குச் சிறிது ஓய்வு கிடைக்கிறது. இங்ஙனம் உழைப்பை மாற்றி அமைப்பதுதான் ஓய்வு ஆகும். உழைப்பின் மூலமாகத்தான் உயர்வு அடையமுடியும். உழைப்புக்குன்றும்பொழுது நாட்டின் செல்வம் குறையும். நாட்டின் முன்னேற்றத்துக்கும் தடை உண்டாகும். ஒரு நாடு முன்னேற வேண்டுமென்றால் சரீர உழைப்பும் மன உழைப் பும் சீரியமுறையில் அமைய வேண்டும். உழைக்க யாரும் பின்வாங்கலாகாது. உழைப் பின் மூலமாகவே பல நாடுகள் தொழிலிலும், செல்வத்திலும் முன்னணிக்குவந்திருக்கின்றன. நம் மக்கள் இன்றைக்கு உழைப்பைப் புறக் கணித்து வருகின்றார்கள். உழைக்காது உலக சுகங்களை நன்கு அனுபவிக்க வேண்டுமென்று விரும்புகின்றார்கள். இந்த விருப்பம் போற்று தற்குரியதன்று. மக்களுக்கிடையில் இந்த மனப்பான்மையை வளரவிடக்கூடாது. இதில் அரசாங்கம் கருத்துச் செலுத்தவேண்டும். உழைக்காது ஏமாற்றிக் காலம் போக்கலாம் என்று நினைப்பவர்கள் அரசாங்க உத்தியோ கத்தை நாடிப்போகிறார்கள். இன்றைக்கு அரசாங்கம் எல்லாவற்றையும் ஏற்று நடத்த வேண்டுமென்ற கூப்பாடு சோம்பேறித் தனத்தை வளர்ப்பதற்கு அடிகோலுவது ஆகும். சான்று எடுத்துக்கொண்டால் அர சாங்கத்தினர் நடத்தும் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர் தனியார் நடத்தும் பள்ளிக்கு வர விரும்புவதில்லை. தனியார் நடத்தும் பள்ளி யில் பணிபுரியும் ஆசிரியர் அரசாங்கப்பள்ளி யில் வாய்ப்புக் கிடைக்கவேண்டுமென்று எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறார். ஏனெனில் அர சாங்கப்பள்ளியில் பணிபுரிந்தால் பணியைச் செய்யாது மாதச் சம்பளம் வாங்கிக்கொள்ள லாம்; மேலும் பணம் சம்பாதிப்பதற்கு வேறு தொழில்கள் நடத்தலாம் என்று நினைக்கிறார். அவர்கள் பணம் சம்பாதிப்பதையே லட்சிய மாகக்கொண்டு பாடம் புகட்டுவதைக் கடமை யாகக் கொள்ளாதிருக்கின்றனர். பண் டைக்காலத்தில் கல்வித்துறை தியாகிகள் வசம் இருந்தது. சான்றோர்கள் கல்விப் பொறுப்பை ஏற்றுவந்தார்கள். இன்றைக்கு அதிகாரவர்க்கத்திடமும், சுயநலக்காரர்களிட மும் கல்வித்துறை அகப்பட்டுத் திண்டாடிக் கொண்டிருக்கிறது. கல்வியில் மறுமலர்ச்சி வேண்டுமென்றால் அது பழையபடி தியாகிகள் கைக்குப் போகவேண்டும். தியாகிகள் என்

போர் சமயத்துறையில் பயிற்சிபெற்றவர்களா வார்கள். எல்லாம் எனக்கு எனக்கு என்கிறது லௌகிகம். எல்லாம் தெய்வத்துக்கு அல்லது உலகுக்கு என்கிறது சமயம். தனக்காக வாழ் பவன் லௌகிகன். தனக்காக வாழும்படி தூண்டுவது லௌகிகம். உலகுக்காகவும், கடவுளுக்காகவும் வாழும்படி தூண்டுவது சமயம். அரசாங்கத்துக்கு நாடு முன்னேற்றம் அடையவேண்டுமென்ற உண்மையான அக் கறை இருக்குமானால் கல்வித்துறையைத் தியாகமனப்பான்மை படைத்தவர்களிடம் ஒப்படைத்துவிட்டு அதில் தங்கள் தலையீட் டைக் குறைத்துக்கொள்ளவேண்டும். நாட் டின் முன்னேற்றத்தில் அக்கறையில்லாமல் ஓட்டுப் பெறுவதிலும், ஆட்சியிலிருப்பதிலும் குறிக்கோளாக இருக்கும் அரசாங்கம் சுயநலமி களை நம்பி நாட்டைக் கீழ்மையுறச் செய்கிறது.

திரைப்படங்களும், பத்திரிகைகளும், சுவ ரொட்டிகளும் நாட்டு மக்களின் மனதைப் பாழ்படுத்தி வருகின்றன. மனதிலுள்ள காமம் உடல்பற்றை வளர்க்குமாயின் அது கீழானதா கிறது. மனதிலுள்ள காமம் கடவுள்பற்றை வளர்க்குமாயின் அது மேலானதாகின்றது. உடல் உணர்வைத் தூண்டிவிடக்கூடிய திரைப்படங்களும், பத்திரிகைகளும், சுவ ரொட்டிகளும் இன்று நாட்டில் ஏராளமாக நிலவி வருகின்றன. நல்ல மனப்பான்மையை உருவாக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு பத்திரிகைகள் எழுதப்படுவதில்லை. திரைப் படங்களும் தேசபக்தியையும், தெய்வபக்தி யையும் வளர்ககவேண்டும் என்ற நோக்கத் தோடு காட்டப்படுவதில்லை. அவை அனைத் தையும் பணம் சம்பாதிக்கும் நோக்கத்துட னேயே நடாத்தி வருகிறார்கள். நம் நாட்டு லட்சியம் தியாகம் ஆகும். தியாகத்தின் மூலம்தான் மனிதனுக்கு உண்மையான இன் பம் கிட்டுகிறது எனறு சமய நூல்கள் போதிக் கின்றன. கர்மத்தினாலன்று; புத்திர சந்தா னத்தினாலன்று; செல்வத்தினாலன்று; தியாகத்தி னாலேயே மனிதன் அழியாப் பெருநிலையை அடைகின்றான். இங்ஙனம் பண்டைய நூல் கள் பகர்கின்றன. இன்றைய பத்திரிகைகள் கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற விஷ யங்களை மக்களுக்கு வேண்டியவாறு பிரசுரித்து வருகின்றன. பணம் சம்பாதிப்பதுதான் இன் றைக்கு லட்சியமாக இருந்து வருகிறது. பணம் சம்பாதிப்பதே சுகத்துக்கு ஏதுவான வழி என்ற கருத்து மக்களுக்கிடையில் நிலவி வருகிறது. பத்திரிகைகளும், திரைப்படங் களும் மக்கள் மனதில் அக்கருத்தைப் பதிய வைக்கின்றன.

இன்றைக்கு நாட்டில் நடக்கும் ஒவ்வொரு செயலுக்கும் அரசியல் நோக்கு புகுந்துவிடு கிறது. நாட்டின் நலன் கருதி எச்செயலும் நிகழுவதில்லை. ஆட்சி பீடத்தில் ஏறவேண் டும் என்ற நோக்கத்துடனேயே ஒவ்வொரு செயலும் நிகழ்ந்து வருகிறது. தீய சக்திகளை ஒடுக்குவது அரசாங்கத்தினுடைய கடமையா கும். ராமராஜ்யம் அதற்கு முன் மாதிரியாக இருந்தது. ராமராஜ்யத்தில் மக்கள் கவலை யின்றி வாழ்ந்து வந்தார்கள். கொலை, கொள்ளை, களவு என்பன பற்றிய பேச்சுக்கே ஆங்கு இடமில்லை. இன்றைய அரசாங்கம் தீய சக்திகளுக்கு ஆதரவு தந்து வருகிறது. அதன் விளைவாக மக்களுக்கு நிம்மதியான வாழ்வு இல்லை. எங்குப்பார்த்தாலும் கொலை, கொள்ளை மயமாக இருக்கின்றன. மக்களிடையே ஐக்கிய உணர்வை வளர்ப்பதற்குப் பதிலாகப் பிரிவு மனப்பான்மையை வளர்ப்பதில் பலர் ஈடுபட்டு வருகின்றனர். மொழியின் அடிப்படையிலும் சமயத்தின் அடிப்படையிலும் நாட்டைத் துண்டுபோட முயல்கிறார்கள்.

சுயநலமிகள் பகுத்தறிவு என்ற போர்வை யைப் போர்த்திக்கொண்டு மக்களுடைய உள் ளத்தில் சமய உணர்வை அழிக்கப் பார்க்கின் றனர். நம் நாட்டில் சமய உணர்வு போய்விட் டால் அது முதுகெலும்பு ஒடிந்ததற்கு நிகரா கும். உலகத்திலுள்ள உயிர்கள் அனைத்தும் இன்பம் அடைய வேண்டுமென்று சமய உணர்வு ஓங்கிய மனிதன் பிரார்த்திக்கின்றான். தான் வாழ வேண்டுமென்றும், தனககுப் பெருமை வேண்டுமென்றும் நாத்திக உணர்வு படைத்தவன் நினைக்கின்றான். பகுத்தறிவு அல்லது விவேகம் என்பது மெய்ப்பொருளைக் காண முயல்வதாகும்.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

என்பது வள்ளுவர் வாக்கு. உலகம் அநித்தி

யம். உலகத்துக்கு அடிப்படையாக இருக்கும் அழியாத நித்தியப் பொருளே மெய்ப்பொருள். இதை அறிந்துகொள்ளத் துணைபுரிவது எதுவோ அதுவே விவேகம். உலகை நம்பி வாழ்வது அவிவேகம். தெய்வத்தை நம்பி வாழ்வது விவேகம். ஆனால் நாத்திகர்கள் உலகை நம்பி வாழ்வதை விவேகம் என்றும், தெய்வத்தை நம்பி வாழ்வதை அவிவேகம் என்றும் புகட்டுகிறார்கள். மக்களுடைய உள்ளத்தில் மத உணர்ச்சி போய்விட்டால் கேடுகள் பல செய்யத் துணிந்து விடுவார்கள். எனவே மக்களுடைய உள்ளத்தில் மத உணர்ச்சியை அழித்துவிடக்கூடாது.

இந்துக்கள் விழிப்புடனிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். இந்துக்களிடையே உள்ள சில குறைபாடுகளைப் பயன்படுத்திக்கொண்டு கிறிஸ்தவர்களும், முகமதியர்களும் மதமாற்றம் என்னும் புல்லிய செயலில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள். இந்துக்களுக்குத் தங்கள் மதத்தைப்பற்றிய உணர்ச்சி இல்லை. இது அவர்களிடம் உள்ள முதற் குறையாகும். மதவெறி கூடாது என்பது உண்மை. ஆனால், மத உணர்ச்சி இல்லாவிட்டால் கிறிஸ்தவர்களும், முஸ்லீம்களும் நம்மை எடுத்து விழுங்கிவிடும் நிலைமையில் இன்று இருக்கிறார்கள். நம்மிடையே மத உணர்ச்சி ஓங்கவேண்டும். இந்துக்களிடையே ஒற்றுமை இல்லை. இது இரண்டாவது குறை. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதை உணர்ந்து நாம் ஒன்றுபட வேண்டும். நாம் ஒன்றுபடாவிட்டால் மீண்டும் இந்தியா கிறிஸ்தவர்களுக்கோ, முஸ்லீம்களுக்கோ அடிமையாகிவிடும். அப்பொழுது இந்தியப் பண்பே போய்விடும். இந்தியப் பண்பைக் காக்க இந்துக்கள் ஒன்றுபட வேண்டும். இந்துக்களிடையே புல்லுருவிகளாகச் சிலர் இருந்து வருகின்றனர். இது இந்துக்களிடையே உள்ள மூன்றாவது குறை. இந்துமதத்தைத் தூஷித்துக்கொண்டு பிற மதத்தினருக்குப் பயந்துகொண்டு வாழும் அவர்களால் இந்துமதம் சீர்குலைந்துபோக விடக்கூடாது. அத்தகையோருக்கு நல்ல பாடம் புகட்டவேண்டும். தீண்டத்தகாதவர்கள் என்று இந்துக்களிடையே சிலரை ஒதுக்கி வைத்துள்ளோம். இது நம்மிடத்தில் உள்ள மற்றொரு குறையாகும். தாழ்த்தப்பட்டவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், அவர்களோடு சமமாகப் பழகுவதற்கும் நாம் உடனடியாகத் தயாராக இருக்கவேண்டும். நாம் ஒதுக்கி வைத்துள்ள மக்களுக்கு இரக்கம் காட்டுவதைப் போன்று சில உதவிகளைச் செய்து அவர்களைத் தங்கள் மதங்களுக்கு மாற்றுவதில் தீவிரமாகக் கிறிஸ்தவர்களும், முகமதியர்களும் ஈடுபட்டுள்ளனர். ஆட்டுக்குட்டி நனைவதைக் குறித்து ஓநாய் கவலைப்பட்டதற்கு இது ஒப்பாகும். இனி, இந்துக்களாகிய நாம் தாழ்த்தப்பட்டவர்களோடு தாராளமாகப் பழகி அவர்களுக்கு வேண்டிய உதவி செய்து நம் சகோதரர்களை நம்மிடமே வைத்துக்கொள்ள வேண்டும். நம்மைப் பலப்படுத்திக்கொண்டும், வலிவுபடுத்திக்கொண்டும் கிறிஸ்தவர்களுக்கும், முகமதியர்களுக்கும் உண்மையான மதம் எது என்பதைக் காட்டித் தரவேண்டும். மனிதனைத் தெய்வ நிலைக்கு உயர்த்துவதே மதம் என்பதையும், ஆள்பலம் சேர்ப்பது மதமாகாது என்பதையும் அவர்களுக்குத் தெளிவாகக் காட்டித்தரவேண்டும். மக்களிடையே நல்ல முறையில் சமய உணர்வு ஓங்கித் தூய்மையும், தியாகமும் உடையவர்களாக மாறி நம் நாடு உலகத்திலேயே தலைசிறந்த நாடாக விளங்கவேண்டுமென்று ஒவ்வொரு இந்தியனும் ஆழ்ந்து எண்ணுவானாக.

செய்திகள்

திருப்பராய்த்துறை

ஏப்ரல் மாதம் 2-ஆம் தேதி வெள்ளிக்கிழமை அன்று ஸ்ரீ ராமநவமி ஆகும்; அன்று ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் பகல் பன்னிரண்டு மணிநேரம் அகண்ட நாம பஜனையும், மாலை 6-30 மணியிலிருந்து 7-30 மணி வரையில் ஐக்கிய வணக்கமும் செய்வார்கள்.

ஏப்ரல் மாதம் 18ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று மதுரை ஜில்லா காமயக்கவுண்டன் பட்டியில் **ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள்** ஒரு நாள் அந்தர்யோகம் நடாத்துவார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
இயற்றிய நூல்கள்

ஸ்ரீமத் பகவத்கீதை பிரசார விலை ரூ.	16-00
மஹாபாரதம் ,, ...	7-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள் ,, ...	6-00
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரீ ,, ...	5-50
இராமாயணம் ,, ...	5-00
தினசரி தியானம் ,, ...	4-00
கர்மயோக விளக்கம் ...	10-00
ஞானயோக விளக்கம் ...	8-00
ராஜயோக விளக்கம் ...	8-00
பரமஹம்சரின் பெருமை ...	6-00
விவேகானந்த விவரணம் ...	4-00
விவேகானந்த உபநிஷதம் ...	4-00
கடவுளின் வடிவங்கள் ...	4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I ...	3-50
அனுஷ்டான வேதாந்தம் ...	3-00
எதிர்கால இந்தியா ...	3-00
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம் ...	3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை ...	3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்) ...	2-50
ஸ்ரீ சாரதா தேவியார் சரிதம் ...	2-00
தாயுமானவர் இயற்றிய	
கருணாகரக் கடவுள் விரிவுரை ...	3-50
பரிபூரணானந்தம் ௸ ...	3-00
சின்மயானந்த குரு ௸ ...	3-00
ஆனந்தமானபரம் ௸ ...	3-00
சுகவாரி ௸ ...	3-00
மௌனகுரு வணக்கம் ௸ ...	3-00
எங்குநிறைகின்றபொருள் ௸ ...	2-50
பரசிவ வணக்கம் ௸ ...	1-00
பஜனைப் பாடல்கள் ...	2-50
கண்ணன் என்னும் கடவுள் ...	2-50
ஹரிச்சந்திரன் (நாடகம்) ...	2-00
விரதவீரர் பீஷ்மர் ௸ ...	1-50
விபீஷணன் சரணாகதி ௸ ...	1-50
பரமஹம்சர் பாமாலை ...	1-50
அமரநாத யாத்திரை ...	1-25
சந்நியாசி ...	1-25
இறைவணக்கம் ...	1-00
குழந்தைகளின் களிக்கூடம் ...	1-00
சகோதரி நிவேதிதை ...	1-00
இராவண தத்துவம் ...	1-00
வாலி மோட்சம் (நாடகம்) ...	1-00
தவப்புதல்வர்கள் ,, ...	1-00
ஏகலைவ்யனின் குருபக்தி ,, ...	1-00
தானவீரன் கர்ணன் ,, ...	1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம் ...	1-00
மார்க்கண்டேயன் (நாடகம்) ...	1-00
பிரஹ்லாதன் ,, ...	1-00
தபோபலன் ,, ...	1-00
இந்துமதமும் கிறிஸ்துவ மதமும் ரூ.	1-00
நோய்க்கு இடம் கொடேல் ...	1-00
ஆத்ம சக்தி ...	1-00
நன்மக்களைப் பெறுதல் ...	0-80
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா? ...	0-75
*ஆலய வழிபாடு ...	0-75
*சக்தி தத்துவம் ...	0-70
*சிவதத்துவம் ...	0-70
*மனிதனது நிஜசொருபம் ...	0-70
*ஈசன் எங்கும் நிறைந்துள்ளான் ...	0-60
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு ...	0-60
நன்னெறிகளும் அருள்வாக்குகளும் ...	0-60
*சூரிய நாராயணன் ...	0-50
*விஷ்ணு தத்துவம் ...	0-50
சைவன் யார்? ...	0-50
கர்மகாண்டம் எது? ஞானகாண்டம் எது?	0-50
*கணபதி ...	0-40
வர்ணாச்ரம தர்மம் ...	0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும் ...	0-30
கந்தர் அநுபூதி ...	0-25
The Bhagavad Gita (11th Imp.) ...	24.00
Sri Lalitambika Sahasranama Stotram ...	10-00
The Indian National Education ...	8-00
Ramakrishna Lives Vedanta ...	8-00
Facets of Brahman or The Hindu Gods ...	5-00
Daily Divine Digest (DELUXE) ...	4-50
Daily Divine Digest (Ordinary) ...	2-50
SRI KRISHNA-The Manifest Divinity (with plastic Cover) ...	6-00
Mahabharata (with plastic cover) ...	6-00
Ramayana (do) ...	4-00
The Man Making Message of Vivekananda (with plastic cover) ...	4-00
Sri Vishnu Sahasranama Stotram ...	4-00
The Bhagavad Gita (Small Size) ...	4-00
Siva Sahasranama Stotram ...	3-50
Bheeshma The Superman ...	3-50
Hinduism Hosts Christianity ...	3-00
Holy Bible—In the Light of Vedanta ...	1-50
Reminiscences of Master Mahashaya ...	1-50
*Introducing the Gita ...	1-50
The Garland of Paraaparam ...	1-50
The Student ...	1-25
TAT TVAM ASI *That Thou Art* IN Tayumana Swami ...	1-00
The Nursery School ...	1-00
The School ...	1-00
The Teacher ...	1-00

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக கீதைக்கு ரூ. 3-75ம் மஞ்ஜரீக்கு ரூ. 1-40ம் இராமாயணத்திற்கு ரூ. 1-30ம் தினசரி தியானத்திற்கு ரூ. 1-20ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 3-00 முதல் ரூ. 4-00 வரையும் சேர்த்து அனுப்புங்கள். * இப்புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

பாரத்வாஜ ஆச்ரமம்

சேரன்மகாதேவி, திருநெல்வேலி Dt.

1923ல் திரு. வ. வே. சு. ஐயர் அவர்கள் துவக்கிய இந்த ஆச்ரமம் 1970லிருந்து தபோவன நிர்வாகத்தில் இருக்கிறது. ஏப்ரல் மீ 2ஆம் தேதி திரு. ஐயர் அவர்களின் பிறந்தநாள் ஆகும். அவருடைய நூற்றுண்டு விழா 81-82ல் கொண்டாடப்பட்டு வருகிறது. ஏப்ரல் 2ஆம் தேதி நாள் முழுவதும் ஆச்ரமத்தில் நூற்றுண்டு பூர்த்திவிழா சிறப்பாகக் கொண்டாடப்பெறும். ஐயரது நூற்றுண்டு விழா ஞாபகார்த்தமாக ஒரு விசேஷமலர் வெளியிடுகிறோம். கல்லூரி மாணவர்களுக்குப் பயன்படும் முறையில் அவர் மொழி பெயர்த்துள்ள ஆங்கிலத் திருக்குறள் புத்தகம் வெளியிடுகிறோம். ஐயர் அவர்களின் கனவுகளில் ஒன்றுகிய குருகுலம் ஒன்றினை எளிய முறையில் சில மாணவர்களுடன் ஆரம்பிக்கிறோம். நல்வாழ்வு, தொழில், எண்ணும் எழுத்தும் கற்றல் இம்முறையில் இக்குருகுலம் செயல்படும். அன்று ஐயர் அவர்களைப் பற்றிச் சில அன்பர்கள் பேசுவார்கள், பகலில் ஒரு மணிநேரம் ஐக்கியவணக்கம் நிகழும். விருப்பமுள்ள அன்பர்கள் இந்நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளலாம்.

ஸ்ரீ ராமகிருஷ்ணமடம் - ராமேஸ்வரம்

ராமேஸ்வரம் க்ஷேத்திர யாத்திரை பண்ணும் நம் அன்பர்கள் வசதிக்காகவென்று திருவருள் சகாயத்தால் சென்ற ஆண்டு ஏப்ரல் மாதம் 12ம் தேதி ஸ்ரீ ராமநவமி யன்று இந்த ஆச்ரமம் துவக்கப்பெற்றது. அன்று முதல் இது ஒழுங்காக நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டில் ஏப்ரல் மாதம் 2ம் தேதி ஸ்ரீ ராமநவமி வருகிறது. ஆச்ரமத்தின் ஆண்டுவிழா அன்றைக்குக் கொண்டாடப்பெறும்.

காலை 9 மணி	ஸ்ரீ ராமநாத சுவாமி ஆலயத்திற்கு நாமஜபம் செய்துகொண்டு போய் தர்சனம் செய்தல்.
11 மணிமுதல் 12 மணிவரை	மடத்தில் ஸ்ரீராமநாம சங்கீர்த்தனமும், ஐக்கிய வணக்கமும்.
12 மணி	மகேஸ்வர பூஜை.

விரும்புகிற அன்பர்கள் இதில் வந்து கலந்துகொள்ளலாம்.

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.